

**09 ரஜப் தையிப் அர்துகான்**

**காஸிம்பாஷாவிலிருந்து சர்வதேசத்திற்கு**



**ஹிட்லர் இல்லாத இலங்கை** 03



**செய்யித் அலி ஸாஹிர் மௌலானா**

**"முரண்பாடுகளை தவிர்த்து உடன்பாட்டுடன் செயற்படுகின்ற போதே உண்மையான இணக்கப்பாட்டை அடைய முடியும்"** 07







# மீள்பார்வை

மීළ්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/93/NEWS/2018 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 397 • 06 ஜூலை 2018 வெள்ளிக்கிழமை • ஷவ்வால் 1439 • விலை 40.00







# அறிக்கைகளுக்கு நடப்பதென்ன?



நல்லாட்சி அரசில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட குழுவினரால் முன்வைக்கப்பட்ட பல அறிக்கைகள் எந்த உபயோகமுமின்றி இழுத்தடிக்கப்பட்டு வருவது புலனாகி வருகின்றன.

மாகாண எல்லை நிர்ணயத்துக்கான சிபாரிசுகளை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவினர் கடந்த பெப்ரவரி 13 ஆம் திகதி தமது அறிக்கையை உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் சமர்ப்பித்தனர். (பக். 15)

## வில்பத்து முஸ்லிம் தொல்பொருள் அழியும் நிலையில்

வில்பத்து சரணாலயத்துக்கு வெளியில் முஸ்லிம்கள் மீள்குடியேற்றப்படுவதற்கு எதிராக இனவாதிகள் மேற்கொண்டு வரும் பிரசாரங்களுக்கு மத்தியில் வில்பத்து சரணாலய பகுதிக்குள் குதிரைமலை முனையிலுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான தொல்பொருள்கள் அழிக்கப்படும் அபாயத்தை எதிர்நோக்கியிருப்பதான தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இந்தப் பகுதியில் இருக்கும் குதிரைச் சிலையும், முஸ்லிம் மகான் ஒருவரின் அடக்கஸ்தலமும் சிதிலமடைந்திருக்கும் நிலையில் (பக். 15)



## இலங்கையின் 40 வீதமான கட்டட ஒப்பந்தங்கள் சீனா வசம்

Ceylon Institute of Builders
CIOB
Institute for Building Professionals
Established 1961

இலங்கையின் 40 வீதத்துக்கும் அதிகமான கட்டட ஒப்பந்தங்களை சீனாவே கையகப்படுத்திருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ள CIOB (Ceylon Institute of Builders) நிறுவனம், இலங்கையில் செயற்படும் வெளிநாட்டு ஒப்பந்தக் காரர்கள் இலங்கை நிறுவனங்களை தமது பங்குதாரர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய அமைச்சரவைப் பத்திரமொன்றை முன்வைத்துள்ளது.

இன்னும் மூன்று வருடங்களில் இலங்கையின் மொத்த செயற்திட்டங்களில் 70 வீதத்தை கையகப்படுத்துவதற்கு சீனா தயாராகி வருகிறது. இது எமது உள்ளூர் நிறுவனங்களுக்கு பாதிப்பாக அமையும் என CIOB இன் தலைவர் ரோஹான் கருனாரத்ன தெரிவித்தார். (பக். 15)

## பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைத்தால் அடுத்த வருட ஆரம்பத்தில் தேர்தல்



பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி தேர்தல் தொடர்பான சட்டதிட்டங்களை வகுத்துத் தர முடிந்தால் வடமாகாணம் உட்பட்ட ஆறு மாகாண சபைகளதும் தேர்தலை அடுத்த வருடத்தின் முதல் வாரத்தில் நடத்த முடியும் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய மாத்தளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

சபாநாயகருடனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருடனும் நடத்திய சந்திப்புக்களை வைத்து, அனைத்துக் கட்சிகளதும் தலைவர்களுடன் கலந்தாலோசித்து சாலை வரைபடமொன்றை இம்மாத இறுதிக்குள் தயாரித்துத் தருவார்கள் என்று நம்புகிறோம். எல்லை நிர்ணயம் தொடர்பிலான சட்டத் திருத்தம் உட்பட்ட பிரச்சினைகளையும் செப்டம்பர் மாதத்திலோ (பக். 15)

## புதிதாக தொழில் முயற்சியில் ஈடுபடுவோரை ஊக்கப்படுத்துவதற்கென நிதி



இலங்கை ஏற்றுமதிச் சபைக்கூடாக அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ள சந்தைப் பிரவேசத்துக்கு உதவும் செயற்திட்டத்தின் கீழ், புதிதாக தொழில் முயற்சியில் ஈடுபடுவோரை ஊக்கப்படுத்தும் வகையில் மீள அறவிடப்படாத நிதியாக ஒரு மில்லியன் ரூபாவில் இருந்து ஐந்து மில்லியன் ரூபா வரை வழங்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவரும் பிரதான நிறைவேற்று அதிகாரியுமான இந்திரா மல்வத்த தெரிவித்தார். (பக். 15)

## இனங்களுக்கும் மதங்களுக்குமான இடைவெளி இலங்கையில் குறைக்கப்படவில்லை



கடந்த காலங்களில் நிலவிய மோசடி, முரண்பாடுகளைப் புறக்கணித்து, புனரமைப்பு, நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் விடயங்களில் 2015 தேர்தலில் மக்கள் வழங்கிய ஆசீர்வாதத்துடன் இலங்கை வெகுதூரம் முன்னேற்றத்தைக் காட்டியிருப்பதாக இலங்கைக்கும் மாலைதீவுக்குமென புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் தெரிவித்தார்.

இருந்தபோதிலும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதிலும், மறுசீரமைப்புப் பணிகளிலும் இதுவரை மந்தமான போக்கே காணப்படுவதாக சுட்டிக் காட்டிய அவர், இனங்களுக்கிடையிலும் மதங்களுக்கிடையிலும் இடையிலான (பக். 15)

## திகன சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய முறையில் இழப்பீடுகள் வழங்கப்படவில்லை



இனரீதியான வன்முறைகளின் போது கடமையில் ஈடுபடுத்தப்படும் கலகம் அடக்கும் பொலிஸ் படையில் மூவினத்தினரும் உள்வாங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் நாங்கள் முன்வைத்துள்ளோம். ஒரு சம்பவம் நடைபெற்ற உடனேயே பொலிசாரே அங்கு விரைய வேண்டி இருக்கிறது. பொலிஸாரினால் நிலைமையை கட்டாயப்படுத்த முடியாத போதே படையினர் வரவழைக்கப்படுகின்றனர். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட கடமைப்பட்டவர்கள் உடனடியாக செயல்பட்டிருந்தால் அம்பாறை, கண்டி இனக்கலவரங்களை கட்டுப்படுத்தியிருக்க முடியும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். (பக். 14)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா அரசாங்க அதிபராக ஐ.எம். ஹனீபா

- முஹம்மட் இன்பாஸ்



30 வருடங்களின் பின்பு முஸ்லிம்களில் ஒரு அரசாங்க அதிபர், நாட்டு வரலாற்றில் இரண்டாவது முஸ்லிம் அரசாங்க அதிபர்.

1988 இல் பதவி பெற்ற வடமாகாணத்தைச் சேர்ந்த மர்ஹூம் மக்பூலுக்கு பிறகு, தற்போது பதவி பெற்றுள்ள ஐ.எம். ஹனிபா சம்மாந்துறையைச் சேர்ந்தவராவார். முதலில் அவருக்கு வாழ்த்துக்கள். அடுத்து ஒரு படிப்பினை...

இவர் ஒரு ஆசிரியராக அரச பணியை ஆரம்பித்தவராவார்.இன்று அரசாங்க தொழிலொன்றை பெறுவோர், ஓய்வூதியம் வரை அதே நிலையில் இருக்கையில் இவரை போன்றோர் சிறந்த படிப்பினையாகும்.

நம் நாட்டில் நம் சமூகம் அதிகாரமிக்க பதவிகளுக்கு செல்வது குறைவடைந்தே வருவதும், அதிகாரம் என்றால் அரசியல் மட்டுமே என்று நினைப்பதும் உச்சப்பட்ச வேதனை.




சமூக வளைத்தலங்களில் அலசப்படுபவை

# ராஜபக்ஷ லீக்ஸ்

- ஸபார் அஹமட்

ராஜபக்ஷ லீக்ஸ் தான் இப்போதைய ட்ரெண்டே. அபத்தமாய் யோசிக்க ஒன்றுமில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷவுக்கு சீனா தனது ஆஸ்தான அல்சேஷன் சைனா ஹாபர் மூலம் 7.6 மில்லியன் டாலர்களை ஸ்டாண்டர்ட் சார்டர்ட் வங்கி ஊடாக காசோலையாக வழங்கி இருப்பதாக நிவ்யோர்க் டைம்ஸ் கட்டுரை வெளியிட்டு இருந்தது.

இதை மறுத்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பைத்தியம் என்று எகிறி விமர்சனம் செய்த ராஜபக்ஷ. தரப்பு இலங்கை ஊடகவியலாளர்களையும் மிரட்டியது. 'அப்பாவி இலங்கை ஊடகவியலாளர்களை விட்டுவிட்டு முடிந்தால் எங்களோடு மோ திப்பார்' என்று திரும்பவும் கெத்துக் காட்டி இருக்கிறது நியூயோர்க் டைம்ஸ்.

'மே பசில் ஒகட ஹொத உத்தரயக் தீபங் 'என்று தம்பி பசிலிடம் மகிந்த சொன்னால், பசிலின் டவல் சுற்றிய போட்டோ உடனோ அல்லது சிவப்பு சோல் போட்டு இருக்கும் போட்டோ உடனோ ராஜபக்ஷ வின் அறிக்கையை மறு நாள் முழுப் பக்கத்தில் மறுப்பாக வெளியிட நியோர்க் டைம்ஸ் ஒன்றும் .... பத்திரிகை அல்ல.

ஒரு செய்தியை எந்த ஆதாரமும் இல்லாமல் நியூயோர்க் டைம்ஸ் எழுதுவதில்லை. அது பன்சலைக்கு முன்னால் நெஞ்சுக்கு டமார் டமார் என்று அடித்து தேசப் பற்றை ஹோல் ஸேல் வியாபாரம் ஆக்கிய ராஜபக்சவுக்கே தெரியும்.

இந்த விவகாரம் சர்வதேச ஊடகங் களில் தலைப்புச் செய்தியாக இடம் பிடித்து இருக்கும் நிலையில் 'இங்கே விசாரணை நடத்தப்படும்' என்று சிரிசேனா அரசு அறிவித்து இருப்பது தான் கிறிஸ்து பிறந்து இந்த 2018 ஆண்டு களில் நாம் கேள்விப்படும் கொடூர நகைச்சுவை.

ராஜபக்ஷ கேட்டதை எல்லாம் வாரிக் கொடுத்த சீனா தனது வர்த்தக ராணுவ எதிரியான இந்தியாவை ஒட்ட நறுக்கத்தான் ஹம்பாந்தோட்டை இல் துறைமுகம் என்ற சாத்தியமே இல்லாத ஒரு கன்செப்ட்டை ராஜபக்ஷவின் மூளையில் திணித்தது. சீனா போட்ட கணக்கெல்லாம் சரியாக அமைய கட்டமுடியாத கடன் சுமைக்குத் தள்ளப்பட்ட இலங்கை கடைசியில் துறைமுகத்தை சீனா விடமே தாரைவார்த்தும் விட்டது.

ராஜபக்ஷ தான் இதற்கெல்லாம் ஆதார சுழி. சீனாவிடம் ராஜபக்ஷ வாங்கிக் குவித்த கடன்களுக்கு கிடைத்த புரோக்கர் பீஸாக இந்த 7.6 மில்லியன் டாலர்களாய் இருக்கக் கூடும். ராஜபக்ஷ என்பவர் சோனக சமூகத்தில் இருக்கும் பணம் படைத்த உஷார் மடைய ஹாஜியார்கள் மாதிரி, சுற்றிவர இருக்கும் காக்காய் கூட்டமே இந்த உஷார் மடைய ஹாஜியார்களை இயக்கும். ஹாஜியாரும் படு உல்லாச குஜால் பேர்வழியாய் இருப்பார்.

ராஜபக்ஷவைப் புரிந்து கொள்ள இந்த நிவ்யோர்க் டைம்ஸ் விவகாரம் எல்லாம் தேவை இல்லை. ராஜபக்ஷ நிருவாகத்தின் அடி முட்டாள்தனத்திற்கு மிகச் சிறந்த உதாரணம் 2013-2014 களில் மாலை 4:30 இற்கு மத்தளையில் இருந்து சென்னைக்கோ திருச்சிக்கோ ஸ்ரீலங்கனின் ஒரு விமானம் இருந்தது.

பூகோள அறிவோ வர்த்தக அறிவோ இல்லாத எவனோ ஒருத்தன் தான் இந்த ப்ளைட் செட்யூல் ஐடியா கொடுத்து இருக்க வேண்டும்.கட்டுநாயக்கவில் லோடாகி வழிந்து கொண்டு விமானம் சும்மா கடமைக்கு மத்தளை வரும்.

அநேகமான நாட்களில் விமானத்தில் ஏற ஒரு பயணி இல்லை. ஒரு விமானம் டேக் ஆப் ஆகும் போதும் லேண்ட் ஆகும் போதும் அதிகளவு எரிபொருள் விரயமாகும் நிலையில் கட்டுநாயக்கவில் இருந்து மத்தளைக்கு ஸ்ரீலங்கன் விமானங்கள் எந்தப் பொருளாதார லாபமும் இன்றி கோல் பேஸில் நாம் பட்டம் ஏற்றி இறக்குவது போல ஏறி இறங்கின.

இன்று ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் பெட்ரோலியம் கார்பரேஷனுக்கு மட்டும் 14 பில்லியன் கடன். 'இனிமேலும் எரிபொருள் தரமாட்டேன்' என்று பெட்ரோலியம் ஸ்ரீலங்கனை மிரட்டுகிறது. இதற்கெல்லாம் புள்ளி வைத்துக்



கோலம் போட்ட ராஜபக்ஷ 'அபே ஹகமுது ருவனி 'என்று எங்காவது உளறிக் கொண்டு இருக்கும்.

பாருங்கள். மத்தலையில் எந்தப் பயணியும் ஏறாமல் ராஜாவின் ஆணைப்படி விரயமான உங்கள் வரிப்பணத்தின் பெறுமதிகளை.. இப்படி நான்கைந்து ஸ்ரீலங்கன் விமானங்கள் வெவ்வேறு Destination களுக்கு தலை கால் புரியாமல் அந்நாட்களில் ஓடின. குஜால் ராஜா நாட்டை இப்படித்தான் ஆண்டார்.நல்ல காலம் இதெல்லாம் ஞாபகத்தில் இருக்கிறது.

CARTOON OF THE WEEK



# வட மாகாண சம்பவங்கள் இலங்கையையும் அந்த பட்டியலில் சேர்க்கும்?

- இம்ரான் ஹுஸைன்



உலகில் பெண்களுக்குப் பாதுகாப்பே இல்லாத நாடாக இந்தியா அறிவிக்கப்பட்டுள்ளது. தினமும் 100 கற்பழிப்புகள் நிகழ்வதாக தரவுகள் சொல்கிறது.

அந்த நாடுகள் பட்டியலில் விரைவில் இலங்கையும் சேருமோ என்கிற பயம் தான் யாழ் மண்ணில் ஒரு பிஞ்சு நாசமாக்கப்பட்ட செய்தி கேட்டதும் ஏற்பட்டது. வடக்கில் போதை பாவனை அசுர வேகத்தில் அதிகரித்துள்ளதும் யுத் தத்தின் பின் சமூக ஒழுங்குகள் வலுவற்றுப் போயுள்ளமையும் தான் காரணம் என்று நினைக்கிறேன். வேறு காரணிகளும் இருக்குமா என்று தெரியவில்லை.

மறவன்புலவு சச்சிதானந்தன்கள் உண்மையில் வீதியிறங்க வேண்டியது போதைக்கு எதிராகவும் கலாச்சார சீரழிவுகளுக்கு எதிராகவும்தான்.

இல்லையேல், மாட்டு அரசியல் நடக்கும் இந்தியாவின் நிலை தான் நமக்கும் உண்டாகும்.

# அநுராதபுரம் ஸாஹிரா விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் இடைநிறுத்தம்: காட்டிக்கொடுப்பில் பலியாகும் முஸ்லிம் கல்வி

மீள்பார்வை இதழ் 395 இல் வெளியான குறித்த கட்டுரையில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்கள் களத்தில் இருந்து பெறப்பட்ட தகவல்களை வைத்து கட்டுரையாளரால் தொகுக்கப்பட்டவையாகும். சமூகத்தின் கல்வி நிலை மீது கொண்ட அக்கறை காரணமாகவே இந்த ஆக்கம் பிரசுரத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதேயன்றி யாரையும் புண்படுத்தும் நோக்கிலல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

குறித்த தகவல்களைப் பெறுவதில் கட்டுரையாளர் தவறாக வழிநடத்தப்பட்டிருக்கவும் வாய்ப்பிருப்பதனால், இந்த ஆக்கத்தில் உண்மைக்கு மாறான விடயங்கள் ஏதும் இருப்பின் தயவு செய்து ஆசிரியர் பீடத்துக்கு அறிவிக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

கட்டுரையில் குறிப்பிட்டிருந்த விடயங்களால் எந்தத் தரப்பேனும் பாதிக்கப்பட்டிருந்தால் அதற்காக வருந்துவதோடு மன்னிப்பும் கேட்டுக் கொள்கிறோம்.

-ஆசிரியர்-

# டிஜிற்றல் மயமாகும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபணத்தின் தமிழ் தேசிய சேவையும் முஸ்லிம் சேவையும்





நேயர்களுக்கு தரமான சேவையை வழங்கும் மற்றுமொரு முயற்சியாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் தேசிய சேவை டிஜிற்றல் மயப்படுத்தப்பட்ட கலையகத்தில் இருந்து சேவையை இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சித்தி எம். பாறுக் , பணிப்பாளர் நாயகம் ஏரானந்த ஹெற்றியாராச்சி, செயற்பாட்டுப் பணிப்பாளர் எம்.ஜே.ஆர். டேவிட் , தமிழ் சேவை பணிப்பாளர் ஆர். கணபதிப்பிள்ளை, ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கை வானொலியின் தமிழ் தேசிய சேவை, எப்.எம். 102.1 , 102.3 ஆகிய பண்பலை வரிசைகளில் ஒலிபரப்பாகின்றன. இந்தச் சேவையில் தமிழ் வர்த்தக சேவை முஸ்லிம் சேவை, கல்விச் சேவை என்பன ஒலிபரப்பாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்து, பௌத்த, இஸ்லாமிய கிறிஸ்த்துவ, சமய நிகழ்ச்சிகளும் தமிழ்த் தேசிய சேவையில் ஒலிபரப்பாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் தகவல் மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சிகளும் சமகால நிகழ்ச்சிகளுடன் மருத்துவம், சட்டம், இலக்கியம், மகளிர் மற்றும் சிறுவர், விவசாயம், கிராமிய, கலை, கலாச்சார பண்பாட்டு விழுமியங்களை பிரதிபலிக்கும் நிகழ்ச்சியகளும் இடம்பெறுகின்றன. அத்துடன் கர்நாடக இசைக் கச்சேரிகளும் இலங்கைக்கே உரித்தான மெல்லிசைப் பாடல்களும் பாராளுமன்ற சமய கலை கலாச்சார நிகழ்ச்சிகள் நேர்முக வர்ணனை நேரடி அஞ்சல் போன்றவையும் தமிழ் வர்த்தக சேவையில் சினிமாப் பாடல்களுடன் கூடிய பொழுது போக்கு நிகழ்ச்சிகளும் முஸ்லிம் சமய நிகழ்ச்சிகளுடன் முஸ்லிம் கலை கலாச்சார விழுமியங்களை பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகளும் இடம்பெற்று வருவதாக தமிழ்ச் சேவை ஆர். கணபதிப்பிள்ளை இங்கு தெரிவித்தார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபணத்தின் சேவைகள் பல்வேறு வகைகளிலும் பொலிவூட்டு வருவதுடன் சுமார் 20 கோடி ரூபா செலவில் உட்கட்டமைப்பு வசதிகளும் நவீனமயப்படுத்தப் பட்டு [illegible]

# 'மனந் திறப்போம்'

சுதந்திரம் என்றால், 'நினைத்ததைச் செய்வது, ஜாலியாக இருப்பது' இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான கருத்துக்களை வைத்திருப்போம். உண்மையில் எது சுதந்திரம்?

நாம் எப்போதுமே சுதந்திரம் என்றால் ''நான் என்ன நினைக்கி றேனோ அதை செய்வது'' என்று தான் நினைத்துக் கொள்கி றோம். உங்களுடைய நிர்பந்தங்களுக்கு நீங்கள் சுதந்திரம் என்று பெயர் கொடுத்துள்ளீர்கள், இல்லையா? உண்மையிலிருந்து விலகுகிறீர்கள் என்றால் உங்களுக்கு எதிராக நீங்கள் வேலை செய்கிறீர்கள் என்று அர்த்தம்.

நீங்கள் செய்ய நினைப்பதையெல்லாம் செய்வது பயங்கர மான ஒரு நிர்பந்தம்தான். நிர்பந்தங்களை நீங்கள் சுதந்திரம் என்று அழைக்க முடியுமா?

உங்களுக்கு யாரோ ஒருவரை பிடிக்கவில்லை என்றால், அந்த மனிதர் அற்புதமான ஒன்றை செய்தாலும் உங்களால் அதனை பார்க்க இயலாது. நீங்கள் ஒருவரை விரும்பினால் அவர் அற்ப மான செயலை செய்தாலுமே உங்களால் பார்க்க முடியாது. யாரோ ஒருவரை நீங்கள் விரும்பினால் நீங்கள் மிகைப்படுத்து வீர்கள், ஒருவரை நீங்கள் வெறுத்தாலும் மிகைப்படுத்துவீர்கள். எனவே மிகைப்படுத்துதல் என்றால் விழிப்புணர்வுடனோ அல்லது விழிப்புணர்வில்லாமலோ உண்மையிலிருந்து நீங்கள் விலகுகிறீர்கள் என்று அர்த்தம்.

உண்மையிலிருந்து விலகுகிறீர்கள் என்றால் உங்களுக்கு எதிராக நீங்கள் வேலை செய்கிறீர்கள் என்று அர்த்தம். தனக்கு எதிராக வேலை செய்யும் ஒருவருக்கு எதிரியே தேவையில்லை. இதைத்தான் சுய உதவி என்கிறார்களோ என்னவோ?

இவ்வாறு இன்று சமூகங்களுக்கு மத்தியில் ஏற்படுகின்ற கருத்து முரண்பாடான விடயங்களை மனந் திறந்து உள்ளதை உள்ளபடி சமூகத்திற்கு எடுத்துச் சொல்லும் ஒரு களத்தை மீள்பார்வை ஆரம்பித்துள்ளது. இக்களத்தில் தங்களது கருத்துக்களை வெளிப் படுத்தும் அனைத்து சுதந்திரம் உங்களுக்கு உள்ளது. அவ்வாறு, யாராவது எந்த சமூகத்தவராவது இன்னுமொரு சமூகத்தவர்களால் அல்லது அரசியல் செயற்பாட்டினால் பாதிக்கப் பட்டால் எமக்கு எழுதி அனுப்பலாம். நாம் உள்ளதை உள்ளபடி பிரசுரிப்போம்.

இப்படிக்கு ஆசிரியர் 'மனந்திறப்போம்'
இல. 49, ஸ்ரீ மஹிந்த தர்ம மாவத்தை கொழும்பு - 14,
Email: meelparvai@gmail.com


# நண்பர்கள்

நான் புது நண்பர்களை அறிமுகமாகி நட்புக் கொள்ள ஆவலாக இருக்கிறேன்.

MOHAMED IRFAN - 0779674910


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• பியாஸ் முஹம்மத்

# ஹிட்லர் இல்லாத இலங்கை

"நாங்கள் அவர்களுடைய அநியாயங்களுக்குத் துணை போகின்றவர்களாக இல்லாமலிருந்தால், மொத்த சமுதாயத் தையும் குட்டிச் சுவராக்குவதற்கு யாராலும் முடியாது"
எட்வர்ட் மோரோ - அமெரிக்க ஊடகவியலாளர்





எல்லாம் வல்ல சக்தியொன்று தம்மை ஆள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு பொதுவானதொரு மனப்பாங்காக எல்லோரிடமும் இருக்கிறது. இப்படி ஒரு சக்தி இருப்பதை ஏற்றுக் கொள்ளாத உள்ளங்கள் தம்மிலிருந்து ஒருவர் இந்தச் சக்தியாக உருவெடுக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது ஒன்றும் விசித்திரமானதல்ல. ஆனாலும் இப்படி மகா சக்தியாக உருவெடுத்தவர்கள் எவருமே உலகுக்கு நல்லதைச் செய்துவிட்டுச் செல்லவில்லை என்பது தான் இன்று வரையுள்ள வரலாறு.

இலங்கையின் பிரதான மதமான பௌத்த மதத்தின் மதகுருமாரும் இந்த உலக நியதியை விளங்கியிருக்கிறார்களா என்பது தற்சமயம் கேள்விக்குறியாகியுள்ளது. கோதாபய ராஜபக்ஷவின் 69 ஆவது பிறந்த தின வைபவத்தின் போது, அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்கர் வென்டருவே உபாலி ஹிமி அவரை ஆசீர்வதித்த வார்த்தைகள் இன்று பேசுபொருளாக மாறியிருக்கின்றன. நாட்டுக்கு ஹிட்லருடைய ஆட்சி தான் தேவையென்றால் நீங்கள் ஹிட்லராகி நாட்டைக் கட்டியெழுப்புங்கள் என்று அவர் போதித்த விடயங்கள் இன்று பல்வேறு கோணங்களில் அலசப்பட்டு வருகின்றன.

இவரது கருத்துக்கள் ஜனாதிபதி, பிரதமர் உட்பட பலராலும் தத்தமது கோணங்களில் கையாளப்பட்டு வரும் நிலையில், தமது கருத்துக் குறித்த விளக்கமொன்றை வென்டருவே உபாலி ஹிமி வெளியிட்டிருந்தார். ஆட்சி செய்யும் போது தெளிவான, உறுதியான கொள்கை இருக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தவே ஹிட்லரைப் போன்று என்ற வார்த்தையைப் பிரயோகித்தேனேயன்றி ஹிட்லர் மக்களைக் கொன்றொழித்ததைப் போன்று மிலேச்சத்தனமான ஆட்சியொன்றை நடத்த வேண்டும் என்பதல்ல என்று அவர் தனது போதனைக்கு வியாக்கியானம் சொல்லியிருக்கிறார்.

அனுநாயக்க ஹிமி அவர்கள் சொல்வது போல தெளிவான உறுதியான கொள்கை இருக்கின்ற ஆட்சியாளர் பற்றி அவர் சொல்ல விளைந்திருந்தால் சிங்கப்பூரின் லீ குவான் யூ வையோ, மலேசியாவின் மஹதிர் முஹம்மதையோ, துருக்கியின் அர்துகானையோ குறிப்பிட்டிருக்க முடியும். இந்த ஆட்சிகளை விட ஹிட்லருடைய ஆட்சியில் மக்களைக் கொன்றொழித்த மிலேச்சத்தனத்தைத் தவிர வேறெதனையும் வடிகட்டி எடுப்பதற்கில்லை. அரசாட்சியில் அவர் செய்த சாதனையாக ஒன்றாக இருந்த ஜேர்மனியை அவரது அந்திம காலத்தில் கிழக்காகவும் மேற்காகவும் பிரித்தமையைத் தான் கொள்ள முடியும்.

ஹிட்லருடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் கூட தலைமைகளுக்கு முன்னுதாரணமாக எடுத்துச் சொல்லுமளவுக்கு நல்ல விடயங்கள் இருக்கவில்லை. ஹிட்லருடைய தந்தையின் தாய், யூதரொருவருடைய வீட்டில் பணி புரிந்த பொழுது கர்ப்பமாகிறாள். ஹிட்லருடைய தந்தைக்கு தனது தந்தை யார் என்பது தெரியாது. இந்த வெறுப்பை அவர் தனது பிள்ளையான ஹிட்லர் மீது காட்டுகிறார். அவரை பல விதத்திலும் துன்புறுத்துகிறார். காலப் போக்கில் இந்தச் சித்திரவதைகளுக்காக அழாமல் தனது மனதைக் கல்லாக்கிக் கொள்ளும் ஹிட்லர், இதற்காக யூத இனத்தையே பழி வாங்குகிறார். இந்த வெறியின் காரணமாக 60 இலட்சம் மக்களை அவர் கொன்றொழித்ததாக வரலாறு பதிந்து வைத்திருக்கிறது. இந்த வகையில்தான் வெறுக்கின்ற சமூகத்தை அடியோடு கருவறுக்கின்ற விடயத்தைத் தான் உபாலி ஹிமி ஹிட்லர் முன்மாதிரி மூலமாக கோதாபயவுக்கு ஏவினாரா என்பது புரியவில்லை.

அப்படித்தான் ஏவியிருந்தாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கும் ஒன்றுமில்லை. அகிம்சையைப் போதிக்கும் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை அளிக்கும் இந்த நாட்டில் ஆட்சி செய்தவர்கள் அனைவருமே தாம் ஆட்சிக்கு வருவதற்கும் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்குமாகக் கொலை செய்வதை தமது வழிமுறையாகவே எடுத்து வந்திருந்திருக்கிறார்கள். இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் 194 மன்னர்கள் இலங்கையை ஆட்சி செய்திருக்கிறார்கள். அதில் 175 பேர் சிங்கள அரசர்கள். 19 பேர் தமிழ் அரசர்கள். இவர்களில் 60 பேர் தாம் ஆட்சிக்கு வருவதற்காக பட்டத்து இளவரசனைக் கொன்று விட்டு ஆட்சிக்கு வந்தவர்கள். 53 பேர் தமது சகோதரனைக் கொன்று விட்டு ஆட்சியைக் கைப்பற்றியவர்கள். தந்தையைக் கொன்று விட்டு 5 பேர் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். அனுலா தேவி தனது கணவனைக் கொன்று விட்டு ஆட்சிக்கு வந்தவள். (சரத் டி அல்விஸ்)

சுதந்திரத்துக்குப் பின்னர் இந்தக் கொலைகள் ஹிட்லர் பாணியிலான மனிதப் படுகொலைகளின் சொரூபத்தை எடுத்திருக்கின்றது. அதுவும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை அமுலுக்கு வந்த பிறகு நாட்டில் முன்சொன்ன ஹிட்லரின் ஆட்சிதான் நடந்து வருகிறது. முதலாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவிக்கு வந்து ஐந்தாண்டுகளில் சிறுபான்மைத் தமிழர்களைக் கொன்று குவித்தார். அடுத்து வந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி பிரேமதாச 60,000க்கும் மேற்பட்ட ஜேவிபியினரைக் கொன்றார். சந்திரிகாவும் மஹிந்தவும் ஜேஆர் துவக்கிய சிறுபான்மைக்கெதிரான படுகொலையை கச்சிதமாகத் தொடர்ந்தவர்கள் என்ற வகையில் இந்தப் பட்டியலில் இணைகின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷ காலத்திய இறுதிப் போர்ப் படுகொலைகள் அவரதும் பாதுகாப்புச் செயலாளர் என்ற வகையில் அவரது சகோதரர் கோதாபயவினதும் பெயர் சர்வதேச அளவில் சொல்லப்படுமளவுக்குக் காரணமாக இருந்திருக்கின்றன. ஆட்சிக்கு வருவதற்கு எத்தனித்த ஜேவிபியினர் ஒரு கொலைக்களத்தையே நடத்திவிட்டுச் சென்றார்கள். வடக்கில் ஆட்சி செய்யத் துடித்த பிரபாகரன் வகைதொகையின்றி மக்களைக் கொலை செய்து மடிந்து போனான்.

இந்த வகையில் சுதந்திரத்துக்குப் பின்னர் ஆட்சிக்கு வர முயற்சித்தவர்களும், நிறைவேற்றதிகாரம் பொருந்தி ஆட்சி செய்தவர்களும் எல்லாம் ஹிட்லர்களாகத்தான் இருந்திருக்கிறார்கள். சந்திரிக்காவுக்கு இந்தப் பெயரை முழுமையாகத் தட்டிக் கொள்ள முடியாமலும், மைத்திரிபாலவுக்கு இதனை நோக்கி நகர முடியாலும் இருப்பதற்கு அரசியல் யாப்பில் நிறைவேற்றதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியாத பலவீனத்துக்கு இவர்கள் ஆளாகியிருப்பது காரணமேயன்றி, இலங்கையில் ஹிட்லர் யுகம் முடிவடைந்தது என்பதல்ல.

இலங்கையின் அரசியலமைப்பில் நிறைவேற்றதிகாரத்தை பயன்படுத்துவதற்கு ஜனாதிபதி தனக்கென அமைச்சரவையைக் கொண்டிருப்பது (பக்.14)

• நேசன்

# பௌத்தத் தலைவரைத் தேடும் பிக்கு அரசியல்









பௌத்த நாயகயா எனும் பௌத்தத் தலைவரைத் தேடும் படலம் மீண்டும் ஆரம்பித்திருக்கிறது. மீண்டும் என்று சொல்லுவதன் ஊடாக அது ஏற்கனவே இருந்த ஒன்று என்பது புலனாகியிருக்கலாம். ஆனாலும் அது அரை நூற்றாண்டு காலத்துக்கு முன்னிருந்தே தோற்றம் பெற்றமை சிலவேளை புலனாகாததாக விருக்கலாம்.

அநகாரிக தர்மபால தேசியவாதத்தையும் (ஜாதிகவாதய) இனவாதத்தையும் (ஜாதிவாதய) பிணைத்து விட்டதால் தேசியத்தைக் கட்டியெழுப்புதல் என்னும் போதெல்லாம் சிங்கள இனத்தை எழுச்சி பெறச் செய்தல் என்பதும் கிளறப்பட்டுக் கொண்டே வந்தன. இந்த இன எழுச்சிக்காக மத எழுச்சி ஒரு தூண்டற் காரணியாகப் பயன்பட்டு வந்தது. இதனால் தான் காலனித்துவ ஆட்சிக்குப் பின்னர் தேசியவாத அரசாங்கமொன்றைக் கட்டியெழுப்பும் வாய்ப்பு இருந்த போதிலும் பௌத்தத் தலைமை தொடர்பான கதையாடல்கள் முடுக்கிவிடப்பட்டன.

இந்த வகையில் பௌத்தத் தலைமையை உருவாக்கும் முதலாவது முயற்சி சுதந்திரத்துக்குப் பின்னர் 1950 களில் நடந்திருக்கிறது. பௌத்த தரவுகள் பரிசீலனைக் கமிஷனுடன் தொடர்புபட்ட பேராசிரியர் குணபால மலலசேகர, மெத்தானந்த போன்ற பொதுமக்களும், பத்தேகம விமலவன்ச போன்ற பௌத்த பிக்குகளும் இணைந்து பௌத்த ஆட்சியாளர் ஒருவரை உருவாக்குவதில் முன்னின்றனர். கத்தோலிக்க, கிறிஸ்தவ சக்திகளிடமிருந்து சிங்கள பௌத்தர்களைப் பாதுகாப்பதுவும், டீ.எஸ். சேனாநாயக்கவுக்குப் பதிலாக தேசிய பௌத்தர் ஒருவரை தலைவராக்குவதும் அவர்களது நோக்கமாக இருந்தது.

இந்தத் தேடலின் முதல் பௌத்த ஆட்சியாளராக எஸ்.டப்.ஆர்.டீ. பண்டாரநாயக்க உருவெடுத்தார். சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்து சிங்கள பௌத்தர்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்தார். பரிதாபகரமாக பௌத்த மதகுரு ஒருவரினாலேயே அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அடுத்ததாக ஜே.ஆர். ஜயவர்தன தார்மீக சமுதாயம் என்ற தொனிப்பொருளினை முன்வைத்து தன்னை ஒரு பௌத்தத் தலைவராகக் காட்ட முனைந்தார். இதற்காக சிறுபான்மைத் தமிழர்கள் மீது வன்முறையைப் பிரயோகிப்பதற்கான சந்தர்ப்பத்தையும் அவர் பெரும்பான்மைச் சிங்களவர்க்கு ஏற்படுத்திக் கொடுத்தார். இருந்தாலும் இவரது தார்மீக சமுதாயத்துக்கு மக்கள் மத்தியில் செல்வாக்குக் கிட்டவில்லை. அதனால் அவரும் பௌத்த தலைவர் என்ற எதிர்பார்ப்பை நிறைவு செய்யாது போனார்.

பௌத்தத் தலைவருக்கான தேடலில் மூன்றாவதாக மஹிந்த ராஜபக்ஷ தோற்றம் பெற்றார். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வரை அவர் பௌத்த தலைவராக தன்னைக் காட்டிக் கொள்ளவில்லை. ஆனாலும் யுத்தம் முடிந்த கையுடன் அவருக்கு பௌத்தத் தலைமைப் பட்டத்தை வழங்கி சிங்கள சமூகம் அழகுபார்த்தது. ஜனாதிபதிப் பதவியில் அவர் தோற்கடிக்கப்பட்டாலும் பௌத்தத் தலைவராக தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் வகையில் தேர்தலில் தோற்ற பின்னரும் விகாரை தரிசனங்களை தவறாது பேணி வந்தார். இவரையும் மிஞ்சும் வகையில் தற்பொழுது கோதாபய ராஜபக்ஷ தன்னைச் சிறந்த பௌத்தத் தலைவராக வெளிப்படுத்தி வருகிறார்.

அரசியல் வாழ்க்கையில் இருந்து ஒதுங்கி துறவறம் பூண்ட கௌதம புத்தருடைய போதனைகளில் இருந்து ஒரு பௌத்த தலைவர் தோன்றலாம். ஆனால் ஒரு பௌத்த ஆட்சியாளர் இங்கு தோன்றுவது சாத்தியமற்றது என்பதைத் தான் இந்த வரலாற்று ஓட்டம் எடுத்துக் காட்டுகிறது. இதனால் தான் அகிம்சாவாத பௌத்த சிந்தனைக்கு மாற்றமாக அடக்குமுறை ஹிட்லர் ஒருவரை மகா சங்கத்தினர் பௌத்த தலைவராக கற்பனை செய்கின்றார்கள். இதனூடாக அவர்கள் நாடுவது, பௌத்த தர்மத்தை நிலைநாட்டுவதையல்ல. பௌத்த பிக்குகளுக்கான உயர்ந்த வரப்பிரசாதங்களையும், எந்தக் குற்றம் செய்தாலும் அவற்றைக் குற்றமாகப் பார்க்காத, அவற்றுக்குத் தண்டனை வழங்காத சிறப்புரிமைகளையுமே அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். முஸ்லிம்களுக்கு மட்டும் விஷேடமான சட்டமொன்று ஏன் என்ற கேள்வியை எழுப்புவதனூடாக பௌத்த பிக்குகளுக்கான விஷேட சட்டமொன்று நாட்டில் இருக்க வேண்டும் என்பதை நியாயப்படுத்த முனைகிறார்கள்.

அரசியல் தொடர்பில் பிக்குகளிடம் நான்கு வகையான நிலைப்பாடுகள் இருப்பதாக ஜயதேவ உயங்கொட குறிப்பிடுகிறார். அரசுடன் பிணைந்திருக்கும் பிக்குகள் முதல் வகை. இலங்கையின் அரசிலும் அதனுடைய ஆதிபத்தியத்திலும் தமக்குப் பூரண உரிமை உண்டு என இவர்கள் நினைக்கிறார்கள். நாட்டுக்கான நிகழ்ச்சி நிரலை தாமே தீர்மானிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில்
[illegible]
வகையினர் அரசியல் கட்சிகளுடன் இணைந்து அந்த அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சி நிரலுடன் உடன்பட்டுச் செல்பவர்கள். மூன்றாவது வகையினர் இடதுசாரி நிலைப்பாட்டில் உள்ள பிக்குகள். நான்காவது வகையினர் எந்த ஆரவாரமுமில்லாமல் மக்களோடு மக்களாக வாழ்கின்ற பிக்குகள்.

இந்த நிலைப்பாடுகளின் அடிப்படையில் பார்க்கின்ற பொழுது, பௌத்த ஆட்சியாளர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும் என்பதில் பௌத்த பிக்குகளிடமே ஒருமித்த நிலைப்பாடு இல்லாதிருப்பது தெளிவாகிறது. ஆகவே பௌத்த ஆட்சியாளர் ஒருவருடைய தேவை மொத்த பௌத்த பிக்குகளினதுமோ அல்லது மொத்த சிங்கள பௌத்தர்களினதுமோ கோரிக்கையல்ல. ஜயதேவ உயங்கொட குறிப்பிடுகின்ற இந்த நான்கு வகையான பிரிவினருக்கு மேலதிகமாக, புதிய வலதுசாரிச் சிந்தனையை ஏற்ற பிக்குமார் பிரிவொன்றைப் பற்றி தயான் ஜயதிலக குறிப்பிடுகின்றார்.

இவர்கள் மஹிந்த, கோதாவைச் சுற்றி இருப்பவர்கள். அண்மைக் காலமாக இவர்கள் தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தி வருகிறார்கள். புதிய அரசியல் யாப்பொன்றை தயாரிப்பது தொடர்பில் இவர்கள் தமது எதிர்ப்பினைக் காட்டினார்கள். இது மஹிந்த தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியின் நிலைப்பாடாக இருந்தாலும் பிக்குமாரை உசுப்பேற்றியே அவர்கள் இந்தப் பிரச்சாரத்தை முன்னெடுத்தார்கள். அடுத்ததாக பிக்குமாரை மேட்டுக்குடிகளாக (Supra Citizens) மேம்படுத்தும் நோக்கிலான ஞானசார தேரரின் சிறப்புரிமைகளுக்கான போராட்டம். இறுதியாக புதிய வலதுசாரிச் சிந்தனையுடைய கோத்தாபயவை தலைவராக்குவதற்கான முயற்சிகள்.

தயான் ஜயதிலக்க குறிப்பிடுகின்ற நிலைப்பாடு தொடர்பிலேயே பௌத்த பிக்குகள் தற்போது குரலெழுப்பி வருகின்றார்கள். புதிய வலதுசாரி சிந்தனையைப் பின்பற்றுகின்ற கோத்தாபயவை தமது புதிய பௌத்த ஆட்சியாளனாக உருமாற்றுவதற்கே புதிய வலதுசாரி பௌத்த போதனை நாட்டில் தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. இதற்குச் சாதகமான வகையில் தான் ஒரு ஏகாதிபத்திய வாதியால் தான் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்ற கருத்து இவர்களால் பரவலாக்கப்படுகிறது. இதனால் தான் நிறைவேற்றதிகார முறையை இல்லாதொழிப்பதற்கு எதிராக இந்த பிக்குகள் பிரச்சாரத்தை முன்னெடுக்கின்றனர். இதற்கு மைத்திரி-ரணிலின் ஆட்டம் காணும் அரசு உரமூட்டுகின்றது.

இந்த வகையில் பௌத்த பிக்குகள் தமக்குத் தெரியாத ஓர் அரசியலில் மூக்கை நுழைத்து பௌத்த சாசனத்துக்கும் சமூகத்துக்கும் நாட்டுக்கும் அழிவையே கொண்டுவர விளைவதாகக் குறிப்பிடும் ஜயதேவ உயங்கொட, இதற்கான இரண்டு தீர்வுகளை முன்வைக்கின்றார். முதலாவது, தமக்கு முழுமையாகத் தெரியாத விடயங்களில் பிக்குகள் மூக்கை நுழைக்காமல் இருப்பது. இரண்டாவது, பிக்குகளுக்கான பாடத்திட்டத்தில் அரசியல், அரசியலமைப்புச் சட்டங்கள் போன்றவற்றையும் இணைத்து அவர்களுக்கு அறிவூட்டுவது.

எனவே பௌத்த ஆட்சியாளர் என்ற கோஷம் வெறுமனே அரசியல்ரீதியானது. இது ஒட்டுமொத்த மகாசங்கத்தினரதும் சிங்கள பௌத்த மக்களினதும் அபிலாஷைகள் அல்ல. ஆனாலும் பதவி மோகத்தில் எதிர்பார்க்கப்படும் பௌத்த தலைவனாக தன்னை இனம் காட்டிக் கொள்ள விளைபவர்கள், இதற்கென எதனையும் பௌத்தத்தின் பெயரால் செய்யக் கூடிய வாய்ப்புக்களும் இருக்கின்றன என்பதும் மனங்கொள்ளப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL
49, Sri Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# பொறுப்பான ஊடகவியலாளர்கள் தொடர்பில் சமூகத்துக்கும் பொறுப்பிருக்கிறது

ஊடகங்கள் ஆட்சி நடத்தும் இன்றைய சூழலில் மக்களை தவறாக வழிநடத்தும் வகையில் செயற்படும் ஊடகங்கள் பெரும் ஆரவாரத்துடன் கொடி கட்டிப் பறக்கும் நிலை இருப்பது கவலையைத் தருகிறது. அரசியல்வாதிகளுக்கும் ஊழல் பேர்வழிகளுக்கும் கூஜா தூக்கும் வக்காலத்து ஊடகவியல் தான் இன்று பல ஊடகவியலாளர்கள் பின்பற்றும் வழிமுறையாக உள்ளது. தெரிந்து கொண்டே மக்களை தவறாக வழிநடத்துகின்ற இந்த வகையான ஊடகவியலாளர்களினால் நாடே கொள்ளையடிக்கப்படுகிறது.

இனவாதத்தை கருவியாகப் பயன்படுத்தும் பல ஊடகவியலாளர்களின் ஆதிக்கம், இன்று நாட்டை இனரீதியான கூறுகளாகப் பிரித்து வைத்திருக்கிறது. பொறுப்புணர்வு, பக்கச்சார்பின்மை, உண்மையை வெளிப்படுத்தல் போன்ற ஊடகவியலின் பண்பாடுகளை பணத்துக்காக விற்றுப் பிழைக்கின்ற ஊடகவியலாளர்களுக்கு மத்தியில், சமூகப் பொறுப்புணர்வை யூட்டி நாட்டிலே நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பாடுபடுகின்ற உண்மையான ஊடகவியலாளர்கள் அரிதாகவே கிடைக்கப் பெறுகிறார்கள்.

அப்படியான அரியதொரு ஊடகவியலாளராகத் தான் சாமர லக்ஷான் குமார காணப்பட்டார். ரஸ பத்திரிகையை ஸ்தாபித்தது முதல் இனநல்லிணக்கத்துக்கான ஆக்கபூர்வமான வெளிப்பாடுகளை தனது பத்திரிகையூடாக வெளிக்கொணர்வதில் சாமர அரும்பணியாற்றினார். இனவாதத்தை தமது மூலதனமாகப் பாவித்துச் செயற்படும் பெரும்பாலான பத்திரிகைகளுக்கு மத்தியில் இனவாதத்துக்கெதிரான பிரச்சாரமொன்றை முன்னெடுப்பதற்கு அவர் தனது பத்திரிகையைப் பயன்படுத்தினார். இந்த மனிதநேய ஊடகப் பணி, ஏரிக்கரை வெளியீடான சிலுமின பத்திரிகையிலும் ஆசிரியராகப் பணிபுரியும் அளவுக்கு அவரை உயர்த்தியது.

தமது சுய முன்னேற்றங்களுக்காக அரசியல்வாதிகளதும் இனவாதிகளதும் வால்பிடிக்கும் ஊடகவியலாளர்களுக்கு முன்னிலையில் நேர்மையாக, தூய்மையாக சமூக நலனை நோக்காகக் கொண்டு உழைப்பதன் மூலமும் உயர்ந்து நிற்க முடியும் என்பதை அவர் தனது குறுகிய வாழ்நாளில் எடுத்துக் காட்டினார். இந்த நிலையில் அவர் வழியில் நின்று உழைக்கின்ற ஊடகவியலாளர் அணியொன்றைத் தயார்படுத்துவது அவருக்குச் செய்கின்ற காணிக்கையாக அமைய முடியும்.

தமது சுயலாபங்களே மேலோங்க வேண்டுமென்ற உணர்வில் செயற்படுபவர்களுக்கு மத்தியில் நேர்மையான ஊடகப் பணி புரிவது என்பது சிரம சாத்தியமானது என்பதை டெய்லி சிலோன் இணையத்தளத்தின் செய்தி ஆசிரியர் ஆசிக் நசார்தீன் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் எடுத்துக் காட்டுகிறது.

குரலற்ற சமூகத்தின் குரலாகச் செயற்படுகின்ற ஊடகங்கள் மீது வன்முறையைப் பிரயோகிப்பது கண்டிக்கத்தக்கதாகும். மக்கள் தமது பொறுப்பினைச் சரிவரச் செய்வதனூடாக ஊடகங்கள் பொறுப்புடன் செயற்படுவதற்கு உதவ வேண்டும். அடாவடித்தனங்கள், வன்முறைகளூடாக ஊடகங்களை அடக்க முனைகின்ற போது தான் ஊடகவியலாளர்கள் தமது நடுநிலைமையை இழக்கின்றனர். சாமர லக்ஷான் குமார போன்ற பொறுப்பான ஊடகவியலாளர்களை உருவாக்கும் பொறுப்பு ஒவ்வொரு சமூகத்துக்கும் இருக்கிறது.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்,

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

Press Complaints Commission of Sri Lanka
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
011-5353635
011-5335500
www.pccsl.lk

# கோத்தாவை அழைத்தல்

• மொஹமட் பாதுஷா

அடோல்ப் ஹிட்லரின் மனதுக்குள், எந்தளவுக்கு அன்பும் கருணையும் காதலும் இருந்தது என்று தெரியாது. ஆனால், உலக சரித்திரக் குறிப்புகளின்படி, ஒரு சர்வாதிகாரியாகவே ஹிட்லர் பதிவு செய்யப்பட்டிருக்கின்றார். ஈவா பிரவுண் அல்லது ஹிட்லரின் வாழ்க்கையில் வந்த மற்றைய இரு பெண்களும், எந்தளவுக்கு ஹிட்லரைக் காதலித்தார்கள் என்பது நமக்குத் தெரியாது. ஆனால், ஹிட்லரை வேறு ஒரு கோணத்தில், நல்ல ஆட்சியாளராகப் பார்க்கின்றவர்களும், அவரது போக்கை வரவேற்கின்ற சிலரும், நம்மோடு இருக்கின்றார்கள் என்பதைச் சில சம்பவங்கள் எடுத்துக் கூறுகின்றன.

மகாத்மா காந்தி என்கின்ற மிகப் பெரும் தேசபிதாவை, இத்தனை தசாப் தங்களாகக் கொண்டாடி வந்த இந்திய துணைக் கண்டம், அவரைச் சுட்டுக் கொன்ற கோட்சேயை, ஒரு வன்முறையாளனாகவே சித்திரித்திருந்தது.

ஆட்சியாளர்களின் பட்டியல் நீளமானது. இதில் ஒவ்வொருவருக்கும் ஒரு காரணம் இருந்தது. அதில் நியாயங்களும் இல்லாமலில்லை.

ஆனால், கோடிக்கணக்கானதும் இலட்சக் கணக்கானதுமான மக்களின் படுகொலைகள் முன்னே, அந்தக் காரணங்கள் எல்லாம் நியாயப்படுத்தப்படக் கூடியவை அல்ல. எனவே, உலகின் 99 சதவீத மக்கள், இவர்களையெல்லாம் மோசமான ஆட்சியாளர்களாகவே பதிவுசெய்து வைத்திருக்கின்றனர்.

அதிலும் குறிப்பாக, சர்வாதிகாரம் பற்றிக் குறிப்பிட்டதும் உடன் ஞாபகத்துக்கு வருகின்ற ஒருவராக, ஹிட்லர் இருக்கின்றார். இவ்வாறான, ஒரு பிழையான முன்னுதாரணத்தையே வெண்டருவே உபாலி தேரர், கோத்தாபய ராஜபக்ஷவிடம் முன்மொழிந்திருக்கின்றார்.

இப்போது தேரர், ''அப்படியில்லை, இப்படித்தான் சொன்னேன்'' என்று கூறினாலும், கோட்டாபய பின்னர், ''என்னிடம் தனிப்பட்ட ரீதியில் கூறப்பட்ட ஆலோசனையை, ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சர் போன்றோர், ஏன் இத்தனை ஆர்வத்துடன் கையாள்கின்றனர்' என்று கூறியிருக்கின்றார். எனவே, அஸ்கிரிய பீடத்தின் முக்கிய தேரர் ஒருவர் கூறிய அறிவுரை என்பது, ஒருவருக்கு மட்டுமானதல்ல; முழு நாடும் சம்பந்தப்பட்டது; அது முழு நாட்டுக்குமானது என்பதை மறுக்க முடியாது.

ஆனால், சில வருடங்களுக்கு முன்னர், கோட்சேயின் பக்கம் கூறப்பட்ட காரணங்களில் நியாயம் இருப்பதாக, ஒரு தரப்பினர் சொன்னார்கள். அத்தோடு, கோட்சேக்குச் சிலை வைக்கும் முயற்சிகளும் இடம்பெற்றன. காலவோட்டத்தில் ஒரு தியாகி, தேசவிரோதி போலவும், ஒரு வன்முறையாளன் வீரனைப் போலவும், பார்க்கப்பட மாட்டார்கள் என்பதற்கு எவ்வித உத்தரவாதங்களும் இல்லை.

இதனை ஆணித்தரமாக உணர்த்துவது போல, இன்னுமொரு சம்பவம் அண்மையில் இலங்கையில் இடம்பெற்றிருக்கின்றது. அஸ்கிரிய பீடத்தின் துணை மகா நாயக்கர் அனுநாயக்கர் வெண்டருவே உபாலி தேரர், அண்மையில் வெளியிட்டுள்ள கருத்துகளே, இவ்வாறான உணர்வையும் வேறுபல சர்ச்சைகளையும் தோற்றுவித்திருக்கின்றன.

''நாட்டைக் கட்டியெழுப்ப இராணுவ ஆட்சிதான் அவசியம் என்றால், அதைக் கோத்தாபய ராஜபக்ஷ செய்ய வேண்டும். அதன் மூலம் ஹிட்லரைப் போல, நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்' என்று வெண்டருவே உபாலி தேரர் அறிவுரை கூறியிருக்கின்றார்.

ஹிட்லரைப் போல மாறி, தனது அரசியல் சாணக்கியத்தை கோத்தாபய நிரூபிக்க வேண்டும் என்று அவர் கூறியதாகவும் சொல்லப்படுகின்றது. இக்கருத்து, அரசியல் அரங்கில் பெரும் சர்ச்சையை உண்டுபண்ணியிருக்கின்றது. பிரதமர் உள்ளடங்கலாக, ஆளுந் தரப்பிலுள்ள பல அரசியல்வாதிகள், இக்கருத்தை விமர்சித்திருக்கின்றார்கள்.

இதையடுத்து, சம்பந்தப்பட்ட தேரர் மறுப்பறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். 'ஹிட்லரைப் போல உயிர்களைக் கொன்று, ஆட்சி நடத்துமாறு நான் கூறவில்லை; எனது நீளமான கருத்துரை சுருக்கப்பட்டு, ஒரு விடயம் மட்டும் எடுத்தாளப்படுகின்றது' என்று வெண்டருவே உபாலி தேரர் வருத்தம் வெளியிட்டிருக்கின்றார்.

உண்மையிலேயே, வெண்டருவே உபாலி தேரர் சொல்லாத ஒரு விடயத்தை, ஊடகங்கள் வெளியிட்டிருந்தால் அது முழுத் தவறாகும். ஆனால், சிங்கள ஊடகங்கள், ஒரு தேரர் விடயத்தில் அவ்வாறு நடந்து கொள்ளவும் மாட்டா. எனவே, முன்பு வெளியான செய்தி மற்றும் தேரரின் பிந்திய விளக்கம் ஆகியவற்றில் இருந்து, சில விடயங்கள் புலனாகின்றன.

1. இந்த ஆட்சியில், பௌத்த உயர்பீடங்கள் குறிப்பாக, அஸ்கிரிய பீடம் திருப்தி அடையவில்லை.

2. கோத்தாபய ராஜபக்ஷ போன்ற ஒருவர், அடுத்த ஆட்சியாளராக வர வேண்டும் என்ற விருப்பமும் எண்ணமும் வெண்டருவே உபாலி தேரர் போன்றோருக்கு இருக்கின்றது.

3. ஹிட்லரைப் போல ஆட்சி செய்வதை, ஒரு பெரிய தவறாக, அஸ்கிரிய பீடத்தின் இரண்டாம் நிலைத் தலைமை பார்க்கவில்லை.

சுருங்கக் கூறின், உலக சரித்திரத்தில் இருந்தும், இலங்கையின் அனுபவங்களில் இருந்தும், பௌத்த பீடங்களின் முக்கிய பொறுப்புகளில் இருக்கின்ற சிலர், இன்னும் பாடம் கற்றுக் கொள்ளவில்லை என்பதையே, வெண்டருவே உபாலி தேரரின் கருத்து, 'ஒரு பானை சோற்றுக்கு, ஒரு சோறு பதம்' ஆக எடுத்துக் காட்டுகின்றது. அடோல்ப் ஹிட்லர், சுமார் 20 மில்லியன் மக்களை மிலேச்சத்தனமாகக் கொன்றார்; லியோபோல்ட்டும் 20 [illegible] லின், இடி அமீன் எனக் கொடுங்கோல்



சாந்தியையும் சமாதானத்தையும் உயிர்கள் மீதான காருண்யத்தையும் போதிக்கின்ற பௌத்த மதத்தின் முக்கிய தேரர்கள், உலக மக்களால் சர்வாதிகாரியாக நோக்கப்படுகின்ற ஹிட்லரைப் போல் அல்லது இராணுவ ஆட்சியாளரைப் போல், இந்நாட்டை ஆட்சி செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பதும், அப்படியானவர்களை முன்னுதாரணமாகக் கூறுவதும் தவறாகும்.

இலங்கையில் இனங்களுக்கு இடையிலான முரண்பாடு துளிர்விடத் தொடங்கி, ஆறு தசாப்தங்கள் கடந்து விட்டன. இதில், மூன்று தசாப்தங்கள் ஆயுத மோதலில் கழிந்து விட்டன.

இந்த வடுக்களைக் கடந்த 10 வருடகால நல்லிணக்க முயற்சியாலும் சீர்செய்ய முடியாது போயிருக்கின்றது. அத்துடன், இலங்கையில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தது, மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி என்பது பொய்யல்ல. அதில் ராஜபக்ஷ குடும்பத்தின் பங்களிப்பு, மிக முக்கியமானது என்பதையும் மறுக்க முடியாது.

யுத்தத்தால் முப்பது வருடங்கள் ஏற்பட்ட உயிரிழப்புகளை, கஷ்டங்களைப் பார்க்கின்ற போது, சிங்கள மக்களுக்கும் முஸ்லிம்களுக்கும், யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டமை மன ஆறுதல் தருகின்ற விடயமே. ஒரு சில தமிழர்களும் இந்த நிலைப்பாட்டில் இருக்கலாம். ஆனால், யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட விதத்தில், இன்னுமொரு பக்கம் இருக்கின்றது.

அதாவது, யுத்த முடிவு என்பது, தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை முறியடித்தது என்ற வலியை விடவும், கடைசி யுத்தத்தில் அநியாயமாகப் பல ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் பலிகொள்ளப்பட்டு விட்டார்கள் என்ற தமிழ் மக்களின் கவலை வலியது.

இங்குதான் யுத்தக் குற்றங்கள் பற்றிய குற்றச்சாட்டுகளும் மேலெழுகின்றன. [illegible] யுத்தத்தை ராஜபக்ஷாக்கள் மட்டுமே களத்தில் நின்று வெற்றி கொள்ள வில்லை. என்றாலும், அவர்களே இன்று இந்த வெற்றிக்கு உரிமை கொண்டாடுகின்றனர். இதற்குப் பங்களிப்புச் செய்த பலர், இருட்டடிப்புச் செய்யப்பட்டு விட்டதாகக் குற்றச்சாட்டும் சுமத்தப்படுகிறது.

இப்படியான நிலையில், யார் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார்களோ, அவர்கள் மீதே, அப்பாவித் தமிழர்களைக் கொன்றொழித்ததற்கான குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன. இது நியாயமில்லை என்று யாரும் கூற முடியாது.

இப்படிப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று, சர்வதேசத்தைத் தமிழர்கள் கோரி வருகின்ற நிலையிலேயே, அஸ்கிரிய பீடத்தின் தேரர், கோத்தாபய ராஜபக்ஷ போன்ற ஒருவர், ஆட்சிக்கு வருவதற்கான மறைமுக ஆசீர்வாதத்தை வழங்கியிருப்பதாகத் தெரிகின்றது. யுத்தம் முடிவடைந்தமை, முஸ்லிம்களில் கணிசமானோருக்கு மகிழ்ச்சியை அல்லது நிம்மதியைக் கொண்டு வந்தாலும், அதற்குப் பின்னரான இனவாதத்தின் எழுச்சியென்பது, அதைவிடப் பயங்கரமாக இருந்தது; இருக்கின்றது.

தம்புள்ளை பள்ளிவாசலில் தொடங்கிய பிரச்சினை விரிவடைந்து, அளுத்கமை, பேருவளையில் கோரத் தாண்டவத்தை ஆடியது.

இந்தச் சந்தர்ப்பத்தில், இதற்கெதிராகப் பௌத்த தேரர்கள் சிலர் குரல்கொடுத்த போதும், அஸ்கிரிய பீடம் போன்ற முக்கிய பௌத்த பீடங்கள், முஸ்லிம்களின் அழிவுக்காகக் கண்டனம் கூட வெளியிட்டதாக ஞாபகமில்லை.

இந்த இனவாத சக்திகளுக்கு, ராஜபக்ஷ ஆட்சியும் குறிப்பாக, கோத்தாபய ராஜபக்ஷ முண்டுகொடுத்துக் கொண்டிருக்கின்றார் என்றே முஸ்லிம்கள் நம்பினர். இதனால், முஸ்லிம்களும் ராஜபக்ஷாக்களின் ஆட்சியில் விருப்பமற்றவர்களாகவே இருந்து, ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினர்.

இப்போது, நல்லாட்சி என்று சொல்லப்படுகின்ற இன்றைய ஆட்சியிலும் அம்பாறை, திகன மற்றும் கண்டி போன்ற இடங்களில் திட்டமிட்ட இனவன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இந்தத் தருணங்களில், அஸ்கிரிய பீடத்தின் வெண்டருவே உபாலி தேரர் போன்ற முக்கிய தேரர்கள், இனவாத நடவடிக்கைகளுக்கு எதிரான கண்டனத்தை வெளியிட்டு, இனவாதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு அக்கறை காட்டவில்லை என்பது, முஸ்லிம்களுக்குப் பெரும் கவலையான விடயமாகும்.

இவ்வாறு வடக்கில், சாதாரண தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்ட சந்தர்ப்பத்திலும், முஸ்லிம்களின் உயிரும் சொத்துகளும் தீக்கிரையாக்கப்பட்ட சந்தர்ப்பத்திலும் நாட்டுக்காக முன்னிற்காத சில தேரர்கள், இவ்வாறான நடவடிக்கைகளால் நாடு வீழ்ச்சியடையும் என்பதை உரக்கச் சொல்லாத பௌத்த பீடங்கள், இன்று, கடும்போக்காளர்களை அடுத்த ஆட்சியாளராக்க முனைவதும், அதற்காக அபிவிருத்தி என்று பெரிதாக எதையுமே செய்திராத ஹிட்லரை முன்னுதாரணமாகக் கூறுவதும், பெரும் அச்சத்துடனான சந்தேகங்களை எழுப்பியிருக்கின்றது.

சிறுபான்மை மக்களாலும் மதிக்கப்படுகின்ற, அமரர் மாதுளுவாவே சோபித தேரர் போன்ற பல முற்போக்கு பிக்குகள், பௌத்த செயற்பாட்டாளர்கள் முன்னின்றே, 2015 இல் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வந்தனர். ஆனால், இந்த ஆட்சியும் பெரிதாக பெரும்பான்மை மக்களினதோ சிறுபான்மைச் சமூகங்களினதோ திருப்தியைச் சம்பாதிக்கவில்லை என்பது வெள்ளிடைமலை. அத்துடன், அரசியல் களமும், இன்றைய ஆட்சியாளர்கள் இன்னுமொருமுறை ஆட்சிக்கு வருவதற்கு, சவால்மிக்கதாக மாறிக் கொண்டிருக்கின்றது.

தமிழர்கள், இந்த ஆட்சி முடிவுக்கு வருவதற்கு முன்னரேயே, எப்படியாவது சிறந்த தீர்வைப் பெற்றுவிட வேண்டும் என்பதில், முனைப்புடன் இருக்கின்றனர்.

இரண்டு ஆட்சியிலும், இனவாதம் கோலோச்சுவதால், 'கிட்டத்தட்ட எல்லாம் ஒன்றுதான்' என்ற நிலைக்கு, முஸ்லிம்கள் வந்திருப்பதாகச் சொல்ல முடியும். குறிப்பாக, மஹிந்த, கோத்தாபய போன்றோர், முஸ்லிம்களை நோக்கி நேசக் கரங்களை நீட்டத் தொடங்கியுள்ளனர்.

இப்பின்னணியில், மாகாண சபைத் தேர்தலை நடாத்தினாலும், நடாத்தாவிட்டாலும் இன்னும் ஆகக் கூடியது 495 நாள்களில், நல்லாட்சியின் ஆயுள்காலம் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் வாழும் தேசத்தைப் புரிந்துகொள்ளல்



றவூப் ஸெய்ன்

முஸ்லிம்கள் தவிர்க்க முடியாத சில காரணங்களால் இஸ்லாமிய சட்டங்கள் நடைமுறையில் இல்லாத ஒரு நாட்டில் வாழ நேரிடலாம். உயர் கல்விக்காகவோ தொழில் நிமித்தமோ அந்நிய நாடொன்றில் குடியேறி வாழ நிர்ப்பந்திக்கப்படலாம். மேலும் வரலாற்றுக் காரணங்களால் இன்னொரு மதத்தினர் அல்லது இனத்தினரின் நாட்டை தனது தாய் நாடாகக் கொள்ளலாம்.

இத்தகைய முஸ்லிம்கள் தாம் தாய் நாடாகக் கொள்ளும் அந்நாட்டை இஸ்லாமியப் பிரச்சாரத்திற்கான (தஃவா) களமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அதற்கான மூல நிபந்தனையாக அவனது சொந்த வாழ்வை இஸ்லாமிய அடிப்படையில் ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். இத்தகைய ஒழுங்குபடுத்தலையே சிறுபான்மைக்கான இஸ்லாமிய வாழ்வொழுங்கு (பிக்ஹுல் லில் அகல்லியாத்) எனப்படுகின்றது.

நவீன இஸ்லாமிய அறிஞரும் அல்குர்ஆன் விளக்கவுரையாளருமான இமாம் ரஷீத் ரிழா இதுகுறித்து பின்வருமாறு எழுதுகிறார்.

''ஒரு சிறுபான்மை நாட்டில் வாழும் முஸ்லிம்கள் வெறுமனே பொருளாதார உழைப்போடும் உலகத் தேவைகளை நிறைவேற்றுவதோடும் தமது வாழ்வை சுருக்கிக் கொள்வார்களாயின் அது பாவமானது'' மாறாக அந்த நாட்டை தாருல் தஃவாவாகக் கருத வேண்டும். இவ்வாறு அதனை தாருல் தஃவாவாக ஏற்றுக் கொள்வதே அங்கு வாழ்வதற்கான அடிப்படை நியாயம் என அவர் வலியுறுத்துகிறார். ரஷீத் ரிழா போன்று இக்கருத்தைப் பல்வேறு இஸ்லாமிய அறிஞர்களும் விளக்கியுள்ளனர். தாருல் தஃவா என்பது பிக்ஹுல் அகல்லியாத் தொடர்பாக விவாதிக்கப்படும்போது பயன்படுத்தப்படும் புதியதோர் கலைச் சொல்லாக மாறியுள்ளது. தாரிக் ரமழான் போன்ற நவீன சிந்தனையாளர்கள் இதற்குப் பகரமாக தாருல் ஷஹாதா எனும் சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

லெபனானின் இஸ்லாமிய அறிஞரும் சிந்தனையாளரும் சிறுபான்மை முஸ்லிம்களுக்கான இஸ்லாமிய சட்டம் குறித்து ஆழ்ந்த நிபுணத்துவம் கொண்டவருமான ஷெய்க் பைஸல் மௌலவி (ரஹ்) அவர்கள் சிறுபான்மை முஸ்லிம்கள் வாழும் நாட்டை தாருல் தஃவா என்பதற்கான நியாயங்களை மிகத் தெளிவாக முன்வைக்கிறார். அவரது சிந்தனையை பின்வருமாறு தொகுத்துத் தரலாம்.

''உலகை தாருல் ஹர்ப் (யுத்த தொடர்புள்ள நாடு), தாருல் இஸ்லாம் (இஸ்லாமியப் பூமி) என்று வகைப்படுத்துவது இஸ்லா மிய சட்டத்தில் மிகுந்த கருத்து வேறுபாட்டுக்கு உட்பட்ட பகுதிகளில் ஒன்றாகும். இக்குறிப்பிட்ட நாடுகளை வரைவிலக்கணப்படுத்துவதிலும் அவற்றுக்கான நிபந்தனைகளை (ஷுரூத்) விதிப்பதிலும் ஒப்பந்தத் தொடர்புள்ள நாடு (தாருல் அஹ்த்) என இன்னொரு பிரிவை அவற்றோடு இணைப்பதிலும் இவ்வாறான கருத்து வேறுபாடுகள் பாரியளவில் காணப்படுகின்றன.


நாம் வாழும் இன்றைய காலத்தில் உலகை இவ்வாறு பிரித்து நோக்குவது பொருத்தமற்றதென்றே எனக்குத் தோன்றுகின்றது. அனேகமான இஸ்லாமிய நாடுகளுக்கு இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் இட்ட ஷர்த்துகள் பொருந்துவதாக இல்லை. குறிப்பாக இஸ்லாமிய சட்டம் நடைமுறைப்படுத்தல் என்ற ஷரத்து தற்போது இஸ்லாமிய நாடுகளுக்கு எவ்வகையிலும் பொருந்துவதாக இல்லை. அவ்வாறு இப்பிரிவின் அடிப்படையில் தாருல் ஹர்ப் எனக் கருதப்படும் நாடுகளுக்கும் அதற்கான ஷரத்துகள் பொருந்துவதாக இல்லை.

ஏனெனில், அந்நாடுகளில் முஸ்லிம்கள் பாதுகாப்பாக வாழ்கின்றனர். மார்க்கத்தை விட்டு அவர்களைத் தூரப்படுத்துவதற்கான நிர்ப்பந்த சூழ்நிலைகளும் அங்கு காணப்படவில்லை. எனவே, முஸ்லிம்கள் வாழும் அனைத்து நாடுகளும் அவற்றில் இஸ்லாமிய சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படா விடினும் அது தாருல் இஸ்லாமாகவே (இஸ்லாமிய நாடாகவே) கருதப்பட வேண்டும்.

தாருல் ஹர்ப் என்பது உண்மையில் முஸ்லிம்களோடு யுத்தத்தில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் அல்லாத நாடுகளுக்கே பொருந்தும். இதற்கு பலஸ்தீனை ஆக்கிரமித்துள்ள இஸ்ரேலை உதாரணமாகக் கொள்ளலாம். நவீன காலத்தில் தாருல் ஹர்பிற்கு சிறந்த உதாரணம் இஸ்ரேல். இவ்விரு பிரிவுகளிலும் அடங்காத அனைத்து நாடுகளும் தாருல் அஹ்த் (ஒப்பந்த நாடுகள்) என்றே கருதப்பட வேண்டும். ஏனெனில், இஸ்லாமிய நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்குமிடையே ஐ.நா. ஒழுங்கின் கீழ் ஒப்பந்த உறவு காணப்படுகின்றது. உலக நாடுகளைப் பொறுத்தவரையில் இதுவே எமது அபிப்பிராயம்.

இது மட்டுமன்றி, ஒப்பந்த நாடுகளை பிரச்சாரத்திற்கான நாடாக (தாருல் தஃவா) எனக் கொள்ளல் வேண்டும். இப்புதிய கலைச் சொல் பிரயோகம் உலகின் அனைத்து நாடுகளுக்கும் அவற்றி லிருக்கும் முஸ்லிம்களிடையே ஒப்பந்தம் காணப்படாவிட்டாலும் பொருந்தும். தாருல் தஃவா முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாதவர்களோடு உறவாடுவதைப் பொறுத்தவரையில் மக்கா காலப்பிரிவில் காணப்பட்ட ஒழுங்கை அதற்குரிய அடிப்படையாகக் கொள்ளலாம்.

எனவே, முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் நாட்டை தாருல் தஃவா அல்லது தாருல் ஷஹாதா என நாம் கொள்ளும்போது அங்கு இருவகையான போராட்டங்கள் அவசியம் முன்னெடுக்கப்பட வேண்டியிருக்கும். அதற்குரிய மூலோபாயங்கள் ஷரீஆவின் அடிப்படையில் தெளிவாக வகுக்கப்பட வேண்டும். ஏனெனில், பெரும்பான்மை அந்நியர்களுக்கு மத்தியில் வாழும் சிறுபான்மை முஸ்லிம்கள் அந்நாட்டின் மதங்கள், அரசியல் கட்சிகள், அரசாங்கம் ஏனைய இனங்கள், கலாச்சாரங்கள் என்பவற்றைப் பொறுத்தவரை எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும் என்பது மிகத் தெளிவாக வகுக்கப்பட வேண்டும்.



இந்நிலைமை குறித்து இந்திய துணைக் கண்டத்தின் பேரறிஞரும் இஸ்லாமிய சிந்தனையாளருமான ஷெய்க் அல்லாமா அபுல் ஹஸன் அலி நத்வி (ரஹ்) முன்வைக்கும் விளக்கம் அவதானிக்கத்தக்கது. இவ்வாறான நாடுகளில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்கள் தமது வாழ்வொழுங்கை நெறிப்படுத்துவதில் எத்தகைய முன்னிலைப்படுத்தலை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து அவர் பின்வருமாறு விளக்குகிறார்.

அபுல் ஹஸன் அலி நத்வி (ரஹ்) ஒரு சிறுபான்மை நாட்டில் பிறந்து வாழ்ந்தவர். அதன் சமூக, அரசியல், கலாசார சூழமைவு களை நன்கு புரிந்தவர். மட்டுமன்றி இஸ்லாமிய கலைகளிலும் முதிர்ந்தவர். எனவே, அவரது விளக்கம் இலங்கை போன்ற முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் நாட்டிற்கும் பொருந்தி வருவதைக் காணலாம்.

''கண்ணியமிக்க வாழ்வை மீண்டும் பெற, நபி அவர்களின் பிரதிநிதிகளுக்குப் பொருத்தமான உயர்ந்த வாழ்வை அடைய உலகின் சீர்திருத்தத்திற்குப் பொறுப்பானவர்கள் என்ற வகையில் வாழ்வதற்கு அவர்களுக்குள்ள ஒரே வழி நாட்டில் காணப்படும் ''பொருத்தமான தலைமைத்துவமின்மை'' எனும் இடைவெளியை நிரப்புவதே.

இறைவனுக்குப் பயந்த, மனிதம் என்ற பெறுமானத்தை மதிக்கும் தலைமைத்துவம் ஒன்றில்லை. எனவே தான் எமது சகோதரர்கள் சிலர் மனிதம் என்ற இந்தத் தூதை சுமக்க முற்பட வேண்டும். அந்த இடைவெளியை நிரப்புவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். மக்கள் மத்தியில் மனிதத்தை மதியுங்கள் என்ற உணர்வைத் திட்டமிட்டு வளர்க்க வேண்டும்.


''மனிதம் என்ற பெறுமானத்தை இழிவுபடுத்தி அழித்துவிடும் நிலை இன்று பாரியளவில் நடந்த வண்ணம் உள்ளது. இத்தகைய 'தலைமைத்துவம் இல்லாமை' என்ற இடைவெளியை நிரப்புவதே முஸ்லிம்கள் முன்னாலுள்ள [illegible] நின்று மனிதனை அவன் மனிதன் என்ற ஒரே காரணத்திற்காக மதிக்க வேண்டும் என்ற கருத்தை மக்கள் மத்தியில் இன்று பரப்ப வேண்டியுள்ளது. இந்நிலை தோன்றுமானால் முஸ்லிம்கள் அந்நாட்டு மக்களின் அன்பையும், கண்ணியத்தையும் பெறுவார்கள். தலைமைத்துவம் அவர்களுக்குக் கிடைப்பதும் சாத்தியமாகிவிடும்.

மனிதன் எவ்வாறு சீர்கெட்டுப் போனாலும் உள நோய்களாலும் ஒழுக்கச் சீர்கேடுகளாலும் பாதிக்கப்பட்டாலும் அவன் நல்லதையே மதிப்பான். மனிதன் எவ்வளவு கடுமையான இனவெறி கொண்டவனாக இருந்தாலும் அவனால் மனத் தூய்மையோடு நிறைவேற்றப்படும் செயலை, தியாகத்தை மதிக்கும் இயல்பினை அவன் கொண்டுள்ளான். எனவே, முஸ்லிம்கள் இறைவனின் அருளால் தமது சொந்த நலன்களையும் தாம் வாழும் சமூகத்தின் நலன்களையும் தியாகம் செய்து மனித இனத்தின் நலன்களை மேலாக மதிக்கும் போது மக்கள் மனங்களில் வெறுமையாக இருக்கும் இடத்தை அவர்கள் பிடித்துக் கொள்ள அல்லாஹ் அவர்களுக்கு உதவுவான். மக்கள் அவர்களை மதித்து நடப்பார்கள்.''

உண்மையில் அபுல் ஹஸனின் இக்கருத்து முஸ்லிம்கள் தமது அடிப்படை உரிமைகளுக்காகப் போராடுதல் என்பதற்கு மிகத் தூரமாக உள்ளது போன்றே தோன்றுகிறது. எனினும், அபுல் ஹஸன் அலி தனது நிலைப்பாட்டையும் அபிப்பிராயங்களையும் மேலும் விளக்குவதைக் கவனிப்போம்.

கொள்கைப் பற்றுமிக்க மக்களுக்கு கொள்கையை நிலைநாட்டுவதே அடிப்படையான இலட்சியம். அதில் பிடிவாதமாக இருப்பவர்களுக்கு இக்கருத்தை ஜீரணிப்பது முடியாத தொன்றல்ல. நாட்டின் பொதுப் பிரச்சினைகளில் ஒரு முஸ்லிம் கலந்து கொள்ளும்போது, பொதுவான சீர்கேடுகளைச் சீர்திருத்த உழைக்கும்போது அனைத்து மக்களோடும் அவன் கலக்கின்றான், உறவாடுகின்றான். நேர்மையோடும் தூய்மையோடும் அவன் பாடுபடுகின்ற போது அவர்களது மனதில் இடம்பிடிக்கின்றான்.

தன் சொந்த மக்கள் மீது மட்டுமல்ல யார் மீது அநியாயம் நடந்தாலும் எங்கு மக்கள் கஷ்டப்பட்டாலும் அவன் பேசுவான். இதுவே ஒரு சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தின் வாழ்வொழுங்காக மாறும்போது அச்சமூகம் நிச்சயம் மக்கள் மனதில் இடம் பிடிக்கும். முஸ்லிம் அல்லாத வர்கள் அவர்களை கண்ணியத்தோடு நோக்குவர். எவ்வாறாயினும், விதிவிலக்காக இத்தகைய சூழ்நிலையிலும் சிறுபான்மை முஸ்லிம்களை எதிர்க்கும் சிறு குழுக்கள் அல்லது தனிநபர்கள் அங்கு இருக்கவே செய்வர். இத்தகைய ஷைத்தானிய சக்திகள் எல்லா சமூகங்களிலும் எப்போதும் இருப்பர். ஷைத்தான் இலகுவில் தோல்வியை ஒப்புக் கொள்வதில்லை.



இத்தகைய எதிர் சக்திகளிடமிருந்து தம்மைக் கவனமாகக் காத்துக் கொள்ளும் வழிமுறை நிச்சயமாக அந்த சிறுபான்மை முஸ்லிம் சமூகத்திடம் காணப்படல் வேண்டும். அதற்கான மூலோபாயங்களை அவர்கள் வகுத்துக் கொள்ள வேண்டும்.

முஸ்லிம் சமூகம் ஓர் இனம் அல்ல. பூகோள எல்லைகளால் அதனை வரையறுக்க முடியாது. இக்கருத்துக்குப் பொருத்தமான சிந்தனைப் போக்கையே ஷெய்க் அபுல் ஹஸன் அலி நத்வியின் இக்கூற்று தெளிவாக்குகின்றது. நியாயமான உரிமைகள் ஏதுமின்றி தொடர்ந்தும் திட்டமிட்ட அநியாயங்களுக்கு உட்படுத்தப்படும் ஒரு சமூகம் மேற்குறிப்பிட்ட கருத்தை ஜீரணித்துக் கொள்வது சற்று கடினமாகவே இருக்கலாம். அந்த ஐயத்தையும் அபுல் ஹஸன் அவர்கள் தெளிவுபடுத்துகின்றார்.

இயன்றளவு முஸ்லிம் சமூகம் தமது தேவைகளைத் தாமே பூர்த்தி செய்து கொள்ளும் ஒழுங்கை வகுக்க வேண்டும். ஈமான், சகோ தரத்துவம் என்ற இரு கருத்தும் இஸ்லாமிய சமூகத்தில் மிக ஆழமாகப் பதியுமானால் அந்த சமூகம் தமது தேவைகளைச் சுயமாகவே பூர்த்தி செய்து கொள்ளும் ஒழுங்கிற்கு வர முடியும். இப்பகுதியில் இஸ்லாமிய சட்டத்தில் காணப்படும் பல்வேறு ஒழுங்குகளை மிகச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவது பயன் தரும். அதுவே இப்பாதையில் எடுத்து வைக்கும் முதல் அடியாகும்.

இதேவேளை அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான போராட்டத்தையும் கொள்கை ரீதியான உழைப்பிற்கும் போராட்டத்திற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் அதன் உள்ளே அமைந்த போராட்டமாகவும் அமைத்துக் கொள்ளல் வேண்டும். உனது சகோதா னுக்கு அநியாயக் காரனாயினும் அநியாயத்திற்கு உட்பட்டவனாயினும் உதவி செய் என்பது ஜாஹிலிய்யக் காலத்தில் காணப்பட்ட ஒரு கருத்தாகும். இதே வசனத்தைக் கூறிய இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அநியாயம் இழைக்கும் சகோதரனுக்கு உதவுவது என்றால் அவனை அநியாயம் செய்வதிலிருந்து தடுப்பதாகும் என்று விளக்கம் தந்தார்கள்.

சிறுபான்மையாக முஸ்லிம்கள் வாழும் நாட்டை இவ்வாறுதான் தாருல் அஹ்த், தாருல் தஃவா, தாருல் ஷஹாதா என்ற பூமியாக முஸ்லிம்கள் மாற்றிக் கொள்ள வேண்டும். கொள்கைப் பற்றுள்ள சிறுபான்மை முஸ்லிம்களாயின் அவ்வாறு மாற்றிக் கொள்ள முயல்கின்றபோது மேலே இமாம் அபுல் ஹஸன் அலி நத்வி அவர்கள் குறிப்பிடும் கருத்தை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இக்கருத்து சிறுபான்மை முஸ்லிம்களிடையே பரவலாக பிரச்சாரம் செய்யப்பட வேண்டும். முஸ்லிம்களின் உள்ளங்களில் இச்சிந்தனை ஆழமாகப் பதிக்கப்பட வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அதிகாரத்தின் மீது மோகம் வைக்காத தலைவர் டட்லி சேனாநாயக்க

(ஜூன் 19ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட காலஞ் சென்ற முன்னாள் பிரதமர் டட்லி சேனாநாயக்க அவர்களது சிரார்த்த தினத்தையொட்டியதாகும்.)

டட்லி சேனாநாயக்க அவர்கள் கூட்டங்களில் உரை நிகழ்த்தியதை நான் கண்டுள்ள போதும் அவரை நான் நேரில் சந்தித்தது 1970 இல் ஆகும். எழுபதாம் ஆண்டின் தேர்தல் தோல்வியின் சூடு தணிந்திராத இக்கால கட்டத்தில் கட்சி அடைந்த தோல்வி தொடர்பாக அவர் மிகவும் குழம்பிப் போயிருந்தார்.

எனது தகப்பனாரின் கடிதத்துடன் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் மாணவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய குழுவினராக நாம் அவரைச் சந்தித்தோம். அப்போதைய ஐ.தே.க. இளைஞர் முன்னணியின் செயலாளராக இருந்த ஜினதாச நியத்தபால அவர்கள் இச்சந்திப்பிற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தார். எமக்கு அவர் பதிலளித்த விதம் தற்போது எனது ஞாபகத்திற்கு வருகிறது.

"பிள்ளைகளே! நீங்கள் தற்போது நன்றாகப் படியுங்கள். இது படிக்கின்ற வயது. பல்கலைக்கழகத்திற்குச் சென்று திரும்பி வந்ததன் பின்னர் அரசியல் செய்ய முடியும். அப்போது நாம் உங்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவோம்."

தனது அரசியல் நோக்கங்களுக்காக மாணவர்களைப் பகடைக் காயாகப் பயன்படுத்த விரும்பாத ஒரு நேர்மையான தலைவரின் பிரதிவிம்பத்தை அன்று நாம் கண்டோம். இளைஞர்களாக இருந்த எமது அரசியல் தாகத்தைத் தணிப்பதற்கு அவரது பதில் போதுமானதாக இருக்கவில்லை.

"ஐ.தே.கட்சி இந்த நிலைப்பாட்டை எடுக்குமாயின் எதிர்கால சந்ததியினர் தீவிரவாதப் பாதையில் செல்வதைத் தடுக்க இயலாது போகும்."

எமது கருத்தை மிகவும் ஆணித்தரமான முறையில் நாம் அவரிடத்தில் தெளிவுபடுத்தினோம். மாணவர் பிரதிநிதிகள் முன்வைத்த விரிவான மற்றும் வன்மையான விடய விளக்கத்தினைத் தொடர்ந்து நிலவுகின்ற உண்மையான நிலவரத்தின் பாரதூரத் தன்மையினை அவர் புரிந்துகொண்டார் என்பதாகத் தெரிந்தது.

"அப்படியாயின் நாம் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவோம். எனக்கு ஒரு வாரம் அவகாசம் தாருங்கள்."

இறுதியாக டட்லி சேனாநாயக்க அவர்கள் எம்மிடம் கூறினார். ஆனந்தாக் கல்லூரியின் மாணவர் குழுவிற்கு ஒரு வாரத்தில் வுட்லண்ட் இல்லத்திலிருந்து அழைப்பு வந்தது. நாம் மிகவும் மகிழ்ச்சியாக அங்கு சென்றோம். ஜினதாச நியத்தபால, பேராசிரியர் திலக் ரத்னகார, ஜே.ஆர்.பி. சூரியப்பெரும, கலாநிதி கருணாசேன கொடிதுவக்கு ஆகியோர் அங்கு காணப்பட்டார்கள்.

"கட்சியின் மாணவர் அமைப்பினை ஆரம்பிப்பதற்கு நாம் எண்ணவில்லை. நீங்கள் ஆரம்பித்துள்ள ஜனநாயக மாணவர் சங்கத்தை அப்படியே தொடருங்கள். கட்சி என்ற ரீதியில் உங்களுக்கு ஜனநாயக சிந்தனை தொடர்பாக மாணவர்களை அறிவூட்டுவதற்குத் தேவையான உதவிகளையும் வழிகாட்டல்களையும் இவர்கள் உங்களுக்கு வழங்குவார்கள்."

வருகை தந்திருந்த நால்வரும் எமக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள். பின்னர் சமவாத மாணவர் முன்னணியாக மாற்றம் பெற்ற ஐ.தே.கட்சியின் மாணவர் பிரிவின் தோற்றத் திற்கு அவ்வாறு தான் வித்திடப்பட்டது. இவ்வாறு தான் இந்த நாட்டு அரசியலின் "சௌமிய அடையாளம்" என அழைக்கப் படக் கூடிய டட்லி சேனாநாயக்கா அவர்களுடன் தொடர்புபடு வதற்கு எனக்கு அவகாசம் கிடைத்தது.

பொதுமக்கள் வாழ்வில் அவரது நடத்தையானது இலங்கை அரசியலில் "ஒரு ஜனநாயகவாதியின் முன்மாதிரி" என அழைப்பது பொருத்தமானதாகும் என நான் நம்புகிறேன். மனித நேயம் படைத்த டட்லி சேனா நாயக்க அவர்கள் அரசியலை அழகுபடுத்திய, அதற்குப் பெறுமதி சேர்த்த ஒரு மாமனிதர் ஆவார்.

அரசியல் அதிகாரம் மற்றும் காசு பணத்திற்கு முன்னால் மனித உயிர்களை மதிக்காத ஒரு யுகத்தில் டட்லி சேனாநாயக்க அவர்களின் நடத்தையிலிருந்து ஏராளமான படிப்பினைகளைக் கற்றுக் கொள்ள முடியும். 60 ஆம் தசாப்தத்தில் இடம்பெற்ற ஹர்தாலின் போது நிகழ்ந்த ஓர் உயிர்ச் சேதம் காரணமாக அதிர்ச்சியிலும் கவலையிலும் தோய்ந்து போன டட்லி அவர்கள், பிரதமர் பதவிக்கு விடை கொடுத்து அதிகாரத்தில் தொடர்ந்தும் இருப்பதற்கான பேராசை தன்னிடம் இல்லை என்பதை நாட்டு மக்களுக்கு உணர்த்தி விட்டு வுட்லண்ட் இல்லத்தைச் (தனது பிரத்தியேக இல்லம்) சென்றடைந்தார். நாட்டின் தலைவன் என்ற ரீதியில் தனது நாட்டு மக்களின் உயிர்களுக்கு வகைகூறுவதற்கான தனது பொறுப்பினை அவர் இதன் மூலம் எடுத்துக் காட்டினார்.

"அரசியலும் ஒருவகையான யுத்தம் ஆகும். சிலபோது விஷ வாயுவை பயன்படுத்த நேரிடலாம்."

ஒருமுறை வின்சண்ட் சேச்சில் குறிப்பிட்டதைப் போன்று செய்யத் தலைப்படாத ஒரு அரசியல்வாதியே டட்லி ஆவார்.

சொல்வதை விட நடத்தை மூலம் அவரிடம் பௌத்த மதத்தைக் காண முடிந்தது. அரசியல் நோக்கங்களுக்காக மதம், நாடு, சாதி அல்லது வகுப்பு ஆகியவற்றை ஒரு வியாபாரப் பொருளாகக் கருதி குரோதத்தை விதைக்கும் செயற்பாட்டில் அவர் ஒருபோதும் ஈடுபடவில்லை. பல்வேறு இனங்கள் வாழும் ஒரு சமூகத்தில் அவ் அனைத்து இனங்களினதும் அன்பு மற்றும் நம்பிக்கை ஆகியவற்றை மனப்பூர்வமாக வென்ற ஒரு தலைவரைக் காண்பது மிகவும் அபூர்வமாகும். டட்லி சேனாநாயக்க அவர்கள் உண்மையிலேயே அவ்வாறான ஒரு தலைவர் ஆவார். எமது வாழ்நாளில் நாம் கண்ட அமெரிக்காவின் ஜோன் கெனடி, கனடாவின் பியரே ட்ருடோ, இலங்கையின் டட்லி சேனாநாயக்க ஆகியோர் அவ்வாறானவர்கள் என்பது எனது நம்பிக்கை ஆகும்.

## மனித உரிமைப் பேரவையிலிருந்து அமெரிக்க வெளியேற்றம்:

# 'இருந்தென்ன போயென்ன'

• தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

உலக அரசியல் அரங்கில், 'மனித உரிமை' என்ற சொல்லாடல், பல பொருள்கோடல்களுக்கு உள்ளாகியுள்ளது. மனித உரிமைக்கான வரைவிலக்கணங்கள் ஒருபுறம் இருந்தாலும், மீறப்படுவது யாருடைய உரிமைகள் என்பதும், மீறுவது யார் என்பதுமே, மீறப்படுவது மனித உரிமைகளா இல்லையா என்பதைத் தீர்மானிக்கின்றன.

மனித உரிமையின் அரசியல், அதிகம் பேசப்படாத விடயமாக உள்ளது. குறிப்பாக, ஐக்கிய நாடுகள் சபை, தனக்கான மனித உரிமைப் பேரவையை நிறுவியது முதல், மனித உரிமையின் உலகளாவிய அரசியலைப் பொது வெளிக்குக் கொணர்ந்துள்ளது.

ஆனாலும், மனித உரிமைகள் இன்னமும் எல்லோருக்கும் பொதுவானதாக இல்லை என்பதை, இப்பேரவையின் செயற்பாடுகள் தொடர்ந்தும் சுட்டிக்காட்டி வந்துள்ளன.

கடந்த வாரம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையிலிருந்து, அமெரிக்கா வெளியேறுவதாக, வெளிப்படையாக அறிவித்துப் பேரவையிலிருந்து விலகியது. இது ஒருபுறம், தமிழ் மக்களிடையே ஏமாற்றத்தையும் கவலையையும் ஏற்படுத்தி இருப்பதை அவதானிக்க முடிகிறது.

மறுபுறம், இலங்கையின் தேசியவாதிகளிடையே இதுவொரு வெற்றியாகவும், இலங்கை, பேரவையில் அளித்திருந்த உறுதிமொழிகளிலிருந்து, விலகியிருப்பதற்கான சிறந்த வாய்ப்பு அமைந்துள்ளது என்ற வகையில், அமெரிக்காவின் முடிவு கொண்டாடப்பட்டது.

இலங்கைக்கு எதிராக, மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், அதிலும் அமெரிக்காவின் முக்கிய பங்களிப்புடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் வல்லமை, அமெரிக்காவின் வெளியேறும் தீர்மானத்தால், வேறுபட்ட மனநிலை வெளிப்பாடுகளுக்குக் காரணமாகியுள்ளன. இப்பின்னணியில், அமெரிக்காவின் நிலைப்பாடு தொடர்பிலும், இதனால் ஏற்படப் போகும் விளைவுகள் குறித்தும் நோக்கலாம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் வரலாறு, கொஞ்சம் நீண்டது. இரண்டாம் உலகப் போரின் முடிவுடன், தோற்றம் பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் துணை அமைப்பாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகம் (UN Human Rights Commission) 1946ஆம் ஆண்டு தோற்றம் பெற்றது.

அதனுடைய 60 ஆண்டுகால வரலாற்றில், ஏராளமான மனித உரிமை மீறல்களை, இவ்வமைப்புக் கடந்து வந்துள்ளது. ஆனால், இவ்வமைப்பால் எதையும் சாதிக்க முடியவில்லை.

இதனால், ஐ.நா. மனித உரிமை ஆணையகம் மீது, ஏராளமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இதன் விளைவால், இன்னொரு புதிய அமைப்புக்கான தேவை உணரப்பட்டது. 2006ஆம் ஆண்டு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை தோற்றம் பெற்றது. இக்கதைக்கும் ஒரு பின்புலமுண்டு.

ஆறு தசாப்தங்களுக்கு மேலாக, மனித உரிமைகள் கவனிப்புக்குள்ளாயிருந்த போதும், 1990களின் பிற்பகுதியில் அக்கவனம் ஒரு புதிய அரசியல் பரிமாணத்தைப் பெற்றது.

கெடுபிடிப் போரின் பின்னர், ஒற்றை முனைய உலகின் ஆதிக்கச் சக்திகள், உலக நாடுகளில் தலையிடுவதற்கான புதிய வழிமுறைகளைத் தேடின. இந்நிலையில், 1994 ஆம் ஆண்டு ருவாண்டாவில், 100 நாட்களில் எட்டு இலட்சம் பேரைக் கொன்ற, கொடிய இனப்படுகொலையும் அதன் போதான, ஐ.நா.வின் கள்ள மௌனமும் கையாலாகாத்தனமும் சர்வதேச அளவில், மனித உரிமை பற்றிய புதிய அக்கறைகளை உருவாக்கின.

அதன் தொடர்ச்சியான கோட்பாட்டுருவாக்க முயற்சிகளதும் அதையடுத்த நிறுவனமாக்கற் செயற்பாடுகளதும் விளைவாகவே ஐ.நா. மனித உரிமைப் பேரவை தோன்றியது.

ஐ.நா. சபையும் மேற்குலகும் குறைப்பிரசவமாகப் பெற்ற வலது குறைந்த குழந்தையே ஐ.நா. மனித உரிமைப் பேரவையாகும். பல ஆண்டுகள் கடந்தும், அது இன்னும் வளரவுமில்லை; வலுப் பெறவுமில்லை என்பதே உண்மை.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் உருவாக்கத்தின் மூலம், ஐ.நா. சபை, உலகளாவிய ரீதியில் மனித உரிமைகளைக் கண்காணிக்கும் ஒரு செயன்முறையை ஆக்கியிருக்கிறது. [illegible] கோல்களின் தீர்மானகரமான சக்தியாக ஐ.நா மனித உரிமைப் பேரவை வடிவுபெற்றுள்ளது.

மனித உரிமைகளுக்கான சர்வதேச அமைப்பு எதும் இல்லாமையை விட, ஐ.நா. வினுடைய அமைப்பு ஒன்று இருப்பது நன்மை தரும் என, அதன் ஆதரவாளர்கள் வாதிடுவார்கள். எனினும், எதையுமே செய்ய இயலாதபோதும், குறிப்பிட்ட சில நாடுகளின் நலன்களுக்காக, பக்கம் சார்ந்து செயற்படும் ஓர் அமைப்பு இருப்பதை விட, இல்லாமை மேல் என்பது, மறுசாரார் வாதம்.

கடந்த வாரம், ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்க தூதர் நிக்கி ஹேலே, அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் மைக் பாம்பியோ ஆகியோர், அறிவிப்பு ஒன்றை வெளியிட்டனர்.

அப்போது பேசிய நிக்கி ஹாலே, "ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவை, கேலிக்குரியதாகச் செயற்பட்டு வருகிறது" என்று குற்றம் சாட்டினார். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக, ஐ.நா மனித உரிமைப் பேரவையில் இருந்து அமெரிக்கா விலகுவதாகத் தெரிவித்தார்.




மனித உரிமைப் பேரவையைச் சீரமைக்க, அமெரிக்கா செய்த முயற்சிகளுக்கு ரஷ்யா, சீனா, கியூபா, எகிப்து ஆகிய நாடுகள் முட்டுக்கட்டை போட்டதாகக் குற்றம் சாட்டினார். மெக்சிகோவில் இருந்து, அமெரிக்காவுக்குச் சட்டவிரோதமாகக் குடியேறுபவர்களைத் தடுக்கும் விதமாக, குறிப்பிட்ட வயதினருக்கு மேல், அமெரிக்காவுக்குள் நுழைய அனுமதி மறுக்கப்படுகிறது.

இதன் காரணமாகக் குடியேறிகளின் குழந்தைகளையும் பெற்றோரையும் அமெரிக்க அதிகாரிகள் பிரித்து வைத்த விவகாரத்தில், ஐ.நா மனித உரிமைப் பேரவை கடும் கண்டனம் தெரிவித்தது. இது, அமெரிக்காவுக்குக் கடும் சினத்தை உண்டுபண்ணியது என்பதே உண்மை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை, "அரசியல் பாகுபாடு மிகுந்த, சாக்கடைக் குழி' என்று விவரித்த ஹேலே, இப்பேரவையானது பாசாங்குத்தனம் மிகுந்த, தன்னாட்சி அமைப்பாகி, மனித உரிமைகளை எள்ளி நகையாடுகிறது" என்றார்.

இஸ்ரேல் தொடர்பில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் செயற்பாடுகளை விளிக்கும்போதே, நிக்கி ஹேலே குறிப்பிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் இந்நடவடிக்கையை இஸ்ரேல் வரவேற்றுள்ளது.

"அமெரிக்காவின் துணிச்சலான நடவடிக்கை, இஸ்ரேலைப் பழிவாங்க நினைக்கும் நாடுகளுக்கு, நல்லதொரு பாடம்" என இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெடன்யாகு தெரிவித்தார்.

கடந்த சில காலங்களாக, பலஸ்தீனத்தின் மீதான, இஸ்ரேலிய நடத்தை தொடர்பாக ஐ.நா.வில், இஸ்ரேலுக்கு எதிராக நிறைவேற்றப்படும் தீர்மானங்களுக்கு, அமெரிக்கா கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்ததோடு, இந்த நிலை தொடர்ந்தால், மனித உரிமைப் பேரவையிலிருந்து வெளியேறி விடுவோம் என ஏற்கெனவே கூறியிருந்தது.

முன்னதாக, அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் பதவியேற்ற பிறகு, யுனெஸ்கோ அமைப்பில் இருந்தும், பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் இருந்தும் அமெரிக்கா வெளியேறியுள்ளதோடு, ஈரான் அணுசக்தி உடன்படிக்கையிலிருந்து வெளியேறியமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே, அமெரிக்காவின் இம்முடிவு ஆச்சரியம் மிக்கதல்ல. இன்னொரு வகையில் எதிர்பார்க்கப்பட்டதே. மாறுகின்ற உலக ஒழுங்கு, அமெரிக்காவின் விருப்பப்படி, உலகம் இயங்குவதை அனுமதிக்க மறுக்கிறது. அமெரிக்கா விரும்பும் மாற்றங்கள் இடம்பெறாத போது, இவ்வாறான முடிவுகளை அமெரிக்கா எடுக்கிறது.

இனி, இம்முடிவு குறித்த தமிழ் மக்களின் கவலைகள் பற்றியும், ஐக்கிய நாடுகள் சபையே, தமிழ் மக்களின் இறுதிப் போக்கிடம் என்று விதைக்கப்பட்டிருக்கின்ற நம்பிக்கைகள் பற்றியும் சில விடயங்களை நோக்கலாம்.

ஐ.நா. சபை இலங்கையில் நடந்துகொண்ட முறை தொடர்பில், 2012 இல் வெளியிடப்பட்ட ஐ.நா.வின் உள்ளக மீளாய்வு அறிக்கை, 'இலங்கையில், இனப்படுகொலையை அரங்கேறாமல் தடுப்பதற்குரிய வழிகள் இருந்தும், அசமந்தப் போக்குடன் ஐ.நா செயற்பட்டது' என்பதை கோடிட்டுக் காட்டுகிறது. அதே வேளை, 'போர் முடிந்த பின்னர், முட்கம்பி வேலிகளுக்குள் மக்கள் துன்பப்படுகையில் ஐ.நா வாழாவிருந்தது' என்பதையும் சுட்டிக் காட்டுகிறது.

வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பாக, ஐ.நா.வின் செயலாளர் நாயகம் பன் கீ மூனையும் அவரது பிரதான அலுவலர் விஜய் நம்பியாரையும் குற்றச் சாட்டுகின்றன.

நடந்தேறிய மனிதப் படுகொலைக்கான இரத்தம் தோய்ந்த கரங்களாக இவ்விருவரையும் சுட்டின. ஆனால் அது தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆனால், மனித உரிமைகளின் பெயரால் நேரடி, மறைமுக அந்நியத் தலையீடுகளுக்கு வழி அமைக்கப்படுகிறது. இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணை, தமிழர்களின் நலம் கருதிக் கொண்டு வரப்பட்டது என்று ஒருவர் சொல்லுவரானால், அது அறியாமையால் அல்ல; அறிந்து, தெரிந்து சொல்லப்படும் பொய் என்பதை, உறுதியாக நம்பலாம்.

அந்நியத் தலையீடுகள், பொதுவாகவே பிரச்சினைகளைத் திசைதிருப்பிச் சிக்கல்களை அதிகரிப்பன. இன்றைய உலக ஒழுங்கில் இதன் விளைவு, ஒரு பிரச்சினையை இன்னொன்றாக்குவதாகும். (அதாவது, பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக, அதை வேறொன்றாக மாற்றுவது) உதாரணமாக, இலங்கையில் தேசிய இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வு என்பது, இறுதிக்கட்டப் போரின் போதும், அதையடுத்தும் மனிதப் பேரவலங்களிலிருந்தும் மக்களைக் காப்பதாக மாறி, பின்னர், மனித உரிமைப் பிரச்சினையாகி, இன்று உள் விசாரணையாகி உள்ளது.

அமெரிக்காவின் உலக மேலாதிக்க நோக்கத்துக்கும் இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க நோக்கத்துக்கும் இடையில், இன்றுள்ள தற்காலிக உடன்பாடும், தென்னாசிய நாடுகளின் இறைமைக்கும் அரசியல் உறுதிப்பாட்டுக்கும் கேடானவை. மேலாதிக்கவாதிகள், மேலாதிக்கவாதிகளாகவே நடப்பர் என்பது, மீண்டும் தெட்டத் தெளிவாகியுள்ளது.

மனித உரிமைகள் பற்றியும் போர்க் குற்ற விசாரணைகள் பற்றியும் எவரும் பேசுவது, ஒடுக்குமுறையால் பாதிக்கப்பட்டோரின் மீட்சிக்காக அல்ல என நமக்கு இப்போதைக்கு விளங்கியிருக்க வேண்டும்.

மேற்குலகு, தான் விரும்பாதோரைத் தண்டிக்கவும் தன்னைப் பணியாதோரைப் பணிய வைக்கவும் பயன்படுத்துகின்ற கருவிகள் மட்டுமே அவை.

சூடான், கொங்கோ, எதியோப்பியா, சோமாலியா போன்ற நாடுகளில், தீராத அல்லது நீடிக்கப்படும் உள்நாட்டு யுத்தங்களைக் காட்டி, எவ்வாறு மனிதாபிமான நடவடிக்கை அல்லது மனிதாபிமானக் குறுக்கீடு என்ற பெயரில் அந்நாடுகளுள் அந்நியத் தலையீடுகளும் நெருக்குவாரங்களும் நிகழ்ந்தன என்பதை நினைவு கொள்ளல் தகும். இத்தலையீடுகளில் மனித உரிமையினதும் மனித உரிமைப் பேரவையினதும் பங்கு பெரியது.

இன்று, பலஸ்தீனத்தில் நடப்பவை பற்றிய கவனம், மனித உரிமைகள் (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி

- **தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் பிரதியமைச்சுப் பதவி தற்பொழுது உங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இவ்வமைச்சினூடாக நீங்கள் முன்னெடுக்கத் திட்டமிட்டிருக்கும் நடவடிக்கைகளை குறிப்பிட முடியுமா?**

தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டதை தொடர்ந்து ஆரம்பத்தில் இவ்வமைச்சு ஜனாதிபதியின் பொறுப்பில் இருந்தது. மக்கள் மத்தியில் வெறுமனே போதனை செய்யும் அமைச்சாகவே பலராலும் நோக்கப்பட்டது. ஆனால் மக்கள் மனதை வென்றெடுக்க வேண்டுமெனில் அவர்களது தேவைகளுக்கு முன்னுரிமையளித்து, அவர்களுக்கு தேவையான கல்வி, கலாசார, சுகாதார, வாழ்வாதார விடயங்களில் ஒட்டுமொத்த கவனமும் செலுத்தப்பட வேண்டும்.

ஒரு அபிவிருத்தி சார்ந்த அமைச்சாக இது மாற்றப்பட்டால்தான் உண்மையான நல்லிணக்கத்தை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல முடியும். இவ்வாறான திட்டங்களை உள்ளடக்கிய அமைச்சாக தற்பொழுது எம்மிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது. இதனை துரித கதியில் அமுலாக்கம் செய்து, உள்ளூராட்சி, மாகாண, தேசிய ரீதியாக காணப்படுகின்ற அபிவிருத்திகள் மக்களுக்கு நேரடியாகச் செல்லும் நோக்கில் இப்பணியை ஆரம்பிக்கவுள்ளோம். மக்கள் எந்த அங்கீகாரத்திற்காக வேண்டி எமக்கு வாக்களித்தார்களோ அவற்றுக்கு முன்னுரிமையளித்து செயற்படுவதே எமது தலையாய கடமையாகும்.

> "தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கத்தை அவதானிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் தேசிய சகவாழ்வு சங்கங்கள் (National Co Existent Society) நிறுவப்பட்டுள்ளன. தேசிய சகவாழ்வை உறுதிப்படுத்துவதே இந்தச் சங்கங்களின் நோக்கமாகும். இலங்கையில் சுமார் 14,000 கிராம சேவகர் பிரிவுகள் காணப்படுகின்றன. தற்பொழுது 8000 இற்கும் மேற்பட்ட சகவாழ்வு சங்கங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன."



- **இந்தத் திட்டங்கள் எந்தளவு வெற்றியளித்திருக்கிறது?**

நான் இவ்வமைச்சை பெறுப்பேற்று ஒன்றரை மாதங்களாகின்றன. இந்தக் காலப்பகுதிக்குள் வடகிழக்கிற்கு 6 அம்சத் திட்டமொன்றை அமுல்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். அமைச்சரவை அனுமதிகளையும் பெற்று வீதிகளை நிர்மாணிப்பதற்கான கேள்விப் பத்திரங்களைக் கோரி, ஒப்பந்தக்காரர்களிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. சகல இன மக்களுக்கும் பிரயோசமளிக்கும் வகையிலான அபிவிருத்தி திட்டங்களை நாம் துரித கதியில் முன்னெடுத்துள்ளோம்.

இது போன்று மாவட்ட அடிப்படையில் அரசாங்க அதிபர்களினூடாகவும், பிரதேச செயலகங்களினூடாகவும், மாகாண அதிகாரிகளினூடாகவும் எமது அமைச்சுக்கூடாக அதிகாரமளிக்கப்பட்டிருக்கும் வழிகாட்டல், மேற்பார்வை பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. எமது செயற்பாடுகளை அமுல்படுத்தும் யந்திரம் துரித இயங்கு நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு விவசாயம் சார்ந்த பொருளாதார அபிவிருத்திக்குரிய அம்சங்களும், கடல் நீர் நிலைகளுக்கான அபிவிருத்திகளும் மக்களது வாழ்வாதாரத்தை அடிப்படையாக கொண்டு முன்னெடுக்கப்படுகிறது.

- **சகவாழ்வைக் கட்டியெழுப்புவதில் மொழி எவ்வளவு தூரம் பாதிப்புச் செலுத்துகிறது?**

மொழிகள் மூலமும் புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும். இதற்காக வேண்டி எமது அமைச்சின் கீழ் அரச கரும மொழிகள் திணைக்களம், அரச கரும மொழி ஆணைக்குழு, தேசிய மொழிப் பயிற்சி நிறுவனம் போன்றன தாபிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் மொழிக்கொள்கை அமுலாக்கம் இடம்பெற்று வருகிறது. அரச கருமமொழி அமுலாக்கம் தொடர்பில் பொது நிர்வாக அமைச்சினால் பல்வேறு சுற்று நிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதனை யதார்த்தபூர்வமான முறையில் அமுல்படுத்துவதற்கு நாம் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். 18/2009 சுற்று நிருபத்தின் படி, ஒரு பிரதேச செயலகத்தின் மூலம் மக்கள் எதிர்பார்க்கும் விண்ணப்பங்கள் மும்மொழியிலும் காணப்பட வேண்டும் என்றொரு விதிமுறை உள்ளது. அல்லது ஒருவர் வேண்டும் மொழியில் அந்த ஆவணம் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட வேண்டும்.

அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் மும்மொழிக் கொள்கையை முற்றாக செயற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் மும்மொழி அகராதியொன்றும் வடிவமைக்கப்பட்டு, அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு பல அம்சங்களையும் உள்ளடக்கிய அடிப்படையில் சகவாழ்வை கட்டியெழுப்பும் நிகழ்ச்சிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

- **நிரந்தர சமாதானத்தை நிலைநிறுத்திக் கொள்வது தொடர்பில் நீங்கள் நாட்டு மக்களுக்கு கூற விரும்பும் ஆலோசனைகள் என்ன?**

நான் எப்போதும் சமாதானத்திற்காக வேண்டி செயற்பட்டவன் என்ற வகையில் இவ்வமைச்சு எனக்கு கிடைத்தமை தொடர்பில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். நாம் முஸ்லிம்கள் என்ற அடிப்படையில் பொறுமையுடனும் சகிப்புத் தன்மை விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும். சாந்தியும் சமாதானமும் நிலவட்டும் என்கின்ற கருத்தையே அல்குர்ஆனும் சுன்னாவும் வலியுறுத்தியுள்ளது. நாம் முழு உலகிற்குமான உதாரண புருஷர்களாக மாற வேண்டும். முரண்பாடுகளை தவிர்த்து உடன்பாட்டுடன் நாம் செயற்படுகின்ற போதே உண்மையான இனக்கப்பாட்டை எல்லா மட்டத்திலும் உள்வாங்கலாம்.

இன மத பேதமற்ற வகையில் சகலருக்கும் சகலதும் கிடைக்க வேண்டும். நாம் சிறந்த முறையில் வாழ்வதற்கு எவையெல்லாம் இருக்க வேண்டும் என்று கருதுகிறோமோ அவையனைத்தும் சகல மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் செயற்பட வேண்டும். ஒருவரை ஒருவர் மதித்து நடக்க வேண்டும். இன, மத, மொழி ரீதியான எவ்வித ஏற்றத்தாழ்வு களையும் பின்பற்றக் கூடாது. அதேநேரம் எம்மிடம் காழ்ப்புணர்ச்சிகளும் இருக்க கூடாது. இவற்றை கடைபிடிக்கும் போதே அடுத்த தலைமுறையும் [illegible] நிரந்தர சகவாழ்வுக்காக [illegible].

# "முரண்பாடுகளை தவிர்த்து உடன்பாட்டுடன் செயற்படுகின்ற போதே உண்மையான இணக்கப்பாட்டை அடைய முடியும்"

## செய்யித் அலி ஸாஹிர் மௌலானா

பிரதியமைச்சர் - தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு

- **இன நல்லுறவைக் கட்டி யெழுப்புவது தொடர்பான அமைச்சின் திட்டங்களை சற்று தெளிவுபடுத்த முடியுமா?**

இன நல்லுறவை கட்டியெழுப்புவது தொடர்பில் நாம் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். கொள்கை அபிவிருத்திப் பிரிவின் கீழான நிகழ்ச்சித் திட்டங்கள், சகவாழ்வு பிரிவினால் முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சி திட்டங்கள், நிர்வாகப் பிரிவினால் முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் என அமைச்சு மூன்று வழிமுறைகளில் தம் பணியை முன்னெடுத்து வருகின்றது.

கொள்கை அபிவிருத்திப் பிரிவின் கீழ், கொள்கை தொடர்பான நிறுவனங்களுக்கு வழிகாட்டுதல், வசதியளித்தல் மற்றும் மீளாய்வு செய்தல், உள்ளூராட்சி நிறுவனங்களிலுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துதல், மும்மொழி பெயர் பலகைகளை தாபிப்பதற்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இளைஞர் குழுவினருக்காக அரச கரும மொழிக்கொள்கை மற்றும் சகவாழ்வு தொடர்பாக விழிப்புணர்வூட்டும் கலந்துரையாடல் செயலமர்வினை நடாத்துதல், சகவாழ்வு சங்கத்தினை பதிவுசெய்தல் மற்றும் அதனை இயங்கச் செய்வதற்குரிய திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

சகவாழ்வு பிரிவின் கீழ், ஓரங்கட்டப்பட்ட மக்கள் குழுக்களை வலுப்படுத்தல், அத்தியாவசிய சட்ட ஆவணங்களை வழங்குவதற்காக பிரதேச செயலாளர் மட்டத்தில் நடமாடும் சேவைகளை நடாத்தல், ஓரங்கட்டப்பட்டுள்ள பாடசாலை மாணவர்களை வலுவூட்டல், இலங்கையில் வாழும் ஓரங்கட்டப்பட்ட பல்வேறு இனக் குழுக்களை வலுப்படுத்தல், சகவாழ்வை மேம்படுத்த வெகுஜன ஊடகங்களை பயன்படுத்தல், வெகுஜன ஊடகங்கள் ஊடாக சகவாழ்வை மேம்படுத்துவதற்கான வானொலி நிகழ்ச்சித் திட்டங்கள் (சுபாரதி மற்றும் விடியும் வேளை) சகவாழ்வு குறுந்திரைப்பட விழாவை நடாத்தல், (கையடக்க தொலைபேசி குறுந்திரைப்படங்கள்) சகவாழ்வு மேம்படுத்தல் ஸ்டிக்கர் நிகழ்ச்சித் திட்டம், திரையரங்குகளில் சகவாழ்வு செய்திகளை காட்சிப்படுத்தல், சகவாழ்வு தொடர்பாக வீதி நாடகங்களை நடாத்துதல், சகவாழ்வை மேம்படுத்துவதற்காக கலைஞர்கள், சமய தலைவர்கள் மற்றும் சமூக தலைவர்களை உள்ளடக்கிய சபையொன்றை தாபித்தல், நாடு பூராகவும் உள்ள பங்காளர்களுடன் கலந்துரையாடலை நடாத்தல் போன்ற நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதுபோன்று நிர்வாகப் பிரிவின் கீழ் அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்கு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், பட்டப் பின்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள், தொழில்வாண்மை சார் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம், மாவட்ட மற்றும் மாகாண நிலையங்களை தாபித்தல், அகலவத்தை பயிற்சி நிலையத்திற்கான புதிய கட்டிடத்தை பெற்றுக் கொடுத்தல் போன்ற விடயங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.


- **சகவாழ்வைக் கட்டியெழுப்பும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை அரசாங்கம் செயற்படுத்தினாலும் கூட அளுத்கம, திகன போன்ற சம்பவங்களால் அவை கேள்விக்குறியாகி விடுகின்றன. இது போன்ற சம்பவங்கள் இனிமேலும் இடம் பெறாமல் இருப்பதற்கு அமைச்சு முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகள் என்ன?**

தேசிய சகவாழ்வு என்பது அமைச்சின் ஒரு பகுதியாகும். தேசிய சகவாழ்வு என்பது சமாதான சகவாழ்வு ஆகும். நாட்டில் எப்பாகத்திலேனும் ஏதாவது சிறிய தவறொன்று நடக்கும் பட்சத்தில் மிகவும் கவனமான முறையில் உடனடியாக அவதானிக்கப்பட்டு அது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். சட்டம் உரிய முறையில் அமுலாக வேண்டும். இதற்காக வேண்டி ஒவ்வொரு பிரதேச ரீதியிலும் தேசிய மட்டத்தில் அங்கீகாரமளிக்கப்பட்டிருக்கும், தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கத்தை அவதானிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் தேசிய சகவாழ்வு சங்கங்கள் (National Co Existent Society) நிறுவப்பட்டுள்ளன. தேசிய சகவாழ்வை உறுதிப்படுத்துவதே இந்தச் சங்கங்களின் நோக்கமாகும். இலங்கையில் சுமார் 14,000 கிராம சேவகர் பிரிவுகள் காணப்படுகின்றன.

தற்பொழுது 8000 இற்கும் மேற்பட்ட சகவாழ்வு சங்கங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. குறிப்பாக திகன, அளுத்கம போன்ற பகுதிகளில் இந்நடவடிக்கை துரித கதியில் முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சங்கங்களுக்கு தேவையான நிதி ஒழுங்குகளை செய்துள்ளோம். இதன் மூலம் பிரதேச ரீதியாக ஏற்படக்கூடிய இன மோதலை ஆரம்பத்திலேயே தணிக்க முடிகின்றது.

இதுதவிர, மாவட்ட செயலகங்களில் தேசிய ஒருமைப்பாட்டு அதிகாரி ஒருவர் எமது அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். இது தவிர நாட்டிலுள்ள 334 பிரதேச செயலகங்களில் 200 இற்கு மேற்பட்ட பிரதேச செயலகங்களுக்கான தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பு அதிகாரிகளையும் நியமிக்கவுள்ளோம்.

தற்பொழுது இந்தப் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு பரீட்சைகள் நடாத்தப்படவுள்ளன. நாட்டில் இனிமேலும் அளுத்கம, திகன போன்ற பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்கள் இடம்பெறா[illegible] வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.




அபூ ஷாமில்

## வட்ஸ்அப் துஆக்கள்

ரமழான் கடைசிப் பத்தில் கியாமுல் லைல் தொழுகையின் கடைசியில் கண்ணீர் மல்க ஓதப்படும் துஆக்கள் பெருந்தாக்கம் செலுத்தக் கூடியவை. இலங்கை முஸ்லிம் கள் மத்தியில் தற்பொழுது கியாமுல் லைல் தொழுகை தமது வாழ்வியலில் ஒன்றாக மாறிவருவதனால் இந்த துஆக்கள் பற்றியும் பேச வேண்டியேற்படுகிறது.

நம்மில் பலர் தமக்குப் பழக்கப்பட்ட துஆக்களுக்கு மட்டுமே ஆமீன் சொல்லப்பழகி இருக்கின்றார்கள். இரண்டாவது குத்பாவில் முன்னாடி எந்த துஆவைக் கேட்டாலும் அல்லாஹும்ம ஜிர்னா மினன்னார் என்று தொடங்கினவுடன் தான் மக்கள் ஆமீன் சொல்லத் துவங்குவார்கள். இப்படித்தான் கியாமுல் லைல் தொழுகையிலும். புதியதாக பல துஆக்களை இமாம்கள் பாடமாக்கிக் கொண்டு வந்தாலும் மக்கள் தங்களுக்குப் பரிச்சயமான விடயங்களுக்குத் தான் பலமாக ஆமீன் சொல்லுவார்கள். "அல்லாஹும்மன்ஸிர் முஜாஹிதீன பீ பலஸ்தீன், வ பீ ஈராக், வ பீ சீசான்..." மக்களும் சத்தமாக ஆமீன் முழங்குவார்கள்.

சீசான் எனப்படும் செச்னியாவில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் நடந்து பல தசாப்தங்களாகின்றன. அப்பொழுது பாடமாக்கப்பட்ட துஆதான் இன்று வரை சுழலுகின்றது. வட்ஸப்பிலும் இப்படித்தான் துஆக் கேட்பார்கள். மனைவியின் சுகப்பிரசவத்துக்கு துஆச் செய்யுங்கள் என்று ஸ்டேடஸ் வரும். விசாரித்துப் பார்த்தால் பிள்ளை நேர்சரிக்குப் போயிருப்பதாக தகவல் வரும். பிரசவ காலத்தில் கேட்ட துஆ, இன்றும் திகதியறி யாமல் இப்படித்தான் வட்ஸப்பிலே சுழலும்.

சீசானுக்காக துஆக் கேட்க வேண்டாமென்று சொல்ல வரவில்லை. அதற்குப் பின்னர் காஷ்மீர், மியன்மார், சிரியா என புதுப் புதுப் பிரச்சினைகள் முஸ்லிம் உலகுக் குள்ளால் நடந்தேறி வருகின்றன. இவை தொடர்பில் மௌலவிமார் அப்டேட் ஆக வேண்டும். உலகளாவிய ரீதியிலும் உள்நாட்டிலும் நடக்கின்ற பிரச்சினைகள் தொடர்பில் இவர்கள் இற்றைப்படுத்தப்பட்டால் தான் பிரச்சினைகளுக்குரிய நிவாரணம் தேடி துஆச் செய்ய முடியும். பத்திரிகை வாசிப்பதையே ஹராமாக்கிக் கொண்ட ஒரு சமூகத்திடம் இதனை எதிர்பார்ப்பது கஷ்டமானது தான்.

இந்த நிலையில் இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் இனவாதச் செயற்பாடுகள், அரசியல் ரீதியான ஒடுக்குமுறைகள் இவைகள் பற்றி யெல்லாம் துஆக் கேட்கின்ற மௌலவிமாருக்கு அப்டேட் செய்ய வேண்டியிருக்கிறது. சமூகம் தொடர்பில் அல்லாஹ் விடம் கேட்டுப் பெற விடயங்கள் பற்றி இவர்களுக்கு அறிவூட்ட வேண்டியிருக்கிறது. பத்திரிகை, தொலைக் காட்சிகளை புறமொதுக்கியுள்ள பெரும்பாலான மௌலவி மாருக்கு வட்ஸ்அப்தான் தகவல் வழங்கும் ஊடகமாக இருக்கின்றது. இது சிலவேளைகளில் இல்லாததையும் பொல்லாததையும் துஆக்களில் சேர்ப்பதற்கும் குத்பாக்களில் முழங்குவதற்கும் காரணமாக அமைகிறது.

இந்த வகையில் எதனை மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதில் மௌலவிமார் தெளிவு பெற வேண்டும். அதேபோல துஆவிலே என்ன கேட்கிறார்கள், நாங்கள் எதற்கெல்லாம் ஆமீன் சொல்லுகிறோம் என்பது தொடர்பில் மக்களுக்குத் தெளிவு இருக்க வேண்டும். இப்படி இரு தரப்பினரும் இணைந்து பரஸ்பரம் ஒத்துழைக்கும் பொழுதுதான் சமூகத்தில் விழிப்புணர்வினைக் கொண்டு வர முடியும்.

ஐங்காலத் தொழுகைகளுக்குப் பின்னர் இமாம்களால் கேட்கப்படும் துஆக்கள் மக்களைப் பயிற்றுவிப்பதற்காகவே எனச் சொல்லப்பட்டன. தொழுகை அடவுகளில் ஒவ்வொரு நேரத் தொழுகைகளுக்குப் பின்னருமான துஆக்கள் மனனமிடச் செய்யப்பட்டன. ஆனாலும் இத்தனை ஆண்டுகள் போன பின்னரும் மக்கள் சொந்தமாக துஆக் கேட்பதற்குப் பயிற்றுவிக்கப்படவில்லை என்றால் புதிய புதிய பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் மக்கள் எப்படி அல்லாஹ்விடம் முறையிடுவது ?

மௌலவிமார்கள் அப்டேட் இல்லையென்றால் அப்டேட் உள்ள சமூகம் முன்வந்து துஆச் செய்வதற்கு அவர்களாகவாவது பயிற்சி எடுத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். இல்லாவிட்டால் வட்ஸ்அப் துஆக்களுக்கெல்லாம் தொடர்ந்தும் ஆமீன் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவப் புரட்சியின் ஐந்தாண்டுகளை நினைவுகூரும் எகிப்தியர்கள்




2013 ஜூலை 03 இல் முர்ஸி பதவி கவிழ்க்கப்பட்டதாக ஜெனரல் அப்துல் பத்தாஹ் ஸீஸி அரச தொலைக்காட்சியில் அறிவித்தார். இடைக்கால அரசாங்கத்தையும் அரசியலமைப்புச் சட்டத்தையும் நிறுத்திக் கொள்வதாகவும் அவர் அறிவித்தார். எகிப்திய மக்களுக்கு தாம் பொறுப்புக் கூறுவதாகவும் முர்ஸி சர்வாதிகாரியாக மாறிவிட்டார் என்றும் ஸீஸி அறிவித்தார். தற்போது இரண்டாம் முறையும் பதவியில் அமர்ந்துள்ள ஸீஸியே அறபுலகின் மிகப் பெரிய சர்வாதிகாரி என்று எகிப்திய மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

நவீன எகிப்திய வரலாற்றில் ஜனநாயக ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட முதல் ஜனாதிபதி முர்ஸி என்பது குறிப்பிடத்தக்கது. 2014 ஜூனில் ஸீஸி ஜனாதிபதிப் பதவியேற்றார். மார்ச் 2018 இல் அவர் மீண்டும் இரண்டாவது முறை ஜனாதிபதியாகத் தெரிவானார். எகிப்தில் இடம்பெற்ற இராணுவ சதிப் புரட்சிக்கு அமெரிக்கா, இஸ்ரேல், சவூதி அறேபியா, ஐக்கிய அறபு அமீரகம் என்பனவே பின்னணியில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இராணுவப் புரட்சியினூடாக நாட்டின் ஸ்திரத்தன்மையை உருவாக்கும் ஸீஸியின் திட்டம் மென்மேலும் நாட்டை குழப்பத்திலேயே ஆழ்த்தியுள்ளது. ஸீஸி பதவிக்கு வந்ததன் பின்னர் 60,000 அரசியல் கைதிகள் விசாரணைகளின்றி தடுப்புக் காவலில் உள்ளனர். 2016 இல் 830 சித்திரவதை தொடர்பான கொலைகள் இடம்பெற்றன. 434 இணையத்தளங்கள் தடுக்கப்பட்டுள்ளன என நியூயோர்க்கிலுள்ள லோங் ஐலென்ட் பல்கலைக்கழக அரசியல் துறை பேராசிரியை காலியா பஹ்மி தெரிவித்துள்ளார்.

அடிப்படை மனித உரிமை மீறல்களுக்கு பெயர்போன நாடாக எகிப்து மாறியுள்ளது. ஸீஸியை விமர்சிக்கின்றவர்கள் அனைவரும் சிறையில் தள்ளப்படுகின்றனர். கருத்துச் சுதந்திரம் முற்றாக முடக்கப்பட்டுள்ளது. ஜனநாயகப் போராளிகள் பயங்கரவாதிகளாக முத்திரை குத்தப்பட்டு 739 பேர் மரண தண்டனை தீர்ப்பை எதிர்கொண்டுள்ளனர்.

## சர்வதேசப் பார்வை

# பலஸ்தீனக் கைதிகளின் குடும்பங்களுக்கான நிதியை இஸ்ரேல் விடுவிக்கின்றது!

இஸ்ரேலில் கைதிகளாக நடாத்தப்படும் அப்பாவிப் பலஸ்தீனர்களின் சொத்துக்களையும் நிதிகளையும் இஸ்ரேல் முடக்கி வந்தது. தற்போது கைதிகளின் குடும்பங்களுக்கு அந்நிதியை மீளப் பெறும் வகையிலான சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளது. இதன் மூலம் பலஸ்தீன சிறைக் கைதிகளின் குடும்பங்களுக்கு முடக்கப்பட்ட அவர்களின் மில்லியன் டொலர் நிதி மீளக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

120 பேரைக் கொண்ட இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் 87 பேர் இச்சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். இச்சட்டத்தின்படி பலஸ்தீன் அதிகார சபையின் சார்பில் இஸ்ரேலினால் வசூலிக்கப்பட்ட நிதி பலஸ்தீனர்களுக்கு விடுவிக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. ஆயினும், இஸ்ரேலின் இந்தச் சட்டத்தின் மூலம் பலஸ்தீனர்களுக்கு வேறு வகையான தீங்குகள் ஏற்படுமா என்பது குறித்து விவாதிக்கப்படுகின்றது.



35,000 பலஸ்தீனர்கள் இஸ்ரேலினால் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களது நிதியை இஸ்ரேல் முடக்கி வைத்துள்ளது. மொத்தமாக 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளன. ஆனால் இது ஒரு கண்துடைப்பு முயற்சி என்று ஜமால் ஸஹல்கா எச்சரித்துள்ளார். ஏனெனில் 2018 இற்கான பலஸ்தீன் அதிகார சபையின் மொத்த வரவு செலவுத் திட்டம் 5 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

பலஸ்தீனர்களிடமிருந்து இஸ்ரேல் பெருமளவு வரியை அறவீடு செய்கிறது. பலஸ்தீன் அதிகார சபையே இஸ்ரேலுக்கு வரி செலுத்தி வருகின்றது. இந்நிலையில் இஸ்ரேலின் புதிய சட்டம் ஒரு கண்துடைப்பு என்றும், பலஸ்தீனர்களின் சொத்துக்களை இஸ்ரேல் கொள்ளையடிக்கின்றது என்றும் சிரேஷ்ட பலஸ்தீன் அதிகாரி ஹனான் அஷ்ராவி தெரிவித்துள்ளார்.

## அறிவியல் ஆராய்ச்சிக்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து இஸ்ரேல் நீக்கம்



ஐரோப்பிய ஒன்றியம் அறிவியல் ஆராய்ச்சிகளுக்காக ஒதுக்கும் நிதித் திட்டத்திலிருந்து இஸ்ரேலை விலக்கிக் கொள்ளுமாறு 154 சர்வதேச அமைப்புகள் விடுத்த கோரிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் அங்கீகரிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்நிதி இஸ்ரேலிய இராணுவக் கம்பனிகளுக்கே ஒதுக்கப்படவிருந்தது.

இராணுவத் துறை சார்ந்த தொழில்நுட்ப ஆய்வுகளுக்கு 115 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கி வந்தது. ஆராய்ச்சி என்ற பெயரில் ஐரோப்பியர்கள் செலுத்தும் வரி சிவிலியன்களைக் கொலை செய்யவும் நிலங்களை ஆக்கிரமிக்கவுமே பயன்படுத்தப்படுவதாக 16 நாடுகளைச் சேர்ந்த 154 நிறுவனங்கள் ஐரோப்பிய ஒன்றியத்திடம் தெரிவித்துள்ளன.

# ஈரானின் எண்ணெய் ஏற்றுமதியை பூச்சிய நிலைக்குக் கொண்டுவருவதே எங்கள் நோக்கம் -ட்ரம்ப்



ஈரான் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் கச்சா எண்ணெய்யின் அளவை முழுமையாக நிறுத்துவதே தனது நோக்கம் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார். ஈரானுடனான அணுச் செறிவாக்கல் ஒப்பந்தத்திலிருந்து விலகிக்கொள்வதாக ஒருதலைப்பட்சமாக அறிவித்த ட்ரம்ப் அரசாங்கம், ஈரான் மீது பாரிய பொருளாதாரத் தடைகளை விதித்து வருகிறது.

அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஈரானை பேச்சுவார்த்தைக்கு வரவழைப்பதற்கு அதிகபட்ச பொருளாதார, ராஜதந்திர அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டியுள்ளது என்று தெரிவித்துள்ளது.

இராஜாங்கத் திணைக்கள கொள்கை வகுப்பாளர் பிரைன் ஹூக் பத்திரிகையாளரிடம் கருத்து வெளியிட்டபோது, ''ஈரான் ஒரு இயல்பு நிலையில் உள்ள நாடல்ல. அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளை நீக்கிக் கொள்ள வேண்டுமாயின் 12 கோரிக்கைகளுக்கு ஈரான் சாதகமாகப் பதிலளிக்க வேண்டும். சாதாரண நாடுகள் ஏனைய நாடுகளைப் பயமுறுத்துவதில்லை. ஏவுகணைகளைப் பரவலாக்கம் செய்து தமது சொந்த மக்களை பட்டினியில் போட விரும்புவதில்லை எனவும் ஹூக் தெரிவித்தார்.

''இப்போது எங்கள் நோக்கம் ஈரானிய அரசாங்கத்தை மாற்றுவது. அதன் மூலம் தலைமைத்துவத்தின் நடத்தையை மாற்றி, ஈரானிய மக்கள் விரும்புவதை சாத்தியப்படுத்துவதே'' என்றும் ஹூக் தெரிவித்தார்.

# ஜெரூசலத்தில் துருக்கியின் செல்வாக்கை எச்சரிக்கும் ஜோர்தான், சவூதி, இஸ்ரேல்

துருக்கியில் அர்துகானின் AKP கட்சி வெற்றி பெற்றதை அடுத்து கிழக்கு ஜெரூசலத்தில் துருக்கியின் செல்வாக்கு அதிகரித்து விடுமென இஸ்ரேல், சவூதி, ஜோர்தான் ஆகிய மூன்று நாடுகளும் எச்சரித்துள்ளன. அம்மானிலுள்ள சிரேஷ்ட அதிகாரியொருவர் இஸ்ரேலின் ஹாரட்ஸ் பத்திரிகைக்கு கருத்து வெளியிட்டபோது, ''ஜெரூசலத்தின் மீது துருக்கிக்கு உள்ள உரிமையை அர்துகான் மீளவும் கோருவதற்கு முயற்சிக்கின்றார். இந்த விடயத்தில் இஸ்ரேல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்'' என்று அவ்வதிகாரி தெரிவித்துள்ளார்.

பதிலளித்துள்ள இஸ்ரேல், துருக்கிய அரசாங்கம் மற்றும் அமைப்புகளின் நடவடிக்கைகளை தாம் கூர்மையாக அவதானித்து வருவதாகவும் துருக்கியிலிருந்து பெருந்தொகை நிதி கிழக்கு ஜெரூசலத்திலுள்ள இஸ்லாமிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது. துருக்கி கிழக்கு ஜெரூசலத்தில் நிலங்களை வாங்குவதற்கு முயற்சிப்பதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

2017 ஆம் ஆண்டில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை எதிர்த்து பல்லாயிரக் கணக்கான துருக்கியர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். அதேவேளை, ஜெரூசலத்திற்கு வருகை தரும் துருக்கியர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. கடந்த மாதம் அங்காராவிலுள்ள இஸ்ரேலிய தூதரை துருக்கி வெளியேற்றியது. காஸா எல்லையில் 135 பலஸ்தீனர்கள் இஸ்ரேலினால் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே துருக்கி தூதுவரை வெளியேற்றியமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் இந்நூற்றாண்டின் ஒப்பந்தம் எனக் கூறப்படும் சவூதிக்கும் இஸ்ரேலிய யஹூதிகளுக்கும் இடையிலான ரகசிய ஒப்பந்தம் குறித்து கலந்துரையாடுவதற்கான கூட்டமொன்று சவூதி-இஸ்ரேலிய புலனாய்வு அதிகாரிகளுக்கிடையில் இடம்பெற்றுள்ளது. அர்துகானின் செல்வாக்கை மட்டுப்படுத்துவதற்கு சவூதி அறேபியா தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றது. இப்பின்னணியிலேயே அர்துகானின் வெற்றியை அடுத்து சவூதி இணையங்கள் அர்துகானை அவமானப்படுத்தும் வகையில் பல்வேறு [illegible]

# நூற்றாண்டு ஒப்பந்தம் விரைவில் அமுலுக்கு வரும்

## - சவூதி இளவரசர் காலித் பின் பர்ஹான் அஸ்ஸஊத்



இஸ்ரேலுக்கும் சவூதி அறேபியாவுக்கும் இடையிலான நூற்றாண்டு ஒப்பந்தத்தை அவசரமாக அமுல்படுத்தி அமெரிக்காவை திருப்திப்படுத்துவதற்கு இளவரசர் முஹம்மத் பின் சல்மான் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு வருகிறார் என்று மற்றொரு இளவரசரான காலித் பின் பர்ஹான் அஸ்ஸஊத் தெரிவித்துள்ளார்.

குடும்பத்திற்குள் ஏற்பட்டுள்ள முரண்பாட்டை அடுத்து ஜேர்மனியில் தஞ்சம் கோரியுள்ள இளவரசர் காலித், அங்கிருந்தவாறு அல் கலீஜ் இணையத்தளத்திற்கு வழங்கிய பிரத்தியேகப் பேட்டியிலேயே இதனைத் தெரிவித்தார்.

அடுத்த கட்டம் தான் மன்னராக மாறுவதற்கு அமெரிக்காவை திருப்திப்படுத்துவது முஹம்மதின் உடனடித் தேவையாகியுள்ளது. இதனால் அவர் இஸ்ரேலுக்கு (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஜப் தையிப் அர்துகான்

• முஷாஹித் அஹ்மத்

சமீபத்தில் துருக்கியில் இடம்பெற்ற ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் நீதிக்கும் அபிவிருத்திருக்குமான கட்சியினரும் அதன் தலைவரும் அமோக வெற்றியீட்டியுள்ளனர். ஜனாதிபதித் தேர்தலில் 53% வாக்குகளைப் பெற்றதன் மூலம் துருக்கியின் வரலாற்றில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதல் ஜனாதிபதியாக அர்துகான் மாறியுள்ளார்.

2017 இல் நடந்த அரசியலமைப்பு மாற்றங்களுக்கு ஏற்பவே இரு தேர்தலும் ஒரே முறையில் நடைபெற்றதோடு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமைக்கான அங்கீகாரமும் வழங் கப்பட்டது. கடந்த கால அரசியல் மாற்றத்திற்கு ஏற்ப மீண்டும் புதிய திருத்தங்களை மேற்கொள்வதற்கும் புதிய அரசாங்கம் தயாராகி வருகின்றது.

நிறைவேற்று அதிகாரம் பெற்றுள்ள ஜனாதிபதி அர்துகான் முன்பொரு போதும் இல்லாத வகையிலான அதிகாரங்களை தன்னிடம் தக்கவைத்துக் கொள்வதற்கு தேர்தல் வெற்றி வாய்ப்பளித்துள்ளது. உப ஜனாதிபதி, அமைச்சர்கள், நிர்வாகத் துறையின் உயர் அதிகாரிகள், உயர் நீதிமன்ற நீதியரசர்கள் போன்றோரை நியமிக்கும் அதிகாரம் அர்துகானுக்குக் கிடைத்துள்ளது. அதேபோன்று பாராளுமன்றத்தை விரும்பும் நேரம் கலைப்பதற்கும் அவசரகால நிலையைப் பிரகடனம் செய்யவும் அர்துகான் அதிகாரம் பெற்றுள்ளார்.

கடந்த 16 ஆண்டுகளாக அதிகாரத்தில் இருந்து வரும் AKP துருக்கியின் எதிர்கால முன்னேற்றத்திற்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி




இதேவேளை, AKP ஆதரவாளர் ஒருவர் ஸ்தன்பூலில் உள்ள கட்சி அலுவலகத்திற்கு முன்பாக அல் ஜஸீராவுக்கு வழங்கிய பேட்டியில், ''நாம் அர்துகானை துருக்கியின் முதல் நிறைவேற்று ஜனாதிபதியாகத் தெரிவுசெய்துள்ளோம். இந்த வெற்றிக்காக அவருக்காக நாம் அதிகம் பிரார்த்தனை செய்துள்ளோம். துருக்கியின் பொருளாதாரத்தோடு விளையாடி வந்த மேலைய ஏகாதிபத்திய சக்திகளின் சதித் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இனி துருக்கி 100% தனது வழியில் சுதந்திரமாகச் செல்லும். 1923 இல் துருக்கியை முடக்கிப் போடுவதற்கு ஐரோப்பிய காலனித்துவம் அப்போதைய துருக்கியின் பலவீனப்பட்ட அரசாங்கத்தோடு செய்து கொண்ட ஒப்

நாட்டில் 1978 இல் தொடங்கிய குர்திஷ் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் அர்துகான் 2002 இலேயே பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினார். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் இரு தரப்பு பொருளாதார உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திட்டார்.

கடந்த காலங்களில் அவரது ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு வெளிநாடுகளின் ஆதரவு பெற்ற இராணுவக் கும்பல் பல முறை முயற்சித்துத் தோல்வி கண்டது. இந்தப் பின்னணியிலேயே ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் பார்க்க வேண்டியுள்ளது.

ஸ்தன்பூல் செஹிர் பல்கலைக்கழகப் பேராசிரியர் மசூத் யெசின், ஸ்தன்பூல்

மீளவும் இஸ்லாமிய உலகின் தலைமைப் பாத்திரத்தை ஏற்கும் நிலைக்கு துருக்கி வந்து சேரும்.

இவற்றையெல்லாம் மிகச் சரியாகக் கணக்குப் பார்க்கும் எதிரிகள் மற்றும் அறபு சியோனிஸ்டுகள், அர்துகான் மீதும் அவரது அரசாங்கத்தின் மீதும் அவதூறுகளை அள்ளி வீசுகின்றனர். ஒற்றை மனிதரிடம் அதிகாரத்தைக் குவிப்பது சர்வதிகாரத்திற்கு வழிகோலும் என்றும், 2016 ஜூலையிலிருந்து அதாவது இராணுவ சதிப் புரட்சியை அடுத்து அமுலில் உள்ள அவசரகாலச் சட்டம் நீடிக்கும் எனவும் மேற்கு நாடுகளுடனான உறவு மென்மேலும் விரிசலடையும் எனவும் எதிர்க்கட்சிகளும் அவற்றைத் தூண்டும் வெளிநாட்டு புல்லுருவிகளும் விமர்சித்து வருகின்றனர்.

இதேவேளை, சவூதி அறேபியா மற்றும் அதன் அறபு நேச நாடுகள் துருக்கியின் இந்த மீளெழுச்சியை அச்சத்தோடு பார்க்கின்றன. துருக்கி மாதிரி (Turkey Model) மிதவாதத்தை அடிப்படையாகக் கொண்டது. துருக்கியின் சமீபகால அரசியல், பொருளாதார மாற்றங்கள் துருக்கியின் எல்லைக்குள் மாத்திரம் பிரதிபலிப்பவை அல்ல. அறபு இஸ்லாமிய உலகெங்கும் அர்துகானின் வெற்றியைக் கொண்டாடும் கோடிக் கணக்கான மக்கள் இருப்பதற்குக் காரணம் உண்டு.

கொண்டுள்ள மியன்மார் முஸ்லிம்கள் மற்றும் ஆபிரிக்க முஸ்லிம் நாடுகளின் விவகாரங்களில் துருக்கி கவனம் செலுத்தி வருகின்றது. இதனால் அர்துகானின் வெற்றியை சகித்துக் கொள்ளாத எதிரிகள், சர்வாதிகாரம் மற்றும் ஜனநாயக விரோத அணுகுமுறைகள் குறித்து விமர்சிக்கின்றனர். அமெரிக்கா ஜனநாயகத்தின் குறியீடாகப் போற்றப்பட்டாலும், இன்று அந்நாட்டின் உச்சநீதிமன்றங்களின் நீதிபதிகள் டொனால் ட்ரம்பின் முட்டாள்தனமான வெளிநாட்டுக் கொள்கைகளுக்கும் புலம்பெயர்பவர்கள் குறித்த தீர்மானங்களுக்கும் ஜால்ரா போடுகிறார்கள்.

நெடன் யாஹுவுக்கு விரும்பிய நேரத்தில் போரைப் பிரகடனம் செய்யும் தனியுரிமை வழங்கப்பட்டுள்ளது. பிரான்ஸின் மெக்ரோன், ஜேர்மனியின் அன்ஜலா மார்கல் எல்லோருமே பல வகையில் ஜனநாயக முகமூடி அணிந்துள்ள சர்வதிகாரிகள்தான். இத்தனைக்கும் அர்துகான் எனும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மாத்திரமே சர்வதிகாரி என்று விமர்சிப்பதில் எந்த அரசியல் நியாயமும் இல்லை.

துருக்கியின் ஒவ்வொரு நகர்வும் நேர்மையாக சிந்திப்பவர்களுக்கு நம்பிக்கையளிக்கின்றது. எதிரிகளின் சூழ்ச்சித் திட்டங்களைத் தவிடு பொடியாக்கி, வெற்றியை நோக்கி வீறுநடை போடும்



## காஸிம்பாஷாவிலிருந்து சர்வதேசத்திற்கு

அர்துகான் ஸ்தன்பூலுக்கு சமீபமாகவுள்ள காஸிம்பாஷா எனும் கிராமத்தில் 1954 பெப்ரவரி 24 இல் பிறந்தார். தந்தை அஹ்மத் அர்துகான். தாய் தென்ஸில் அர்துகான். அர்துகானுக்கு 13 வயதாக இருந்தபோது அவரது குடும்பம் ஸ்தன்பூலுக்குப் புலம்பெயர்ந்தது. காஸிம்பாஷாவில் ஆரம்பக் கல்வியை நிறைவுசெய்த அர்துகான், இமாம் ஹாதிப் பாடசாலையில் இரண்டாம் நிலைக் கல்வியைப் பூர்த்தி செய்தார். பின்னர் மர்மரா பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவத் துறையில் உயர் கல்வியைப் பூர்த்தி செய்தார். மர்மரா பல்கலைக்கழகம் பொருளியல் மற்றும் வணிக விஞ்ஞானங்களுக்கான கல்லூரி என்ற பெயரிலேயே ஆரம்பத்தில் இயங்கியது.

தொடக்கத்தில் தொழில் ரீதியில் அர்துகான் ஒரு உதைப்பந்தாட்ட வீரர். பிரபலமான உதைப்பந்தாட்டக் கழகங்களில் பங்குபற்றியிருந்த அவர், தேசிய ரீதியில் புகழ்பெறும் அளவுக்கு முன்னேறியவர்.

1978 இல் இமைன் குல்பரானை மணந்த அர்துகானுக்கு இரண்டு ஆண்கள், இரண்டு பெண்கள். அஹ்மத் புராக், நஜ்முத்தீன் பிலால் ஆகிய ஆண் பிள்ளைகளும், இஸ்ரா மற்றும் சுமையா ஆகிய பெண் பிள்ளைகளும் உள்ளனர். இவரது தாய் தன்ஸில் அர்துகான் 2012 இல் வபாத்தானார். தந்தை அஹ்மத் அர்துகான் 1988 இலேலே மரணித்தார். தந்தை நக்ஷபந்தியா தரீக்காவில் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

மர்மரா பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியைத் தொடர்ந்த காலத்தில் அங்கு வெப்பவியல் துறையில் பேராசிரியராகப் பணிபுரிந்த அர்பகானுடன் அர்துகானுக்கு தொடர்பு ஏற்பட்டது. 1972 இல் பேராசிரியர் அர்பகான் ஆரம்பித்த ஸலாமா கட்சியில் இணைந்து பணியாற்றத் தொடங்கினார். அக்கட்சி தடைசெய்யப்பட்டபோது 1983 இல் ஆரம்பிக்கப்பட்ட ரபா கட்சியில் தொடர்ந்து பணியாற்றினார்.

1994 இல் ரபா கட்சியின் சார்பில் மாநகர ஆட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற அர்துகான் ஸ்தன்பூல் மேயராகத் தெரிவுசெய்யப்பட்டார். 1994 முதல் 1998 வரை ஸ்தன்பூல் நகர மேயராக அவர் பதவி வகித்த காலம், அவரது அரசியல் வாழ்வில் பொற்காலமாகும். ஸ்தன்பூல் பசுமை நகராக மாற்றப்பட்டதோடு, ஏற்கனவே அந்நகரில் அமுலில் இருந்த குடிநீர் வெட்டு, மின்சாரத் துண்டிப்பு என்பவற்றை நீக்கி, முழு நேரமும் இவ்வசதிகளைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை வழங்கினார்.

நகரெங்கும் நிறைந்திருந்த திண்மக் கழிவுகள் மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்பட்டன. நேர்மையும் சமூக நோக்கும் கொண்ட தலைவர் என்பதை அவரது அர்ப்பணமும் தூர நோக்கும் வெளிப்படுத்தியது. நகரின் வாகன நெரிசலை பெருமளவு குறைத்தார். ஊழல் மோசடியை இல்லாதொழித்தார். நகர சபைக்கு வரும் அனைத்து வருமானங்களும் முறையாகப் பயன்படுத்தப்பட்டன. இதற்காக UN Habitat நிறுவனம் அர்துகானுக்கு விருது வழங்கி கௌரவித்தது.

பேராசிரியர் அர்பகானின் அனைத்துக் கட்சிகளும் (ஸலாமா, ரபா, பழீலா) தடைசெய்யப்பட்டதை அடுத்து, அதிலிருந்து வெளியேறி 2001 இல் நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியை ஸ்தாபித்தார். அதன் இணை நிறுவனராக விளங்கியவர் அப்துல்லாஹ் குல், தாவூத் ஒக்லூ போன்றவர்கள். இந்த நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியே இன்று துருக்கியை பல்வேறு அரசியல், பொருளாதார சாதனைகளை நிலைநாட்டி வருகின்றது.

முறையொன்றே தீர்வு என வலியுறுத்தி வந்துள்ளது. ஸ்திரமான அரசாங்கம், பொருளாதார வளர்ச்சி, ஜனநாயகத்தைப் பலப்படுத்தல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் போன்ற இலக்குகளை அடைய வேண்டுமாயின், இன்றைய துருக்கிக்கு இத்தகையதோர் ஜனாதிபதி முறைமை அவசியம் என அர்துகானும் கூறி வந்தார்.

தேர்தல் முடிவுகள் பலருக்குப் பயத்தை உருவாக்கியுள்ளது. சிலர் பாரிய குற்றச்சாட்டுக்களையும் விமர்சனங்களையும் முன்வைத்து வருகின்றனர். அதேவேளை AKP இற்கு வாக்களித்த பெரும்பான்மை மக்கள் அர்துகானின் மீள்வருகையை ஆவலோரும் எதிர்பார்ப்புடனும் பார்க்கின்றனர்.

துருக்கியின் பிரபலமான எழுத்தாளரும் அரசியல் ஆய்வாளருமான ஊனி ஒஸ்குரல், அர்துகானின் வெற்றி குறித்து இப்படி எழுதுகிறார். ''நீண்டகாலத்தில் துருக்கியை ஸ்திரமான நாடாக உருவாக்குவதற்கு நிறைவேற்று முறை உதவும். அர்துகானும் அவரது குழுவும் அரசியலமைப்பில் தேவையான திருத்தங்களைச் செய்து கொண்டு நாட்டை மென்மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கு இது வாய்ப்பளிக்கும். ஆயினும், தொடக்கத்தில் சில பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து, அவற்றுக்குத் தீர்வு காண வேண்டிய அனுபவம் அவர்களுக்குக் கிடைக்கும்'' என்கிறார்.

பந்தம் 2023 இல் முடிவுக்கு வருகின்றது. அதன் பின்னர் துருக்கியின் பலத்தையும் பொருளாதார சக்தியையும் கண்டு உலகமே வியக்கப் போகின்றது'' என்கிறார்.

2001 இல் நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி ஸ்தாபிக்கப்பட்டது. 2002 தேர்தலில் அமோக வெற்றி பெற்ற இக்கட்சி, 2007, 2011, 2015 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற தேர்தல்களிலும் வெற்றி பெற்று 16 ஆண்டுகளாய் ஆட்சியில் நீடிக்கின்றது. 1923 இல் உஸ்மானிய பேரரசு ரத்துச் செய்யப்பட்ட பின்னர் எந்தவொரு அரசாங்கமும் இரண்டு ஆண்டுகளுக்குக் கூட நீடிக்கவில்லை. அந்த வகையில் அர்துகானின் முதல் அரசியல் சாதனை; நாட்டில் அவர் உருவாக்கிய அரசியல் ஸ்திரப்பாடுதான்.

அதேபோன்று துருக்கியின் பொருளாதாரம், கீழ்க்கட்டுமானம் என்பவற்றிலும் கடந்த 16 ஆண்டுகளில் வியத்தகு சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன. வீதி அபிவிருத்தி, புதிய விமான நிலையங்கள், நாட்டின் சகல நகரங்களையும் வேகமாக ஒருங்கிணைக்கின்ற புகையிரத வலையப்பு என்பன அர்துகானின் அபிவிருத்தித் திட்டங்களில் முக்கியமானவை.

அதேபோன்று வர்த்தக பிராந்தியங்கள், கைத்தொழில் ஆலைகள், ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட உற்பத்தி நிறுவனங்கள் கடந்த 16 ஆண்டுகளில் பெருமளவு வளர்ச்சி கண்டுள்ளன.

மேயராக 1994 இல் பதவி வகித்த அர்துகான், கடந்த 20 ஆண்டுகால இடைவெளியில் நாட்டின் முதல் நிறைவேற்று ஜனாதிபதியாக மாறியமை குறித்து இப்படி எழுதுகிறார்:


''துருக்கியின் முதல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி எனும் கனவை மெய்ப்பிப்பதற்கு அர்துகான் மிக சாமர்த்தியமாக காய்களை நகர்த்தி வந்தார். அவருக்கு எதிராக இருந்த எத்தனையோ தடைகளையும் முட்டுக்கட்டைகளையும் நுணுக்கமாகத் தாண்டி வந்தார். MHP உடன் தற்போது அவர் கூட்டிணைந்துள்ளார். இதனால் சில விட்டுக் கொடுப்புகளையும் அவர் செய்ய வேண்டியிருக்கும். CHP பிரதான இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்தால் நிறைவேற்று அதிகாரத்தை மிக வசதியாகக் கையாளும் வாய்ப்பு அவருக்குக் கிடைக்கும்'' என்கிறார் மசூத் யெசின்.

ஒரு வருடம் தேர்தலை முற்படுத்திய அர்துகான், இரண்டு முறை பதவி வகிக்கலாம் என்கின்றது புதிய அரசியலமைப்புச் சட்டம். அதன்படி 2026 ஆம் ஆண்டு வரை (இன்னொரு முறை வெற்றி பெற்றால்) அர்துகான் பதவியில் நீடிக்க முடியும். இந்த இடைவெளிக்குள் துருக்கியை கட்டிப் போட்டிருக்கின்ற நூறாண்டு கால ஒப்பந்தம் முடிவுக்கு வந்து விடும். துருக்கி எல்லா வகையிலும் எழுச்சியடைவதற்கான

முஸ்லிம் உலகம் குறித்த துருக்கியின் அக்கறையும் ஈடுபாடுமே இதன் மூல காரணமாகும். மத்திய கிழக்கில் தனிமைப்படுத்தப்பட்ட கட்டார், பத்தாண்டுகளுக்கு மேலாக பொருளாதார முற்றுகையின் கீழுள்ள காஸா, உலகிலேயே மிகப் பாரிய சோதனையை எதிர்

அதன் திருப்பங்களில் ஒன்றே நடந்து முடிந்த தேர்தல்கள். 2023 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதன் உண்மையான விளைவுகளை துருக்கி மட்டுமன்றி, ஒட்டுமொத்த இஸ்லாமிய உலகும் நிச்சயம் கண்டுகொள்ளும். அதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"துருக்கியில் இன்று சுமார் 30 லட்சம் அகதிகள் உள்ளனர். ஜோர்தானில் 27 லட்சம் அகதிகள் உள்ளனர். இது அந்த நாட்டின் சனத் தொகையில் சுமார் 41 வீதமாகும். லெபனானில் 15 லட்சம் சிரியா நாட்டு அகதிகள் உள்ளனர். அந்த நாட்டு சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்காக இது அமைந்துள்ளது."

# முஸ்லிம் உலகின் மீது திணிக்கப்படும் அகதி நெருக்கடி

• லத்தீப் பாரூக்

அமெரிக்கா, ஐரோப்பா ரஷ்யா மற்றும் இஸ்ரேல் தலைமையில் பயங்கரவாதத்துக்கு எதிரான தாக்குதல் என்ற போர்வையில்; முஸ்லிம் நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்கள் உலக முஸ்லிம் நாடுகளை பல நூற்றாண்டுகள் பின்னோக்கித் தள்ளியதோடு மட்டுமன்றி மில்லியன் கணக்கான முஸ்லிம்களை அகதிகளாக்கியும் உள்ளது. முஸ்லிம்களை பின்தங்கிய நிலையிலேயே வைத்திருப்பதற்கான மற்றும் இஸ்லாம் ஒரு சக்தியாக மீண்டும் உருவெடுப்பதை தடுப்பதற்கான ஒரு திட்டமிட்ட சதியே இதுவாகும்.

"குட்பை ஐரோப்பா ஹலோ குழப்ப நிலை" என்ற நூலை எழுதி உள்ள வாஷிங்டனைச் சேர்ந்த சட்டத்தரணி ஜே.மைக்கல் ஸ்பிரிங்மன் ஜெர்மனி இந்தியா மற்றும் சவூதி அரேபியா ஆகிய நாடுகளில் பணியாற்றிய முன்னாள் ராஜதந்திரியும் ஆவார். அவர் தனது நூலில் அகதிப் பிரச்சினை அமெரிக்காவாலும் ஐரோப்பாவாலும் உற்பத்தி செய்யப்பட்டது என்றும் அது ஒரு பெரும் சதுரங்கப் பலகை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆக்கிரமிப்புக்கள் மூலம் நாடுகளை வலுவிழக்கச் செய்வது, மத்திய கிழக்கில் அமெரிக்க இலக்கினை அடைவதற்காக பாரிய அளவில் அந்த நாடுகளை வேவு பார்ப்பது, புலம்பெயர் அலைகளை உருவாக்குவது, வடக்கு மேற்கு என ஐரோப்பாவை பிளவு பட வைப்பது குறிப்பாக ஜெர்மனியை சீர்குலைப்பது, ஜெர்மனிக்கு சொந்தமான அகதித் திட்டம் ஒன்றை உருவாக்குவது, மலிவான தொழிலாளர்களாக மக்களை புலம் பெயரச் செய்யும் வகையில் அதை வடிவமைப்பது போன்ற திட்டங்களை உள்ளடக்கிய இந்தச் செயற்பாடுகளை அமெரிக்க புலனாய்வுச் சேவைகள் இலகுவாக்கி விட்டன என்று குறிப்பிட்டுள்ள ஸ்பிரிங்மேன், புகலிடம் கோருபவர்களின் துயரங்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

சிரியா மீதும் ஏனைய நாடுகள் மீதும் சட்ட விரோதமாக நடத்தப்பட்ட இராணுவ ஆக்கிரமிப்புக்களின் பயங்கர வெளிப்பாடாக இது அமைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இஸ்ரேல் உற்பட மேற்குலகத்தால் தொடுக்கப்பட்ட வேண்டத்தகாத யுத்தங்களின் விளைவுகளே இவை. இஸ்ரேல் என்பது ஒரு பயங்கரவாத அமைப்பு என்றும் வெளிப்படையாகச் சாடும் ஸ்பிரிங்மேன், குழப்பங்களை ஏற்படுத்த மட்டுமே அது எப்போதும் துணை போயுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஒட்டு மொத்தத்தில் இந்த சதித் திட்டங்களின் வடிவமைப்பானது அமெரிக்க ராஜ்ஜியத்தின் முன்னேற்றங்களை கருத்திற் கொண்டவை. அதன் விளைவாக ஏற்படும் குழப்பங்கள் இரத்தக் கறை படிந்த மூலோபாயங்களைக் கொண்டவை எனக் குறிப்பிடும் அவர், அதற்கான பல சான்றுகளையும் முன்வைத்துள்ளார். ஐரோப்பா கண்டம் பொருளாதார ரீதியாக அமெரிக்காவுக்கு சவால் விடுக்கும் ஒரு பிராந்தியமாக அமைந்து விடக் கூடாது என்பதில் அமெரிக்க மிகவும் கண்ணும் கருத்துமாக உள்ளது என்பதையும் அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

இந்தப் போக்கு 1979ல் தற்போது செயல் இழந்துள்ள அன்றைய சோவியத் ரஷ்யா ஆப்கானிஸ்தான் மீது நடத்திய ஆக்கிரமிப்போடு தொடங்கியது. அதன் பிறகு தான் ஒவ்வொரு முஸ்லிம் நாட்டுக்கு எதிராகவும் போர் தொடுக்கப்பட்டது. ஆக்கிரமிப்புக்களும் நடத்தப்பட்டன. முஸ்லிம் நாடுகள் மீது குண்டு மழை பொழியப்பட்டது. நாடுகள் அழிக்கப்பட்டன. மில்லியன் கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். மேலும் பெருந் தொகையானவர்கள் அகதிகளாக்கப்பட்டனர். முஸ்லிம் நாடுகளின் வளங்கள் தொடர்ந்து சூரையாடப்பட்டன. அந்த நாடுகளில் கைக்கூலிகள் பதவிகளில் அமர்த்தப்பட்டனர்.

பொஸ்னியா, கொசோவோ, செச்னியா, சோமாலியா, ஈராக், சிரியா, லிபியா, யெமன், மியன்மாரில் ரோஹிங்யா முஸ்லிம்கள், பிலிப்பைன்ஸில் முஸ்லிம்கள் மீதான படுகொலைகள், பலஸ்தீனத்திலும், காஷ்மீரிலும் இடம் பெறும் படுகொலைகள் என இந்தப் பட்டியல் நீண்டு செல்கின்றது.

ஐ.நா அகதிகள் முகவராண்மை அறிக்கையின் படி இந்த யுத்தங்களும் மோதல்களும் உலகில் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு அகதிகள் எண்ணிக்கையை அதிகரித்துள்ளன. 2015 இறுதியில் இந்த எண்ணிக்கை 65.3 மில்லியன்களாகக் காணப்படுகின்றது. அதற்கு சுமார் ஒரு வருடத்துக்கு முன் இந்த எண்ணிக்கை 59.5 மில்லியன்களாகவே இருந்தது.

ஐ.நா அகதிகள் உயர் ஸ்தானிகர் பிலிப்போ கிறாண்டி விடுத்துள்ள குறிப்பில் "ஒவ்வொரு வருடமும் வேறு நாடுகளுக்கு புலம் பெயரும் முயற்சியில் ஆயிரக்கணக்கான அகதிகள் கடலில் உயிரை விடுகின்றனர். தரையில் யுத்தத்துக்கு அஞ்சி இடம்பெயர முயலும் மக்களின் முயற்சிகளுக்கு நாடுகளின் எல்லைகள் மூடப்பட்டு தடை விதிக்கப்படுகின்றன. எமது அமைப்பின் வரலாற்றில் முதற் தடவையாக அகதிகளின் எண்ணிக்கை 60 மில்லியன்களாகப் பதிவாகியுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த பெரும்பாலான அகதிகள் ஐரோப்பாவுக்கு மிக அண்மையில் இருக்கின்றனர். சில ஐரோப்பிய நாடுகள் இவர்களுக்கு அனுமதி அளிக்கின்றன. இவர்களுள் அநேகமானவர்கள் முஸ்லிம்கள். இந்த நாடுகளில் வாழும் தீவிர வலது சாரி சக்திகள் முஸ்லிம்களுக்கு இவ்வாறு இடம் அளிக்கப்படுவதை கடுமையாக எதிர்த்தும் வருகின்றன.

இந்த நாடுகளை குண்டு வீசி தாக்கி, தகர்த்து அழித்து வரும் பாரிய சக்திகளில் ஒன்று துரதிஷ்டவசமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அகதிகள் தஞ்சம் புகும் ஒரு நாடாகவும் இருக்கின்றது. பூகோள ரீதியான ஆக்கிரமிப்புக்களுக்குப் பின்னால் இருக்கின்ற உண்மைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. உலகைப் புரிந்து கொண்டுள்ள அவதானிப்பாளர்களை இனிமேலும் பொய்யான சாட்டுக்களைக் கூறி ஏமாற்ற முடியாது.

யுத்த வெறியர்களால் உலகில் இழைக்கப்பட்டு வரும் அநீதிகளை மூடி மறைக்க பிரதான பிரிவு ஊடகங்கள் பெரும் பிரயத்தனங்களை எடுத்துள்ளன. இருந்தாலும் உலகின் எல்லா மூலை முடுக்குகளிலும் இந்த யுத்த வெறியர்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் கோஷங்களும் தலைதூக்கத் தொடங்கி உள்ளன. ஆயுத மோதல்களின் பல்வேறு பரிமாணங்களை உள்ளடக்கிய தாக்கங்களை அவை உலகுக்கு பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

லிபிய அகதிகளைத் தடுத்து வைக்கத் தூபமிடும் ஐரோப்பிய யூனியனின் கொள்கைகளை மிக வன்மையாகக் கண்டித்து சர்வதேச மன்னிப்புச் சபை கடந்த மே மாதத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் நடுக்கடலில் லிபிய அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்ட அகதிகள் அழுக்கு நிறைந்த தடுப்பு முகாம்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். அங்கு அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டு அவர்களிடம் இருந்து பணம் பறிக்கும் நடவடிக்கைகளும் இடம் பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நடுக்கடலில் தடுத்து நிறுத்தப்படும் லிபிய அகதிகள் அங்கிருந்து அந்த நாட்டின் சட்டவிரோத புலம்பெயர்ந்தவர்களுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கும் திணைக்களத்தால் நடத்தப்படும் முகாம்களுக்கு (DCIM) மாற்றப்படுகின்றனர். அங்கு அவர்கள் மிகவும் பாரபட்சமாக நடத்தப்படுவதோடு காலவரையறை இன்றி தடுத்து வைக்கப்படுகின்றனர். அங்கு அவர்களது அடிப்படை மனித உரிமைகள் மிக மோசமான அளவுக்கு மீறப்படுகின்றன.

ஐரோப்பிய நாடுகள் இந்த நடவடிக்கைகளுக்கு உடந்தையாகவும் லிபிய அதிகாரிகளுக்கு இந்த விடயத்தில் ஆதரவாக இருப்பதாகவும் உலக அளவில் மனித உரிமை அமைப்புக்கள் பல பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளன. ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப்புடனேயே இந்த அகதிகள் நடுக்கடலில் மறிக்கப்பட்டு மீண்டும் லிபிய அகதி முகாம்களுக்குள் அனுப்பப்பட்டு வருகின் றனர்.

"ஐரோப்பிய நாடுகளின் ஈவிரக்கமற்ற குடிவரவுக் கொள்கைகளால் இந்த மக்கள் பெரும் துன்பங்களுக்கு ஆளாகின்றனர். அதை கண்டும் காணாமலும் இந்த நாடுகள் இருந்து வருகின்றன அது மட்டுமன்றி லிபியா அதிகாரிகள் மேற்கொள்ளும் மூர்க்கத்தனமான செயற்பாடுகளுக்கும் இவை ஆதரவாக இருந்து வருகின்றன" என்று மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியத்துக்கான சர்வதேச மன்னிப்புச் சபையின் பணிப்பாளர் ஹேபா மொராயப் சுட்டிக்காட்டி உள்ளார். சர்வதேச மன்னிப்புச் சபை ஆய்வாளர்கள் இந்த அகதிகளோடு நடத்திய நேர்காணல்களின் போது லிபிய அதிகாரிகளால் தமக்கு இழைக்கப்பட்ட சித்திரவதைகள், பலவந்தமான வேலைகள், பணம் பறித்தல், கொலைகள், கடத்தல்கள், ஆயுதக் குழுக்களின் அட்டகாசங்கள் என்பன பற்றி திடுக்கிடும் தகவல்களையும் வெளியிட்டுள்ளனர்.

2016 மார்ச்சில் ராஜேஷ் மக்வானா அகதிகள் நிலையும் அதற்கு ஐரோப்பாவின் பதிலும் பற்றி தெரிவித்துள்ள தகவலில் இப்படி எழுதி உள்ளார். முற்கம்பி வேலிகள், தடுப்பு முகாம்கள், அந்நிய நாட்டவர்கள் மீதான அச்சம், அரசியல் ஒழுங்கீனம் என எல்லாமே அரசுகளின் கொடூரமான பண்புகளை விளக்குவதாகவே அமைந்துள்ளன. அவர்கள் தேசியவாத நலன் கலந்த போக்கை தீவிரமாகப் பின்பற்றி வருகின்றனர். இதனால் யுத்தம் மற்றும் மோதல்கள் காரணமாக வெளியேறும் அகதிகள் விடயத்தில் இவர்களின் பொறுப்பு மனிதாபிமானம் அற்றதாகவே உள்ளது.



முன்னொருபோதும் இல்லாத வகையில் ஐரோப்பாவை நோக்கி வரும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது. ஆனால் இவர்களை தார்மீக ரீதியாக ஏற்றுக் கொள்ளும் மனிதப் பண்புகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. உடனடி பிரச்சினை முன்னரை விட நன்றாகப் புலப்படுகின்றது. பொறுப்புக்களை பகிர்ந்து கொள்ளும் விடயத்தில் சர்வதேச சமூகம் இழிவான தோல்வியைத் தழுவி உள்ளது. சர்வதேச சட்டங்களின் பிரகாரம் புகலிடம் கோருபவர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க வளங்கள் அவசியமாகின்றன.

எவ்வாறேனும் ஐரோப்பிய யூனியன் முழுவதும் தேவைப்படும் உடனடி கரிசனை கொள்கை வகுப்பாளர்கள் தீவிர வலதுசாரி மற்றும் குடியேற்றத்துக்கு எதிரான குழுக்களின் செல்வாக்கின் கீழ் சிக்குண்டுள்ளமையாகும். இந்த நிலை அரசுகள் அகதிகள் விடயத்தையும் குடியேற்ற வாசிகள் விடயத்தையும் எவ்வாறு கையாள வேண்டும் என்ற தீவிர விவாதங்களைத் தோற்றுவித்துள்ளன. இனரீதியான சகிப்புத் தன்மை அற்ற நிலை பிரஜைகள் மத்தியில் அதிகரித்து வருகின்ற நிலையில் ஐரோப்பிய நாடுகளின் பாரம்பரியமான தாராளப் போக்கு மிக வேகமாக மங்கி வருகின்றது. இந்நிலையில் எந்த விதமான நியாய உணர்வும் கருணையும் அற்ற சர்வதேச அகதிகள் தொடர்பான சட்டத்தை பற்றிப்பிடித்து அதன் வியாக்கியானங்களில் நாடுகள் தங்கி இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அகதிகளுக்கு பாதுகாப்பான சட்ட ரீதியான வழிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு பதிலாக கிரேக்கம் முதல் மேற்கு ஐரோப்பா வரையான புலம் பெயர் பாதையில் உள்ள பல நாடுகள் டொனால்ட் டிரம்ப் தீர்வை அமுல் செய்து வருகின்றன. மக்களை தடுத்து நிறுத்தும் வகையில் மதில்களை கட்டுதல், எல்லைகளை இராணுவ மயமாக்கல், முற்கம்பி வேலிகளை அமைத்தல் என இந்நடவடிக்கைகள் தொடர்கின்றன. ஆவணப்படுத்தப்படாத அகதி கள் (பெரும்பாலானவர்கள் பெண்களும் சிறுவர்களும்) ஐரோப்பிய எல்லைகளில் பிரவேசிக்க முயலுகின்ற போது அவமானப்படுத்தப்படுகின்றனர். சில சந்தர்ப்பங்களில் அவர்கள் மீது வன்முறைகளும் பிரயோகிக்கப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் அவர்கள் உயிர்வாழத் தேவையான அடிப்படை வசதிகள் மிகக் குறைவாகக் கிடைக்கும் வகையிலான இடங்களில் தடுத்து வைக்கவும் படுகின்றனர்.

மேலோட்டமாகப் பார்க்கின்ற போது ஆயுத மோதல்களால் பாதிக்கப்பட்டு தமது உயிர்களைப் பாதுகாக்க முயலும் மக்கள் மீதான ஐரோப்பிய யூனியன் உறுப்பு நாடுகளின் செயற்பாடுகள் இனவாத பாரபட்சம் கலந்தவையாகவே காணப்படுகின்றன.

அகதிகள் விடயத்தில் ஐரோப்பாவின் பொறுப்புக் கூறல் பாரபட்சமானது என்பதில் சிறிதளவே சந்தேகம் இருக்கக் கூடும். தார்மீக ரீதியாக இது ஆட்சேபனைக்கு உரியது. அரசியல் ரீதியாக இது ஆபத்தானது. மக்களது சிவில் உரிமைகளை இது அலட்சியப்படுத்துவதாலும் நீண்ட காலமாகப் பேணப்பட்டு வந்த சமூக விழுமியங்களை இது மீறுவதாலும் சுய தோல்விக்கும் உரியது.

ஐ.நா சாசனத்தின் கீழ் அகதிகளுக்கு உறுதி அளிக்கப்பட்டுள்ள சில ஒத்துழைப்புக்களை வழங்குவதை விடுத்து இத்தகைய கொள்கைகளைப் பேணுவதால் ஐரோப்பாவையே ஆட்டம் காணச் செய்யும் நிலையும் ஏற்படலாம். அரசாங்கங்களின் இந்தப் பிற்போக்குத் தனமானது இஸ்லாம் பற்றி பீதியை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கம் கொண்ட குழுக்களின் கரங்களில் அரசாங்கங்கள் சிக்கி விடவும் வழியமைக்கும். இது ஸ்திரப்பாடற்ற நிலையையும் ஆத்திரமூட்டல் நிலையையும் ஏற்படுத்தி ஐரோப்பிய நாடுகளுக்கு மத்தியில் மோதல்களை ஏற்படுத்தவும் கூடும். அத்தோடு மத்திய கிழக்கிலும் ஐரோப்பாவிலும் பயங்கரவாதத்துக்கு ஆதரவான ஆள்திரட்டலுக்கும் இது வழியமைக்கலாம்.

(பக்.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல பரிணாமங்களில் இலக்கியத் துறையில் உச்சம்தொட்ட கவிஞர் அஸ்மின்

• அனஸ் அப்பாஸ்

இலங்கைத் திருநாட்டின் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலுள்ள பொத்துவில்லை பிறப்பிடமாகக் கொண்ட அஸ்மின், மர்ஹூம் உதுமா லெவ்வை, ஆயிஷா தம்பதியினரின் மூத்த புதல்வராக 1983 மே 02 இல் பிறந்தார். இவர் பொத்துவில் மத்திய கல்லூரியின் பழைய மாணவர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஊடகவியல் துறையில் பட்டம் பெற்றவர்.

சிறு வயது முதலே இலக்கிய ஆர்வளரான அஸ்மினின் ''என்ன தவம் செய்தாயோ'' என்ற முதல் கவிதை 25-03-2000 ஆம் திகதி தினக்குரல் பத்திரிகையில் வெளியானது.

இவர் மரபுக் கவிதை எழுதிவரும் கவிஞராகவும் திரைப்படப் பாடலாசிரியராகவும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும், தொகுப்பாளராகவும் பல பரிணாமங்களில் பிரகாசித்தவர். கவிதைத் துறையில் ஜனாதிபதி விருது (2001), அகஸ்தியர் விருது (2011), கலைமுத்து விருது (2011), கலைத்தீபம் விருது (2011) கவிவித்தகன் (2015) என இருபதுக்கும் மேற்பட்ட தேசிய விருதுகளை பெற்றிருக்கும் இவர், சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருதினை இரண்டு தடவைகள் (2010,2011) பெற்றுள்ளார்.

விஜய் அன்டனியின் இசையில் வெளிவந்த 'நான்' திரைப்படத்திற்காக 'தப்பெல்லாம் தப்பே இல்லை...' என்ற பாடலை எழுதியது முதல் தென்னிந்திய சினிமாத் துறையும், சர்வதேச தமிழ் உலகும் இவரை நோக்கி திரும்பிப் பார்த்தது. சுமார் 50 வருடங்களுக்குப் பின் தமிழ் சினிமாவுக்கு பாடல் எழுதிய இலங்கையர் என்ற பெருமை இதனால் அவருக்கு கிடைத்துள்ளது.

பாடலாசிரியர் ஒருவரை அறிமுகம் செய்யும் நோக்கோடு அனைத்துலக ரீதியில் நடத்தப்பட்ட பாடலியற்றல் போட்டியில் வழங்கப்பட்ட கதைச் சூழலுக்கும் இசைக்கும் ஏற்ப பாடல் எழுதி அதில் 20,000 போட்டியாளர்களுக்குள் முதலாமிடம் பெற்று 'நான்' திரைப் படத்தில் பாடல் எழுதுவதில் ஆரம்பித்து, இன்று பல இந்தியத் திரைப் படங்களுக்கு பாடல் வரிகளை எழுதி வருகின்றார்.

மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்களைப் பற்றி இவர் இயற்றிய 'வானே இடிந்ததம்மா' பாடல் வரிகள் இணையத்தில் பத்து மில்லியனுக்கு அதிகமானோரின் பார்வைகளை ஈர்த்ததுடன், தமிழக முதல்வராகப் பரிந்துரைக்கப்பட்ட ஜெயலலிதாவின் தோழியின் கரங்களால் புகழ்பெற்ற போயஸ் காடன் இல்லத்தில் வைத்து கௌரவிக்கப்பட காரணமாக அமைந்தது.

2000களில் பொத்துவில் பிரதேசத்தை மையமாகக் கொண்டு வெளிவந்த தேடல் எனும் கலை, இலக்கியச் சிற்றிதழின் முதன்மை ஆசிரியராகவும் சுடர் ஒளி வார வெளியீட்டின் கவிதைப் பகுதி ஆசிரியராகவும் பணிபுரிந்த இவர், உணர்வுகள் என்ற பகுதியில் ஈழநிலா என்ற புனைப்பெயரில் ஈழத்தின் இலக்கிய நிகழ்வுகள், எழுத்தாளர்கள் குறித்து தனது மனப்பதிவுகளை எழுதி வந்துள்ளார். 55 வாரங்களாக இவரது பத்திகள் வெளிவந்துள்ளன.

மேலும்

- 2002 ஆம் ஆண்டு ''விடை தேடும் வினாக்கள்''
- 2003 ஆம் ஆண்டு ''விடியலின் ராகங்கள்''

இந்திய புகழ்பெற்ற கவிஞர் வைரமுத்துவின் வாழ்த்துரையுடன் 2013 ஆம் ஆண்டு ''பாம்புகள் குளிக்கும் நதி'' ஆகிய நூல்களை இதுவரை வெளியிட்ட இவர், அடுத்து,

- ஈழநிலாவின் உணர்வுகள் (பத்தி எழுத்து நூல்)
- நிலவு உறங்கும் டயறி (சிறுகதை நூல்)
- தட்டாதே திறந்து கிடக்கிறது (கவிதை)
- நான் பிறந்த கதை
- கவிஞர் அஸ்மின் பாடல்கள்

ஆகிய நூல்களை வெளியிடவும் உத்தேசித்துள்ளார்.

சுயாதீன தொலைக்காட்சியின் சகோதர அலைவரிசையான வசந்தம் தொலைக்காட்சியின் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக தற்போது கடமையாற்றும் இவர் தொலைக்காட்சித் துறையில் பல சர்வதேச பயிற்சிகளை பூர்த்தி செய்துள்ளதுடன், வசந்தம் தொலைக்காட்சியில் இவர் தயாரிக்கும் ''தூவானம்'' கலை இலக்கிய - சஞ்சிகை நிகழ்ச்சி தேசிய தொலைக்காட்சி விருது வழங்கல் நிகழ்வில் மூன்றுமுறை விருது வென்றுள்ளது.

இவருக்கு இதுவரை கிடைத்த அங்கீகார விருதுகள், கௌரவங்கள் வருமாறு:

- மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப்பின் முதலாவது நினைவு நாளை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதலாம் பரிசு -(ஜனாதிபதி விருது). இந்த விருது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் 2001.09.16 அன்று வழங்கப்பட்டது.
- பேராதனை பல்கலைக்கழகத்தின் தமிழ் சாகித்திய விழாவை முன்னிட்டு அகில இலங்கை மட்டத்தில் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் மூன்றாம் பரிசு. (2002)
- பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் பவள விழாவை முன்னிட்டு அகில இலங்கை மட்டத்தில் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதலாம் பரிசு (தங்கப் பதக்கம்- 2003)
- அகில இலங்கை இந்து மாமன்றம் அகில இலங்கை மட்டத்தில் நடாத்திய சொல்லோவிய போட்டியில் சிறப்புப் பரிசு. (2003)
- விபவி கலாசார மையம் அகில இலங்கை மட்டத்தில் நடத்திய கவிதைப் போட்டியில் சிறப்புப் பரிசு. (2003)
- பிரான்ஸ் மகாகவி பாரதியார் மன்றம் சர்வதேச ரீதியாக நடாத்திய கவிதைப் போட்டியில் சிறப்புப் பரிசு. (2007)
- சக்தி தொலைக்காட்சியினால் அகில இலங்கை மட்டத்தில் நடத்தப்பட்ட 'இசை இளவரசர்கள்' போட்டி நிகழ்ச்சியில் பாடலாசிரியருக்கான அங்கீகாரம். (2008)
- இலங்கை தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தினால் 'வியர்வையின் ஓவியம்' கலை நிகழ்வை முன்னிட்டு அகில மட்டத்தில் நடத்தப்பட்ட பாடலியற்றல் போட்டியில் முதலாம் பரிசு. (சிறந்த பாடலாசிரியர் விருது-2010)
- இலங்கை தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தினால் 'வியர்வையின் ஓவியம்' கலை நிகழ்வை முன்னிட்டு அகில மட்டத்தில் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் போட்டியில் இரண்டாம் பரிசு. (2010)
- இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் முதலாவது ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு அகில இலங்கை மட்டத்தில் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் மூன்றாம் பரிசு. (2010)
- 'லங்கா' பத்திரிகை நிறுவனத்தின் புதிய சிறகுகள் - 2011 கலை நிகழ்வை முன்னிட்டு அகில இலங்கை மட்டத்தில் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் சிறப்புப் பரிசு. (2011)
- கண்டி கலை இலக்கிய இரசிகர் மன்றமும் அகிலம் அறிவியல் சஞ்சிகையும் இணைந்து நடத்திய அகில இலங்கை மட்ட கவிதைப் போட்டியில் சிறப்பு பரிசு. (2011)
- இலங்கை தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தினால் 'வியர்வையின் ஓவியம்' கலை நிகழ்வை முன்னிட்டு அகில இலங்கை மட்டத்தில் நடாத்தப்பட்ட பாடலியற்றல் போட்டியில் முதலாம் பரிசு - சிறந்த பாடலாசிரியர் விருது. (2011)
- மலேசியாவில் 2011 இல் நடைபெற்ற 6 ஆவது உலக இசுலாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் கவிக்கோ அப்துல் ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கலந்துகொண்டு கவிதை பாடினார். மலேசியத் துணையமைச்சர் டத்தோ சரவணன் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்.
- இலங்கை 'தடாகம்' கலை, இலக்கிய வட்டத்தினால் கலை, இலக்கிய, ஊடகத் துறையில் ஆற்றிவரும் பணிக்காக 26.6.2011 அன்று பொன்னாடை போர்த்தப்பட்டு அகஸ்தியர் விருதும் கலைத்தீபம் பட்டமும் வழங்கப்பட்டன.
- லக்ஸ்டோ ஊடக அமைப்பினால் கலை, இலக்கிய, ஊடகத்துறையில் ஆற்றிவரும் பணிக்காக 26.6.2011 அன்று 'தங்கப் பதக்கம்' வழங்கப்பட்டு கலைமுத்து பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கபட்டார்.
- இலங்கை தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தினால் 'வியர்வையின் ஓவியம்' கலை நிகழ்வை முன்னிட்டு அகில மட்டத்தில் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் போட்டியில் மூன்றாம் பரிசு. (2012)
- இலங்கை தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தினால் 'வியர்வையின் ஓவியம்' கலை நிகழ்வை முன்னிட்டு அகில மட்டத்தில் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் போட்டியில் முதலாம் பரிசு. (2013)
- 'பாம்புகள் குளிக்கும் நதி' கவிதை நூலுக்காக கவிஞர் எஸ்.பீ. பாலமுருகன் பேனா கலை இலக்கிய விருது சிறப்பு சான்றிதழ். (2014)
- உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளையின் கலை இலக்கிய பண்பாட்டு பெருவிழாவில் கௌரவிப்பு.

தரம் - 9 இல் கற்கும் காலத்தில் கவிதை ஊடாக தனது எழுத்துலக பயணத்தை ஆரம்பித்த கவிஞர் அஸ்மின் இரண்டு தசாப்த காலமாக தமிழ் இலக்கியத்துக்கு ஆற்றி வரும் பங்களிப்பு மகத்தானது. பல பரிணாமங்களில் வெளிப்படும் இவரது ஆக்கங்களுக்கு இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் மட்டுமல்லாது உலக அளவில் அங்கீகாரம் கிடைக்கின்றமைக்கான மந்திரம் அவரது 'படைப்பின் தரம்' என்றால் மிகையாகாது.

# பெண்கள் வெளிச்செல்வதற்காக தங்களை அழகுபடுத்திக்கொள்ளல்


⏭ எனது மனைவி இஸ்லாம் கூறும் ஹிஜாபை அணிகின்ற பெண். என்றாலும் சந்தை, உணவகங்கள் போன்றவற்றுக்கு நாம் வெளியே செல்கின்ற போது வாசனைப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள் போன்றவற்றால் தன்னை அலங்கரித்துக் கொள்கிறாள். அவளுக்கு வீட்டுக்குள் மாத்திரம் அழகு சாதனப் பொருட்களைப் பாவிக்க முடியும். மற்றபடி அதனை விட்டுவிடுமாறு நான் அறிவுறுத்தினேன். எனினும் எவ்விதப் பயனும் நிகழவில்லை. இந்நிலையில் எனது மனைவி இப்படியே தொடர்ந்திருந்தால் நான் அல்லாஹ்வின் முன்னிலையில் விசாரிக்கப்படுவேனா?

**பத்வா:**

சந்தேகமின்றி, பெண்கள் வெளிச் செல்வதற்காக அலங்காரம் செய்து கொள்வது பாவமேயாகும். எனினும் அவள் தனது வீட்டில் இருக்கும் போது வெளிப்படையாகவே தன்னை உச்சபட்சமாக அலங்காரம் செய்துகொள்ளலாம். ''அதிலிருந்து வெளித்தெரிபவற்றைத் தவிர அவர்கள் தமது அலங்காரத்தை வெளிப்படுத்தக்கூடாது.'' (நூர்:31)

இவ்வசனத்திற்கு விளக்கம் அளிக்கும் இப்னு அப்பாஸ்(ரழி) அவர்கள், ''கண்ணிற்கு சுர்மா இடுவது, கைகளுக்கு மருதானி, விரல்களுக்கு மோதிரமென்பவையாகும்'' என்கிறார்.

இவ்வடிப்படையில் ஒரு பெண் வெளிசெல்ல எண்ணுவதற்கு முன்பே



அவளது நிலை இதுவாக இருப்பின், அதாவது கண்களில் சுர்மா, கைகளில் மருதாணி, விரலில் மோதிரம் அணிந்த வளாக இருப்பின் அவள் பின்பு ஹிஜாபை அணிந்துகொண்டு, தலையையும் தனது உடலின் ஏனைய பாகங்களையும் மறைத்தவளாக வெளிச்செல்லலாம்.

இதுதான் ''அதிலிருந்து வெளித் தெரிபவற்றைத் தவிர'' என்பதற்கான இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களது விளக்கமாகும்.

எனினும் அதனை அவள் வேண்டு மென்றே செய்பவளாக இருந்தால் அவள் பாவம் செய்கிறாள். அதாவது அவள் வெளியே செல்வதற்கு உறுதியாகத் தீர்மானித்த பின்பு தன் கைகளை, முகத்தை அழகுபடுத்தி மோதிரத்தையும் அணிவதாகும். இது கூடாது. அவ்வாறு தான் வெளிச்செவதற்காக வாசனைத் திரவியங்கள், அத்தர் வகைகளை பூசுவதும் கூடாது.

நபி(ஸல்) அவர்கள், ''எந்தவொரு பெண்ணும் தனக்கு வாசனை திரவியங் களைப் பூசியவளாக, தன்னை ஒரு கூட்டம் அவ்வாசனையினால் ஈர்க்கப் படும் வண்ணம் செல்பவளாக இருப்பின் அவள் ஒரு விபச்சாரியாவாள்'' என்றார்கள்

ஏனெனில் அவள் மற்றவர்களைத் தன்பால் ஈர்க்க வேண்டுமென்பதற்காக இதனை செய்கிறாள். ... இவ்வாறான சந்தர்ப்பங்களில் பொறுப்பாளியாகிறான். அவன் தனது மனைவியைத் தடுக்க வேண்டும். ஏனெனில் அவளது நிர்வாகி அவன்தான். அவன் இதுகுறித்து விசாரிக்கப்படுவான். அல்லாஹுத்தஆலா கூறுகிறான்:

''விசுவாசம் கொண்டவர்களே! நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் நரக நெருப்பை விட்டும் பாதுகாத்துக்கொள்ளுங்கள். மனிதர்களும் கற்களுமே அதன் எரிபொருட்களாகும்.'' (தஹ்ரீம்: 6)

அவனுக்கு அவளை அதிகாரத்தோடும் பலத்தோடும் தடுக்க முடியும். அது பயனளிக்காவிட்டால் அறிவுரைகள், உபதேசங்கள் கூறவேண்டும். இவ்வாறு அவன் செய்யாவிட்டால் அவன் பாவியாகிறான். மனைவி அல்லாஹ்வின் ஏவல்களை எடுத்து நடக்கின்றவளாக இல்லாத போது கணவனுக்கு அல்லாஹ் அளித்திருக்கும் அந்தஸ்த்தின் மூலமாக அதனை நிலை நிறுத்துவது கடமையாகும்.

''ஆண்கள், பெண்களை நிர்வகிப்போராவர்.'' (நிஸா:34)


அவளுக்கு உபதேசங்கள் அல்லது அறிவுரைப்புக்கள் புரிவதால் மாத்திரம் அல்லாஹ்வின் முன்னால் அவன் நிரபராதியாகிவிட மாட்டான். ஏனெனில் உபதேசம் புரிவதனை அவனுக்கு அதிகாரமில்லாத இன்னொரு பெண்ணுக்கும் செய்ய முடியும்.

ஷெய்க் அப்துர் ரஹ்மான் அப்துல் ஃகாலிக்

தமிழில்: ஸியாப் முஹம்மத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டு இஜ்திஹாத்: அறிமுகமும் பிரயோகமும் (07)



# கூட்டு இஜ்திஹாதின் சட்டவாக்க அந்தஸ்து

• உஸ்தாத் ஆஸாத் அப்துல் முஈத்

கூட்டு இஜ்திஹாதின் முடிவுகளின் சட்ட அந்தஸ்தைப் பற்றி அறிஞர்களுக்கு மத்தியில் பல நிலைப்பாடுகள் உள்ளன. இந்த நிலைப்பாடுகளை நான்கு வகைகளாக நோக்கலாம்.

### முதலாவது நிலைப்பாடு:

கூட்டு இஜ்திஹாதின் முடிவை இஜ்மாவாக கருத முடியாது. ஏனெனில் அனைத்து அறிஞர்களின் உடன்பாட்டில் தான் இஜ்மாஉ உருவாகின்றது. கூட்டு இஜ்திஹாதின் போது அதிகமான அறிஞர்கள் ஒரு கருத்தில் இருக்க, சில அறிஞர்கள் மாற்றுக் கருத்தில் இருக்க முடியும். இதன் மூலம் குறித்த பிரச்சினையில் அனைவரும் ஒரு கருத்தில் உடன்படாத நிலை உள்ளது.

### இரண்டாவது நிலைப்பாடு:

அதிகமான அறிஞர்கள் ஒரு கருத்தில் உடன்பட்டால் அது இஜ்மாஉ என்ற அந்தஸ்தைப் பெறும். இது இமாம் இப்னு ஜரீர் அத்தபரி, அபூ பக்ர் அர்ராஸியின் கருத்து. மற்றும் இமாம் அஹ்மத் இப்னு ஹம்பலின் இரு கருத்துக்களில் ஒரு கருத்து. இதற்கு ஆதாரமாக ''முஹம்மதின் உம்மத்தை அல்லாஹ் வழிகேட்டில் ஒன்று சேர்க்க மாட்டான்'' என்ற கருத்தில் வந்துள்ள ஹதீஸ்களை இவர்கள் ஆதாரம் காட்டுகின்றனர்.

அதே போன்று நபி (ஸல்) அவர்களின் வபாத்திற்குப் பின்னர் அபூ பக்ர் (ரழி) அவர்கள் கலீபாவாக நியமிக்கப்பட்டார்கள். ஆனால் ஆரம்பத்தில் இந்த பைஅத்தில் அனைத்து ஸஹாபிகளும் உடன்படவில்லை. எனினும் பெரும்பான்மையான ஸஹாபிகளின் உடன்பாட்டில் இந்த பைஅத் நிறைவேறியது.

மாற்றுக் கருத்தில் உள்ள சிலரின் நிலைப்பாட்டை கருத்தில் கொள்ள வேண்டும் எனும் போது அது இஜ்மாஉ தோன்றாமல் இருக்க வழிவகுக்கின்றது. ஏனெனில் எந்த ஒரு விடயத்திலும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஒரு சிலராவது மாற்றுக் கருத்தில் இருப்பார்கள்.

### மூன்றாவது நிலைப்பாடு:

பெரும்பான்மையான அறிஞர்களின் உடன்பாடு பின்பற்றப்பட ஏற்றமானது என்ற அந்தஸ்தில் இருக்கும். மாற்றுக் கருத்தைப் பின்பற்றக் கூடாது என்ற வகையிலான முடிவாக இரு காணப்படாது.

### நான்காவது நிலைப்பாடு:

கூட்டு இஜ்திஹாத் என்பதுவே நடைமுறையில் காணப்பட்ட இஜ்மாவாகும். ஆனால் இஜ்மாவுக்கும், கூட்டு இஜ்திஹாதிற்கும் சில வேறுபாடுகள் உள்ளன. இது பற்றி நவீன கால சட்டமேதை கலாநிதி முஹம்மத் கமாலுத்தீன் இமாம் பின்வருமாறு விளக்குகின்றார்.

**ஒன்று:** இஜ்மாஉ என்பது அனைத்து முஜ்தஹித்களின் உடன்பாட்டைக் குறிக்கும். இந்த முடிவு அனைவருக்கும் கட்டாயமாக ஆகிவிடுகின்றது. ஆனால் கூட்டு இஜ்திஹாதைப் பொறுத்தவரை அங்கு அதிகமானவர்கள் உடன்படுவது போதுமானது. இதன் முடிவு அனைவருக்கும் கண்டிப்பானதாக மாறாது.

**இரண்டாவது:** இஜ்மாஉ என்பது ஒரு மத்ஹபை மையப்படுத்தியதாக அமைய மாட்டாது. ஏனைனில் இங்கு அனைத்து அறிஞர்களின் உடன்பாடு அவசியமாகின்றது. ஆனால் கூட்டு இஜ்திஹாத் குறிப்பிட்ட ஒரு மத்ஹபின் அடிப்படையில் இடம்பெறவும் முடியும். இச்சந்தர்ப்பத்தில் அந்த மத்ஹபின் அறிஞர்களின் உடன்பாடு போதுமானது.

**மூன்றாவது:** ஒரே காலத்தில் ஒரு விடயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட இஜ்மாக்கள் தோன்ற முடியாது. ஆனால் கூட்டு இஜ்திஹாதில் ஒன்று மேற்பட்ட முடிவுகள் ஏற்பட முடியும்.

**நான்காவது:** இஜ்மாவான முடிவு அனைவருக்கும் கண்டிப்பானதாக மாறும். ஆனால் கூட்டு இஜ்திஹாதின் முடிவு நாட்டுத் தலைவரின் அங்கீகாரமில்லாமல் அனைவருக்குமான கண்டிப்பான முடிவாக மாற மாட்டாது.

**ஐந்தாவது:** இஜ்மாவான முடிவுகள் அனைத்துக் காலங்கள், அனைத்து இடங்களுக்கும் பொதுவாக முடிவுகளாக இருக்கும். ஆனால் நலன்களை மையப்படுத்தி பெறப்பட்ட இஜ்மாக்களில் மாற்றங்கள் பின்னர் ஏற்படலாம். ஆனால் கூட்டு இஜ்திஹாதின் முடிவுகள் அனைத்து இடங்களுக்கும், அனைத்துக் காலங்களுக்கும் பொதுவானதாகக் காணப்பட மாட்டாது.

கலாநிதி அப்துல் மஜீத் அஷ்ஷாபி இந்த வகையான கூட்டு இஜ்திஹாதின் தரத்தை இவ்வாறு வரையறுத்துக் கூறுகின்றார்: ''தனிநபர் இஜ்திஹாதின் முடிவுகளை விட கூட்டு இஜ்திஹாதின் முடிவுகள் பின்பற்றப்பட மிகவும் ஏற்றமானவை. முஸ்லிம் ஆட்சியாளரின் முடிவின் பிரகாரம் கூட்டு இஜ்திஹாத் ஒழுங்குபடுத்தப்பட்டு, அதன் அடிப்படையில் முடிவுகள் வருமாயின் அது அனைவரும் பின்பற்ற வேண்டிய பொது சட்டமாக மாறிவிடும்''.

கூட்டு இஜ்திஹாத் பற்றி தனது கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வை செய்த சிரியா நாட்டைச் சேர்ந்த அறிஞர் கலாநிதி காலித் ஹுஸைன் காலித் கூட்டு இஜ்திஹாதை இஜ்மாஉ ஸுகூதி என்ற இஜ்மாவின் வகைக்கு நெருக்கமானதாகக் கருதுகின்றார்.

இஜ்மாஉ ஸுகூதி என்பது ஒரு சட்டப் பிரச்சினையில் பல அறிஞர்கள் கருத்து தெரிவிக்க சிலரோ அல்லது பலரோ அது பற்றி கருத்து தெரிவிக்காது மௌனமாக இருப்பதனால் ஏற்படும் முடிவைக் குறிக்கும்.

இவ்வகையான இஜ்மாஉ கூட்டு இஜ்திஹாதிற்கு ஒப்பானது. ஏனெனில் கூட்டு இஜ்திஹாதின் முடிவுகளை அதற்கான நிறுவனங்கள் வெளியிடும் போது அது பற்றி சிலர், அல்லது பலர் கருத்து தெரிவிக்காமல் இருப்பதுண்டு. ஆனால் குறித்த முடிவு பிழையாக அல்லது ஷரீஆவிற்கு முரணானதாக இருக்குமாயின் அங்கு மௌனித்து இருப்பது பொறுத்தமானதல்ல. அதேநேரம் அதிகமான அறிஞர்கள் பிழையான முடிவுகளில் ஒன்று சேர மாட்டார்கள் என்பதும் கவனிக்கத்தக்கது.

இவ்வகையான இஜ்மாஉ ஸுகூதியின் சட்ட அந்தஸ்து விடயமாக அறிஞர்களுக்கு மத்தியில் மூன்று நிலைப்பாடுகள் உள்ளன. இமாம் ஷாபியின் ஒரு கருத்தின் படி இதனை இஜ்மாவாகவோ, அல்லது ஆதாரமாகவோ கருத முடியாது. இன்னும் சில அறிஞர்கள் சில நிபந்தனைகளுடன் இதனை சட்டமாக அங்கீகரிக்க முடியும் என்ற கருத்தில் உள்ளனர்.

ஹனபிகள், ஷாபிஈ மத்ஹபின் அதிகமான அறிஞர்கள் இவ்வகையான இஜ்மாவை சட்டமாக எடுக்க முடியும் என்று கருதுகின்றனர். இது இமாம் அஹ்மதின் பலமான கருத்துமாகும்.

# உயிரோட்டமாக்கப்பட வேண்டிய ஜும்ஆ பிரசங்கங்கள்

• இப்னு மரைக்கார்



இஸ்லாத்தில் பள்ளிவாசல்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. அவை சர்வ வல்லமை படைத்த அல்லாஹ்வை ஐவேளை வணங்கி வழிபடுவதற்கான பிரதான இடம் மாத்திரமல்லாமல் முஹம்மத் (ஸல்) அவர்களின் ஆட்சித் தலைமையகமாகவும் மஸ்ஜிதுன் நபவி விளங்கியது. இது வரலாறும் முன்மாதிரியுமாகும்.

என்றாலும் இந்நாட்டில் தற்போது 2500 பள்ளிவாசல்கள் உள்ளன. அவற்றில் சுமார் 1000 பள்ளிவாசல்களில் வாரா வாரம் ஜும்ஆ தொழுகைகள் நடாத்தப்படுகின்றன. இந்த ஜும்ஆ தொழுகைக்காக அண்மைக்காலமாக நடாத்தப்படும் பிரசங்கங்களை ஒரு தரம் எடுத்து நோக்க வேண்டிய தேவை தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிவிட்டது.

ஏனெனில் இஸ்லாமிய அறிவியல் மேம்பாட்டுக்கும் இஸ்லாத்தின் பரவுதலுக்கும் எழுச்சிக்கும் முஹம்மத் (ஸல்) அவர்கள் காலம் முதல் பள்ளிவாசல் மிம்பர்கள் அளப்பரிய பங்களிப்புக்களை நல்கியுள்ளன. இதற்கு இஸ்லாமிய வரலாற்றிலும் நபிமொழிகளிலும் நிறையவே சான்றுகள் காணப்படுகின்றன.

அந்த வகையில் பள்ளிவாசல் மிம்பர் மேடை என்பது இஸ்லாத்தின் பிரதான வெகுஜன ஊடகமாக விளங்குகின்றது. அந்தளவுக்கு சக்தி மிக்கதே இந்த மிம்பர் மேடை இருந்த போதிலும் இந்த மேடை அதற்கே உரிய ஒழுங்கில் அண்மைக் காலமாகப் பயன்படுத்தப்படுகின்றதா என்ற வினா பரவலாக எழுந்துள்ளது.

ஏனெனில், ஜும்ஆ தொழுகைக்கு முன்னர் மௌலவி அல்லது உலமா மிம்பர் மேடை மீதிருந்து பிரசங்கம் செய்கின்றார். ஆனால் இப்பிரசங்கம் நிகழ்த்தப்படும் போது ஒரு தொகுதியினர் தூங்கிக் கொண்டிருக்கின்றனர். மற்றொரு தொகுதியினர் பள்ளிவாசலுக்கு உள்ளேயும் வெளியேயும் ஆளுக்கு ஆள் அளவளாவிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் ஜும்ஆ பிரசங்கத்தில் கவனம் செலுத்துவதே இல்லை.

அதேநேரம் ஜும்ஆ தொழுகை நிறைவுற்ற பின்னர் பள்ளிவாசலை விட்டு வெளியே வந்ததும் இன்றைய ஜும்ஆ பிரசங்கம் எந்த விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது என்று ஒருவரிடம் வினவினால் அவர் ஒன்றில் என்ன ஜும்ஆ பிரசங்கம் நடாத்தப்பட்டது? அல்லது அது நினைவில்லையே? அல்லது பிரசங்கமே விளங்க வில்லை என்றுதான் பெரும்பாலும் பதில் வரக் கூடியதாக உள்ளது. இது பெரும் கவலைக்கும் வேதனைக்கும் உரிய நிலைமையாகும்.

இந்நிலைக்கும் காரணங்கள் இல்லாமல் இல்லை. அதாவது அண்மைக் காலமாக நிகழ்த்தப்பட்டு வருகின்ற ஜும்ஆ பிரசங்கங்களை எடுத்துப் பார்த்தால் அவை ஒன்றில் வரலாறாகவோ அல்லது கதைகளாகவோதான் பெரும்பாலும் அமைந்திருக்கின்றன. சில ஜும்ஆ பிரசங்கங்கள் மாத்திரம் குர்ஆன் ஹதீஸ் அடிப்படையில் இடம்பெறுகின்றன. ஆனால் பிரசங்கம் ஏட்டுச் சுரக்காய் போன்று அமைந்திருக்கின்றனவேயொழிய பிரசங்கத்தில் சொல்லப்படுகின்ற விடயங்களை நடைமுறைப் படுத்தி செயலுருப்படுத்தும் வழிவகைகள் குறித்து எதுவுமே கூறப்படுவதில்லை.

அதேநேரம் ஜும்ஆ பிரசங்கம் நிகழ்த்தும் பெரும்பாலான உலமாக்கள் தம் குரலை உயர்த்தி உணர்ச்சி பொங்குபவர்கள் போன்று பிரசங்கம் நிகழ்த்துகின்றனர். ஆனால் அவர்களது உரை அவர்களுக்கே விளங்குமோ தெரியவில்லை என்று கதைத்துக் கொள்பவர்களும் இருக்கவே செய்கின்றனர். இன்னும் சிலர் தம் ஜும்ஆ பிரசங்கத்தில் பெரும்பகுதியை சகோதரர்களே... பெரியோர்களே... அன்பார்ந்தவர்களே... என்ற வசனங்களுக்காகவே ஒதுக்கி விடுகின்றனர்.

இவற்றின் விளைவாக ஜும்ஆ பிரசங்கங்கள் உயிரோட்டமற்ற வகையில் அமைந்திருக்கின்றன. அதனால் அண்மைக்கால ஜும்ஆ பிரசங்கங்களால் சமூகத்தில் ஒரு சிறிய தாக்கத்தையோ மாற்றத்தையோ ஏற்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

ஆனால் நபி (ஸல்) அவர்களது காலத்திலோ அதன் பின் வந்த காலப்பகுதிகளிலோ இவ்வாறான நிலைமை காணப்படவில்லை. அந்தக் காலப் பகுதிகளில் ஜும்ஆ பிரசங்கங்களைச் செவியேற்பதில் அதிக அக்கரையும் கவனமும் செலுத்தப்பட்டன. அந்தளவுக்கு அன்றைய ஜும்ஆ பிரசங்கங்கள் தெளிவாகவும் உயிரோட்டம் மிக்கவையாகவும் உணர்வுகளைத் தொடக்கூடிய வகையிலும் அமைந்திருந்தன. அன்றைய ஜும்ஆ பிரசங்கங்கள் சமூகத்தில் செல்வாக்கு செலுத்தின. அது இஸ்லாத்தின் வளர்ச்சிக்கும் பரவுதலுக்கும் துணை புரிந்தன. அதன் காரணத்தினால் ஜும்ஆ பிரசங்கங்களின் தற்போதைய ஒழுங்கிலும் அமைப்பிலும் திருத்தங்களையும் சீரமைப்புக்களையும் செய்ய வேண்டியது மிகவும் அவசியமான விடயமாகும்.

மேலும் இன்றைய காலகட்டத்தில் நிகழ்த்தப்படுகின்ற பெரும்பாலான ஜும்ஆ பிரசங்கங்களில் கூறப்படும் வரலாறுகள் நபி(ஸல்) அவர்களோடும், அவர்களது தோழர்களோடும் சம்பந்தப்பட்டவை. நபி (ஸல்) அவர்களும் அவர்களது தோழர்களும் இஸ்லாத்திற்காக அனுபவித்த துன்ப துயரங்கள் அவர்கள் ஆற்றியுள்ள அர்ப்பணிப்புகள், தியாகங்கள் மற்றும் பங்களிப்புக்களை அவை எடுத்துக் கூறுகின்றன. படிப்பினைக்காக அவை கட்டாயம் கூறப்பட வேண்டியவையே. அவர்களது தியாகம், அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்புகள் ஊடாகவே இஸ்லாம் நடைமுறைச்சாத்தியமானது என்பது நிரூபித்துக் காட்டப்பட்டது. அவை முன்மாதிரியாகக் கொள்ளப்பட வேண்டியவை. இதில் இரு கருத்துக்களில்லை.

என்றாலும் நபி (ஸல்) அவர்களுக்கு பிற்பட்ட காலம் முதல் இற்றை வரையான 1400 வருட காலப்பகுதியில் இஸ்லாம் என்பதற்காகவும், முஸ்லிம் என்பதற்காகவும் முஸ்லிம்கள் நிறையவே அர்ப்பணிப்புகளையும் தியாகங்களையும் செய்துள்ளார்கள். செய்து வருகின்றார்கள். அவை தொடர்பில் இன்றைய ஜும்ஆ பிரசங்கங்களில் எதுவும் கூறப்படுவதில்லை.

இதன் விளைவாக நபி(ஸல்) அவர்களது காலத்திற்கு பின்னர் இற்றை வரையும் இஸ்லாத்திற்கோ, முஸ்லிம்களுக்கோ எதிராக எதுவித தீங்குகளோ, பாதிப்புக்களோ இடம்பெறவில்லை. அன்று முதல் இன்று வரையும் முஸ்லிம்கள் எவ்வித பிரச்சினைகளும் இன்றி வாழ்கின்றார்கள் என்ற அபிப்பிராயம் தோற்றம் பெற்றுள்ளது.

ஆனால் நபி(ஸல்) அவர்களுக்கு பின்வந்த காலம் முதல் இற்றைவரையும் இஸ்லாம் என்பதற்காகவும், முஸ்லிம் என்பதற்காகவும் நிறைய பேர் அர்ப்பணிப்புக்களையும் தியாகங்களையும் செய்திருக்கின்றார்கள். செய்து வருகின்றார்கள். அண்மையில் மியன்மாரில் ரோஹிங்கியா முஸ்லிம்கள் உடுத்த உடையோடு விரட்டியடிக்கப்பட்டார்கள். இது எதற்காக இடம்பெற்றது? இலங்கையின் வட மாகாண முஸ்லிம்கள் 1990 இல் உடுத்த உடையோடு வெளியேற்றப்பட்டார்கள். இது எதற்காக இடம்பெற்றது. பொஸ்னியா முஸ்லிம்கள் எதற்காக கொல்லப்பட்டார்கள். இவ்வாறு நிறையவே உதாரணங்கள் உள்ளன. அவை அனைத்தும் முஸ்லிம் என்பதற்காகவே இடம்பெற்றன. ஆயினும் அவர்கள் தம் சொத்து சுகங்களுக்காக இஸ்லாத்தை விட்டுக் கொடுக்கவில்லை.

இன்றைய காலகட்டத்திற்கும் இஸ்லாம் நடைமுறைச்சாத்தியமானவை என்பதற்கு இவையும் நல்ல எடுத்துக்காட்டுகள். அதனால் நபி (ஸல்) அவர்களுக்கு பின்வந்த காலம் முதல் இற்றை வரையும் இஸ்லாம் என்பதற்காகவும், முஸ்லிம் என்தற்காகவும் இடம்பெற்றுள்ள துன்புறுத்தல்கள், இம்சிப்புகள் தொடர்பிலும் ஜும்ஆ பிரசங்கங்களில் கூறப்படுவது நல்லது.

ஆனால் ஜும்ஆ பிரசங்கம் நிகழ்த்தும் பெரும்பாலான உலமாக்களுக்கு நடப்பு விவகாரம் தொடர்பில் போதிய அறிவு தெளிவு இருப்பதாகத் தெரியவில்லை. அத்தோடு அவர்கள் ஜும்ஆ நிகழ்த்தும் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினதும், அப்பள்ளியில் செல்வாக்கு செலுத்தும் இயக்கத்தினதும் (தப்லீக், ஜமாஅத்தே இஸ்லாமி, தௌஹீத்) விருப்பு வெறுப்புகளுக்கு அமைவாகவே ஜும்ஆ பிரசங்கத்தைத் தயாரித்துக் கொள்ள வேண்டியுள்ளனர். ஏனெனில் தொழிலை பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டும். பிரசங்கம் நிகழ்த்தும் பள்ளியின் நம்பிக்கையாளர் சபையினதும்,

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலை அடைவு மட்டத்தில் பெற்றோரின் பங்கு

பிள்ளையின் நடத்தையிலும் பெற்றோரின் ஈடுபாடு செல்வாக்குச் செலுத்துகின்றது. பெற்றார் சிறந்த முன்மாதிரியாகவும் நன்னடத்தையுள்ளவர்களாகவும் இருக்கும் போது அவர்களின் பிள்ளைகளது கல்வியிலும் நடத்தையிலும் அது நேர்ப்பாடான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. பிள்ளையின் கல்வியில் பெற்றோர் காட்டுகின்ற அக்கறையின் அளவுக்கு பிள்ளையின் தேர்ச்சி மட்டமும் அடைவு மட்டமும் உயர்கின்றது.

குடும்பமானது, பொருளாதாரம், ஊக்கல், வசதி வாய்ப்புக்கள் என்பவற்றைத் தாண்டி பிள்ளைகளின் மனவெழுச்சிச் சமநிலையைப் பேணுவதிலும் முக்கிய பங்காற்றுகின்றது. மனவெழுச்சிச் சமநிலை (Emotional Balance) இல்லாத பிள்ளைகள் அதாவது மனவெழுச்சி சார் நெருக்கீடுகளுக்கு உட்படும் பிள்ளைகள் கற்றலில் பின்தங்குகின்றனர்.

ஒரு பிள்ளை பாடசாலையிலிருந்து இடைவிலகும் போது வெளிப்படையில் அப்பிள்ளையின் மீது குற்றம் சாட்டப்படலாம். அவனது குறைந்த பாடசாலை வரவு, குறைந்த அடைவு மட்டம் என்பவற்றை குற்றஞ்சாட்டலுக்கான காரணங்களாக முன்வைக்கலாம். ஆனால் இடைவிலகலுக்கான ஆணிவேர்க் காரணம் குடும்பத்துடன் தொடர்புறுகின்றது. ஒரு பிள்ளையின் அடிப்படை உளவியல் தேவைகளான அன்பு, பராமரிப்பு, கணிப்பு, பாதுகாப்பு என்பவற்றை வழங்கும் அடிப்படை நிறுவனம் குடும்பமும் வீட்டுச் சூழலுமே. இத்தேவைகள் பூரணமாக நிறைவுசெய்யப்படும் பட்சத்தில் குழந்தையின் கல்வி மீதான ஆர்வம் தக்கவைக்கப்படுகின்றது. இடைவிலகலின் அளவு பெருமளவு குறைகின்றது. (Perara 2008).

பெற்றோரின் தாழ்ந்த பொருளாதார நிலையும் கற்றலில் மாணவர்கள் பின்தங்குவதற்குக் காரணமாகின்றது. சாதாரண வறுமையை விட கடும் வறுமையில் உள்ள பிள்ளைகளின் இடைவிலகல் வீதம் 2.9 மடங்கு அதிகமாகும். (Lichter, Cornwell & Eggbeen 1993). வறுமையிலுள்ள ஒரு மாணவன் ஏன் இடைவிலகுகின்றான் என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. இத்தகைய மாணவர்கள் தமது வாழ்வாதாரத்திற்கு உழைக்க வேண்டியுள்ளது. கற்றலுக்குத் தேவையான வளங்கள் அவர்களுக்குக் குறைவாகவே கிடைக்கின்றது. போதிய உணவு கிடைப்பதில்லை. போக்குவரத்து வசதிகளும் வாய்ப்பதில்லை. (Cornwell 1993).

ஒற்றைத் தாய்க் குடும்பத்தில் வாழும் பிள்ளைகள் பாரிய பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். எனவே அத்தகைய பிள்ளைகள் இடைவிலகுவதற்கான வாய்ப்பு அதிகம் (Cong & Ju 2000) சேரிப்புற வாழ்வு, இடவசதிக் குறைவு என்பன இக்காரணிகளில் அடங்குகின்றன. இவை அனைத்திற்குமான அடிப்படைக் காரணமாக இருப்பது குடும்பத்தின் வறுமையாகும். தொழிலின்மை, குறைந்த ஊதியம், வீட்டின் திருப்தியற்ற நிலை, குறைந்த கல்வித் தரம், போதைப் பொருள் பாவனை, குறைந்த போஷாக்குள்ள உணவு என்பன குடும்ப வறுமையின் குறிகாட்டிகளாகும். (டவுன் சென்ட 1979)

வறுமை, பிள்ளைகளின் கல்வி மீது பல்வேறு வகையான தாக்கங்களை உருவாக்குகின்றது. போதுமான அளவு உணவு, போஷாக்கான உணவு, தேவையான கற்றல் உபகரணங்கள், இணைக்கிருத்திய செயற்பாடுகளுக்கான செலவு, போக்குவரத்துச் செலவு, மேலதிக புத்தகங்களுக்கான செலவு போன்றவற்றை மாணவர்கள் பெற்றோரிடமிருந்து பெறாத போது அவர்களது கல்வி ஆர்வம் குறைவதோடு ஒருவகைத் தாழ்வு மனப்பான்மைக்கும் உட்படுகின்றனர். (Perara 2008)

வறுமைப்பட்ட பெற்றோர் தமது பிள்ளைகளை வேலைகளில் ஈடுபடுத்த முயல்கின்றனர். இதனால் பிள்ளைகள் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்யாத நிலையில் கல்வியிலிருந்து விடைபெறுகின்றனர். அதேபோன்று பிளவுபட்ட குடும்பங்கள், ஒற்றைக் குடும்பம் (தாய் அல்லது தந்தை மாத்திரம் உள்ள குடும்பம்), பண்பாட்டுச் சீர்குலைவு மிக்க குடும்பம், விவாகரத்துப் பெற்ற குடும்பம், தாயோ தந்தையோ நீண்ட காலம் தூரமாக இருக்கும் குடும்பம் போன்றவற்றில் வளர்கின்ற பிள்ளைகளின் கல்வியார்வமும் ஈடுபாடும் ஒப்பீட்டு ரீதியில் மிகக் குறைவாக உள்ளதையும் ஆய்வுகள் நிறுவியுள்ளன. பிளவுபட்ட குடும்பங்களில் பெற்றோருடைய தொடர்பு குறைவதாலும் பெற்றோர் பிள்ளை தொடர்பு அறுந்து போவதாலும் பிள்ளைகளின் உளவியல் தேவை நிறைவேறுவதில்லை. அதனால் பொருத்தப்பாடற்ற தன்மை ஏற்பட்டு பிள்ளைகள் நெறிபிறழ்வுக்கு ஆளாகின்றனர். (கலக்கலன் 2000).

ஒரு மாணவனின் குடும்பக் கட்டமைப்பு அவனது இடைவிலகலில் தாக்கம் செலுத்துகின்றது. குடும்பக் கட்டமைப்பு என்பது இரண்டு பெற்றார் குடும்பம், ஒற்றைப் பெற்றார் குடும்பம் மற்றும் தத்தெடுக்கும் குடும்பம் என்றவாறு அமைகின்றது. (Pong & Ju 2000). ஒற்றைப் பெற்றார் குடும்பம் பெண் தலைமைக் குடும்பம், ஆண் தலைமைக் குடும்பம் என இரு வகைப்படுகின்றது. கணவன் அல்லது மனைவியின் இழப்பு ஒற்றைப் பெற்றார் குடும்பத்தை உருவாக்குகின்றது. பெண் தலைமைக் குடும்ப மாணவர்களின் இடைவிலகல் வாய்ப்பு ஒற்றைப் பெற்றார் குடும்பத்தில் அதிகம் என்பதை ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. (கழபெ ரூ துர 2000)

சீரற்ற குடும்ப உறவுகளால் மனவெழுச்சித் தாக்கங்கள் ஏற்படுகின்றன. பிள்ளைகளின் படிப்பில் கரிசனை கொள்ளாமல் படிப்பைப் பற்றிய எதிர் மனப்பாங்கு, ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்பாமை போன்ற பல்வேறு எதிர்மையக் குடும்பம் சார் காரணிகள் பிள்ளைகளின் கல்வியில் நேரெதிரான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இவற்றின் இறுதி விளைவுகளில் ஒன்றாக மாணவர்களின் இடைவிலகல் அமைவதை ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. (கமலா கிருஷ்ண பிள்ளை 2001).

குடும்பத்தின் அல்லது வீட்டுச் சூழலின் கவிவு நிலை கல்வியில் நேரடித் தாக்கம் கொண்டது. உண்மைத் தன்மையற்ற (Truthless) பதட்டம் நிறைந்த, மன அழுத்தம் கொண்ட, ஸ்திரமற்ற குடும்பக் கட்டமைப்பு பிள்ளைகளின் கல்வியில் நேரெதிரான தாக்கத்தை உருவாக்குகின்றது. (Horn 1992). ஏற்கனவே குறிப்பிட்டது போன்று பெற்றோரின் கல்வித் தரக்குறைவு, உயர் கல்வித்தரம் பெற்றோரின் அறிவு, அறியாமை, அக்கறை, அக்கறையீனம் என்பவற்றிற்கு குறிப்பிடத்தக்க தாக்கம் உள்ளது. (ரணசிங்க 2001).

பிள்ளைகளின் கல்வியில் குடும்பத்தின் அல்லது பெற்றோரின் தாக்கம் குறித்த காரணிகளில் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையும் முக்கியமான தொன்றாக முன்வைக்கப்படுகின்றது. நெறி பிறழ்ந்தோர் தொடர்பாக இங்கிலாந்தில் சிறில் பேர்ட் என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ''குடும்ப அங்கத்தவர் தொகை அதிகரிப்பதாலும் பெற்றோரின் கவனிப்புக் குறைவதன் காரணமாகவும் மாணவர்கள் பொருத்தப்பாட்டின்மைக்கும் இடவிலகலுக்கும் ஆளாகின்றனர் எனத் தெரிவித்துள்ளது. அதாவது பிள்ளைகளின் எண்ணிக்கை குறைந்த குடும்பங்களில் கல்விக்கான பெற்றோரின் ஊக்கம் அதிகம் உள்ளது. மறுபக்கம் அதிகமான பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களில் கல்வி மீதான பெற்றோரின் ஆர்வமும் ஈடுபாடும் ஊக்கமும் ஒப்பீட்டு ரீதியில் குறைவாகவே உள்ளது.

பிள்ளைகள் மீதான பெற்றோரின் அர்ப்பணம் மூத்த பிள்ளைகளிலிருந்து இளைய பிள்ளைகளை நோக்கிக் குறைந்து செல்வதை ஒரு சில ஆய்வுகள் நிறுவியுள்ளன. இன்னொரு புறம் இளைய பிள்ளைகளைக் கண்காணிப்பதற்கும் பராமரிப்பதற்கும் மூத்த பிள்ளைகள் பயன்படுத்தப்படுவதனால் இப்பிள்ளைகளின் கல்வி ஈடுபாடு குறைந்து காலப் போக்கில் பாடசாலைகளை விட்டு இடை விலகும் நிலை உருவாகின்றது. எனவே, குடும்பத்தின் அளவும் கல்வியில் தாக்கம் செலுத்துகின்றது. கீழ் வர்க்கக் குடும்பங்களின் அளவு பிள்ளைகளின் கற்றலில் செறிந்த செல்வாக்கைச் செலுத்துகின்றது.

# பெண் நீதிபதி: இமாம்களின் நிலைப்பாடு

### இமாம் இப்னு ஹஸ்ம் (ரஹ்)

இமாம் இப்னு ஹஸ்ம் அவர்களின் முழுப்பெயர் அபூ முஹம்மத் அலீ இப்னு ஸஈத் இப்னு ஹஸ்ம். ஸ்பெய்னின் அந்தலூஸில் ஹி. 384 ரமழான் (கி.பி. 994) இல் பிறந்தவர். இமாம் அபூதாவுத் அழ்ழாஹிரி அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ழாஹிரி சட்டப் பாரம்பரியத்தின் பிற்பட்டகால முக்கிய இமாம்களுள் ஒருவரே இமாம் இப்னு ஹஸ்ம் அவர்கள். அல்குர்ஆன், அல் ஹதீஸ் வசனங்களுக்கு மறை பொருளை விடுத்து நேரடிப் பொருள் காண வேண்டும் என்பதனால்தான் இச்சட்ட மரபிற்கு ழாஹிரி எனப் பெயர் வந்தது.

இமாம் இப்னு ஹஸ்ம் தனது முஹல்லா எனும் பிரபலமான நூலில் அல்குர்ஆனில் இடம்பெரும் நீதித்துறை தொடர்பான வசனங்களை ஆழமாகப் பகுப்பாய்வு செய்து அவ்வசனங்களின் ஒளியில் பெண்கள் நீதிபதிகளாக நியமிக்கப்படுவதன் சட்டத் தன்மையை ஆராய்கின்றார். நிச்சயமாக அல்லாஹ் அமானிதங்களை அதற்கே உரியவர்களிடம் ஒப்படைத்துவிடுமாறு உங்களுக்குக் கட்டளையிடுகிறான். நீங்கள் மக்கள் மத்தியில் தீர்ப்பளித்தால் நீதியாகத் தீர்ப்பளியுங்கள். (ஸூறதுந் நிஸா: 38)

நபியே நீர் கூறுவீராக, எனது இரட்சகன் நீதியாக நடந்து கொள்ளுமாறும் ஒவ்வொரு தொழுகையின் போதும் அவனையே முன்னோக்கித் தொழுங்கள் எனவும் நீங்கள் முற்றிலும் அவனுக்கே வழிப்பட்டு, கலப்பற்ற மனதோடு அவனிடம் நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள் என்றும் கட்டளையிட்டான். (ஸூறதுல் அஃராப்: 29)

நாம் எமது தூதர்களைத் தெளிவான அத்தாட்சிகளோடு அனுப்பினோம். அவர்களுடன் வேதங்களையும் அளவுகோல்களையும் அனுப்பினோம். மக்களுக்கு மத்தியில் நீதியை நிலைநாட்டுவதற்காக. (ஸூறதுல் ஹதீத்: 25)

நம்பிக்கையாளர்களே! நீங்கள் நீதி செலுத்தும் படியாகவும் நன்மை செய்யும் படியாகவும் உறவினர்களுக்குக் கொடுத்து உதவி செய்யும் படியாகவும் நிச்சயமாக அல்லாஹ் உங்களை ஏவுகின்றான். (ஸூறதுந் நஹ்ல் : 90)

முஃமினான ஆண்களும் முஃமினான பெண்களும் பரஸ்பரம் பொறுப்பாளியாகவும் உற்ற துணைவர்களாகவும் இருக்கின்றனர். (ஸூறதுத் தௌபா: 91)

இவ்வசனங்களை மேற்கோள் காட்டும் இப்னு ஹஸ்ம் நீதி செலுத்தல் என்பது ஆண், பெண் இரு சாராரினதும் கடமையாகும். தகுதியான ஆண்கள் நீதிபதிப் பதவிக்கு நியமிக்கப்படுவது போல, தகுதியான பெண்களும் அவ்வாறு நீதித் துறைக்கு நீதிபதிகளாக நியமிக்கப்படலாம் என விளக்குகின்றார்.

பெண்கள் நீதிபதிகளாக இருப்பதைத் தெளிவாகத் தடுக்கும் எந்தவொரு சட்ட வசனமும் குர்ஆனிலோ ஸுன்னாவிலோ இடம்பெறவில்லை என்பதே இமாம் இப்னு ஹஸ்மின் வாதமாகும். அவ்வாறு இடம்பெறாத பட்சத்தில், அடிப்படையில் அனைத்தும் ஆகுமானது (பராஆ அல் அஸ்லியா) என்ற கருத்தை அவர் இங்கு பிரயோகிக்கின்றார். இப்னு ஹஸ்ம் அவர்களின் மூன்றாவது வாதம் நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல் குறித்துக் குர்ஆனில் இடம்பெறும் வசனங்கள் அனைத்தும் ஆண், பெண் இருசாராரையும் விழித்தே பேசுகின்றது. எனவே, அநீதியை இல்லாதொழிப்பதும் நீதியை நிலைநாட்டுவதும் ஆண், பெண் இருசாராரினதும் மார்க்கக் கடமையாகும். அந்த வகையில் பெண்களும் நீதிமன்றங்களில் நீதிபதிகளாக நியமிக்கப்படலாம் என அவர் கருதுகின்றார்.

இமாம் இப்னு ஹஸ்ம் முன்வைக்கும் நான்காவது வாதம் ஸூறதுல் அஹ்ஸாபில் இடம்பெறும் 33 - 35 வரையான வசனங்களாகும். அதில் குர்ஆன், ஆணையும் பெண்ணையும் சமத்துவமானதாகவும் நீதியானதாகவும் நோக்குகின்றது. இரண்டு தரப்பினர்களுக்கிடையில் பாகுபாட்டை அல்லது அநீதியைக் குர்ஆன் காட்டவில்லை. அவ்வசனம் பின்வருமாறு அமைகின்றது.

''நிச்சயமாக ஆண்களும் பெண்களும் நம்பிக்கையாளர்களாகிய ஆண்களும் பெண்களும் இறைவனுக்கு வழிப்படும் ஆண்களும் பெண்களும் உண்மையை உரைக்கும் ஆண்களும் பெண்களும் பொறுமையுள்ள ஆண்களும் பெண்களும் அல்லாஹ்வுக்குப் பயந்து நடக்கும் ஆண்களும் பெண்களும் நோன்பு நோற்கும் ஆண்களும் பெண்களும் அல்லாஹ்வை நினைவு கூரும் ஆண்களும் பெண்களும் ஆகிய இருசாராருக்கும் அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் தயார்செய்து வைத்திருக்கின்றான்.''

இவ்வசனத்தை விளக்கும் இமாம் இப்னு ஹஸ்ம் அவர்கள் ஆண்களைப் போன்று பெண்களும் நீதிபதிப் பதவிகளை வகிப்பதற்கு ஷரீஆவில் எவ்விதத் தடையுமில்லை எனக் கூறுகின்றார்.

# அமெரிக்க உள மருத்துவக் கழகத்தின் வகைப்பாடு






**4. மனநிலை மாறாட்டங்கள் (Mood Disorders)**

இயல்பான மனநிலையில் ஏற்படும் தடங்கல்களால் ஏற்படுவதே மனநிலை மாறாட்டங்கள் அல்லது மனநிலைக் கோளாறுகள் எனப்படுகின்றது. இது மன அழுத்தம் எனும் உயர் நிலையிலிருந்து பிறழ்வான களிப்பு (பேரார்வம் - மேனியா) வரையில் அமையும். இவ்விரண்டும் மாறி மாறிக் கூட இடம்பெறலாம். (பளிப்பு, அழுத்தம் - மேனியா டிப்ரஷன்)

இதில் மூன்று உப பிரிவுகள் உள்ளன.

1. அதீத உளச் சோர்வு. (Major Depression)
2. இரு துருவக் கோளாறு (Bipolar Disorder)
3. தற்கொலை (Suicide)

**5. பாலியல் மற்றும் பால்குறி அடையாள மாறாட்டங்கள்**

பாலியல் விருப்பங்கள் சார்ந்த பிரச்சினைகளான குழந்தைகளின் பாலியல் ஆர்வம், சார் பொருள் மோகம் முதலியனவும் பாற்குறி அடையாளம் தொடர்புடைய பிரச்சினைகளான மாற்றுப் பால் மோகம் (தவறான பால் நிலையில் ஒருவர் அகப்பட்டு விட்டதாக நம்புவது) பாலியல் மாறாட்ட செயற்பாடுகள். எடுத்துக் காட்டாக ஆண்மைக் குறைவு போன்றனவும் இதில் அடங்கும்.

**6. உணவு முறை மாறாட்டங்கள் (Eating Disorders)**

உண்ணும் நடவடிக்கைகளில் உள்ள தீவிர தடுமாற்றங்களால் ஏற்படும் அனைத்து மாறாட்டங்களும் இதில் உள்ளடங்கும். எடுத்துக் காட்டாக உணவார்வமின்மை (அனோரக்ஷியா) மற்றும் யானைத் தீனி (புலூமியா நர்வோஷா) ஆகியவையும் உள்ளடங்கும்.

**7. உறக்க மாறாட்டங்கள் (Sleeping Disorders)**

தூக்கத்தின் அளவு, தரம், காலம் முதலியவற்றிலுள்ள பிறழ்நிலைகளை இது குறித்து நிற்கின்றது. இதில் தூக்கமின்மை (இன்சோம்னியா) தூக்கத்தின்போது ஏற்படும் பிறழ்வான நடத்தை மற்றும் உடலியல் நிகழ்வுகளும் அடங்கும். எடுத்துக் காட்டாக, தூக்கத்தில் நடப்பது, இருட்டுப் பயங்கரங்கள், தீக் கனா

**8. ஆளுமை மாறாட்டங்கள் (Personality disorders)**

உள்ளிருக்கும் அனுபவம் மற்றும் நடத்தை ஆகியவை அழியா முறைமைகளாக இருப்பதால் அவை மனம் முழுவதும் ஊடுருவி தன்னிலையை வளைத்துக் கொடுக்காமல் இயங்குகின்றன. இவை உள்ளத்தில் அவலத்தையும் கேட்டையும் விளைவித்து, சமூக நெறிகளிலிருந்து விலகி வாழ வைக்கின்றது.

எடுத்துக் காட்டாக, தன்மோக ஆளுமை மாறாட்டம், தேவைக்கு மேல் நடந்துகொள்ளுதல், தன்னை வியக்க வேண்டும் என விரும்புதல், மற்றவர் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமை ஆகியவை அடங்கும்.

பீடிப்பு கட்டாயத்தன ஆளுமை என்பதில் முறையாக இருக்க வேண்டும் என்று முன்னேற்பாடு செய்தல், சீருமைப் பண்பு, கட்டுப்பாடு ஆகியவையும் அடங்கும்.

**9. சிசொப்பிரேனியா**

இதனை மனப் பிளவு என்பர். உள ரீதியான மாறாட்டங்களில் இதுவே மிகத் தீவிரமானதும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதுமாகும். இதில் மூன்று பிரிவுகள் உள்ளன.

1. ஒழுங்கமைப்பற்ற மாறாட்டம் (Disorganized Disorder)
2. [illegible]
3. [illegible] (Paranoid)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திகன... (01 ஆம் பக்கத் தொடர்)

இலங்கை வந்துள்ள ஐ.நாவின் இடைக்கால வதிவிட பிரதிநிதி ரெரன்ஸ் டி. ஜோன்ஸ், இங்குள்ள ஐ.நா வின் நல்லிணக்கத்திற்கும் அபிவிருத்திக்குமான ஆலோசகர் கீதா சப்ஹர்வால் சகிதம் அமைச்சர் ஹக்கீமை நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சில் சந்தித்து யுத்தத்திற்கு பின்னரான சூழ்நிலை தொடர்பில் கலந்துரையாடிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

இனவாத வன்செயல்களுக்கு துணை போனதாகக் கூறப்பட்ட பொலிஸ் உயரதிகாரிகளை இடமாற்றம் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்த போதும் அவ்வாறு நடைபெறவில்லை எனவும் வெறுப்பூட்டக்கூடிய பேச்சுக்களை தடைசெய்வதற்கான சட்டமும் கிடப்பில் போடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தனது அதிருப்தியை வெளியிட்டார்.

யுத்தத்திற்கு பின்னரான சூழ்நிலையில் நாட்டில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் தொடர்பிலும் நிலைமாறுகால நீதி தொடர்பிலும் இவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கும் அமைச்சர் பதிலளித்தார்.

இலங்கையில் முன்னர் நீண்டகாலமாக அவசரகால சட்டம் நடைமுறையில் இருந்ததனால் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு பொறுப்பானவர்கள் பொதுவான சட்டங்களின் கீழ் செயற்படாமல் குறுக்கு வழிகளை கையாள்வதற்கு தொடர்ச்சியாக எத்தனித்து வருகின்றனர். இதனால் நீதியை நிலைநாட்டுவதில் தாமதமும் முறைகேடுகளும் ஏற்பட்டு வருகின்றன. துரதிஷ்டவசமாக தேசிய அரசினுள் நிலவுகின்ற முறுகல் நிலையின் காரணமாக ஸ்திரமற்ற தன்மை காணப்படுவதான ஒரு தோற்றப்பாடு உள்ளது.ஆயினும் முன்னைய அரசாங்கத்தை விட இந்த ஆட்சியில் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் பொறிமுறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அவதானிக்கப்படுகின்றது.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் புன்னக்குடாவில் பொதுமக்களுக்கு சொந்தமான காணியில் இராணுவ ஆயுதக் களஞ்சியம் அமைக்கப்படும் விவகாரம் சர்ச்சையை கிளப்பியது. யுத்தம் முடிவடைந்துள்ள போதிலும் கூட வடக்கிலும் கிழக்கிலும் பொது மக்களுக்கு சொந்தமான காணிகளில் படையினரின் பிரசன்னம் பொதுமக்கள் மத்தியில் சந்தேகத்தை உண்டுபண்ணியுள்ளது.

மன்னார் சிலாவத்துறையின் நகர் பகுதி கடற்படையினரின் கட்டுப்பாட்டிலிருந்து முழுமையாக விடுவிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றோம். திகனை சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய முறையில் இழப்பீடுகள் வழங்கப்படவில்லை என்ற குறை நீடித்து வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஹிட்லர் இல்லாத... (03 ஆம் பக்கத் தொடர்)

முக்கியமானது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றுள்ள கட்சியிலிருந்தே அமைச்சரவை தெரிவாகிறது. அந்த வகையில் கட்சியில் பெரும்பான்மையைப் பெற்றிருப்பதும் நிறைவேற்றதிகார ஜனாதிபதிக்கு முக்கியம் பெறுகிறது.

சந்திரிகாவுடைய காலத்தில் ஒரு முறை அவருக்கு இந்தப் பலம் இல்லாமல் போனதினால் தனது அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கவுக்கு முன்னால் தலைகுனிய வேண்டியிருந்தது. மைத்திரிபாலவின் நிலை பற்றி புதிதாக எதுவும் சொல்ல வேண்டியதில்லை. தனது கையறு நிலைபற்றி அவர் பல இடங்களிலும் கூறி வருவது இதற்குப் போதுமானது. தன்னை முதுகெலும்பில்லாதவர்கள் எனப் பலரும் வர்ணிப்பதாக அவரே பல இடங்களிலும் குறிப்பிட்டு வருகிறார்.

நாட்டுக்குப் பழகிப் போன இந்த ஹிட்லர் ஆட்சியின் நீட்சி, மைத்திரி ஆட்சியில் காணக்கிடைக்காமை தான் உபாலி ஹிமி கோதாபயவிடம் இந்த வேண்டுகோளை விடுக்கக் காரணமாக இருந்திருக்க வேண்டும். நிறைவேற்றதிகார முறையை இல்லாதொழிப்பதற்கு ஜேவிபி முன்வைத்துள்ள இருபதாவது திருத்தத்துக்கு ஆதரவு கிடைக்காமலிருப்பதற்கும் நிகழ்காலத்தில் மக்களிடம் நிலவுகின்ற இந்தக் கருத்துப் போக்கு காரணமாக அமைந்திருக்க முடியும்.

அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்கரான பௌத்த பிக்கு இந்த வேண்டுகோளை விடுப்பதற்கான பின்னணியில் தனது இனம் அழிந்து போகாமல் காப்பதற்கான பயமும் காரணமாக இருந்திருக்க முடியும். ஏனெனில் நிறைவேற்றதிகாரம் மிக்க அனைத்து ஜனாதிபதிகளும் பெரும்பான்மைச் சிங்கள இனத்தைப் பாதுகாப்பதையே தமது தலையாய பணியாகக் கொண்டிருந்தனர். சிங்கள இனம் அழிந்து விடும் என்ற சிங்கள மக்களின் பயத்தைப் போக்கி அரசியல் செய்வதில் தான் அனைத்து நிறைவேற்றதிகார ஜனாதிபதிகளும் வெற்றி கண்டுள்ளனர்.

சமகால உலகின் இயல்புகள் பற்றி தனது அப்ஸைட் டௌன் நூலில் எட்வர்டோ கலியானோ (Eduardo Galeano) குறிப்பிடுகையில், இது பயத்தின் காலம். பெண்கள் வன்முறையான ஆண்களுக்குப் பயப்படுகிறார்கள். ஆண்கள் துணிச்சலான பெண்களுக்குப் பயப்படுகிறார்கள். கள்வர் பயம், பொலிஸ் பயம், தாழ்ப்பாள் இல்லாத கதவு பற்றிப் பயம், கடிகாரம் இல்லாத காலம் பற்றிப் பயம், தொலைக்காட்சி பார்க்காத குழந்தைகள் பற்றி, தூக்க மாத்திரை இல்லாத இரவுகள் பற்றி, மாத்திரைகள் இல்லாமல் கழிக்கின்ற பகல் பொழுதுகள் பற்றி எல்லாம் பயம். சனத்திரளும் பயம். தனிமையும் பயம். நடந்தவை பற்றியும் பயம். நடக்கவிருப்பவை பற்றியும் பயம். மரணமும் பயம். வாழ்வதும் பயம் என்று குறிப்பிடுகிறார்.

இந்தப் பயப்பிராந்தி தான் இலங்கையரிலும் காணக்கிடக்கிறது. குறிப்பாக பெரும்பான்மைச் சமூகத்துக்கு, தமது அரசியலைக் கொண்டு செல்வதற்காக அரசியல் சக்திகளால் இது ஊட்டப்பட்டிருக்கிறது. புலிகள் மீண்டும் எழும்பி வருவார்கள் என்ற பயம், முஸ்லிம்கள் அதிகரித்து விடுவார்கள் என்று பயம், பௌத்தர்கள் பன்சலை செல்ல மாட்டார்களோ எனும் பயம், முஸ்லிம்கள் பள்ளிவாசலுக்குச் செல்கின்றார்களே என்று பயம், பௌத்த மதம் அழிந்து விடும் என்ற பயம், சிங்கள இனம் இல்லாமல் போய்விடும் என்ற பயம், முஸ்லிம் பெண்களின் அபாயா ஒரு பயம், சிங்களப் பெண்களின் மேல் நாட்டு ஆடை மோகம் ஒரு பயம், நல்லிணக்கமும் பயம், மீண்டும் யுத்தம் வருமோ என்றும் பயம். முன்னர் நிறைவேற்றதிகாரம் பயம், இப்பொழுது அதனை இல்லாமலாக்குவதற்குப் பயம் என இந்தப் பயப்பிராந்தி தொடர்கிறது.

முடிவில்லாத இந்தப் பயங்களுக்கு அடிமையானவர்கள் இந்தப் பயத்திலிருந்து மீளுவதற்கான மீட்பரொருவர் தலையெடுக்க வேண்டும் என்று கருதுகின்றனர். இயக்கர்களுக்கும் (பேய்கள்) நாகர்களுக்கும் இடையில் நடந்த கைகலப்பிலிருந்து நாட்டை மீட்பதற்காக இலங்கை வந்தருளிய புத்தரை மறந்துவிட்டு எங்கோ இருக்கின்ற ஹிட்லரை பௌத்த மதத்தின் உயர்பீடம் ஞாபகப்படுத்துகின்ற அளவுக்கு இந்தப் பயம் உச்சம் கொண்டிருக்கிறது. இந்தப் பயத்தைப் போக்குவதற்கு ஹிட்லர்களினால் முடியாது என்பதை ஆறு நிறைவேற்றதிகார ஜனாதிபதிகளும் நிரூபித்திருக்கிறார்கள். இனி ஹிட்லர் இல்லாத இலங்கையைப் பற்றித்தான் மக்கள் சிந்திக்க வேண்டியிருக்கிறது. போதிமாதவனின் போதனையைப் பின்பற்றும் நாடு என்பது உண்மையாகவிருந்தால் ஹிட்லர் யுகங்களுக்கு முற்றுப் புள்ளி வைப்பது முடியாததில்லை.

## மனித உரிமை... (06 ஆம் பக்கத் தொடர்)

பற்றியதல்ல; ஐரோப்பாவுக்குள் நுழைந்து அல்லலுறும் அகதிகளின் அவலமும் மனித உரிமைகளும் பற்றியதல்ல. ஏனெனில், முடிவின்றித் தொடரும் யுத்தங்களும், அவற்றுக்கான ஆயுத விற்பனையும் மனித உரிமை அலுவல்களல்ல.

இவற்றையெல்லாம் தாண்டி, ஐ.நா மனித உரிமைப் பேரவையில், மனித உரிமைகள் பற்றி உரையாடுகிறார்கள் என்றால், எதைப் பற்றி உரையாடுகிறார்கள், யாருக்காக உரையாடுகிறார்கள், யார் உரையாடுகிறார்கள், யாரைப் பற்றி உரையாடுகிறார்கள் என்பன, கேட்க வேண்டிய கேள்விகளாகின்றன.

இவற்றை மனதில் கொண்டு, அமெரிக்கா வின் வெளியேற்றத்தை நாம் நோக்கலாம். மாறுகின்ற உலக ஒழுங்கு, அமெரிக்கா விரும் புவனவற்றை ஐ.நா. வின் அமைப்புகள் ஊடு, செய்ய இயலாமல் செய்திருக்கிறது.

இது, மூன்று வகையான எதிர்வினைகளை உருவாக்கியுள்ளது. ஒன்று, அமெரிக்கா சர்வதேச அமைப்புகளில் இருந்து விலகுவதும் ஒதுங்கியிருப்பதும் அமெரிக்காவின் இயலாமையைக் காட்டுகிறது.

இரண்டாவது, அமெரிக்கா சர்வதேச அமைப்புகளில் இருந்து விலகுவதானது, அமெ ரிக்கா சர்வதேச சட்டங்கள், சமவாயங்கள் என்பவற்றை மதிக்காமல், தன்னிச்சையாகச் செயற்படுவதற்கான இலவச ஒப்புதலை வழங்குகிறது. (அமெரிக்கா எப்போதும் சர்வதேச சட்டங்களை மதித்ததில்லை என்பது வேறு கதை).

மூன்றாவது, அமெரிக்காவை மையப்படுத்தாத (அமெரிக்காவை விலக்கிய) பலமான உலக ஒழுங்கு உருவாவதை, இது எடுத்துக் காட்டுகிறது.

அமெரிக்கா இவ்வமைப்பில் இருந்த காலத்தில், அமெரிக்காவில் மனித உரிமைகள் எவ்வாறு இருந்தன என்பதற்குக் கடந்தாண்டு வெளியிடப்பட்ட ஒரு புள்ளிவிவரம் போதுமானது.

கடந்தாண்டு, பெண்களுக்கு எதிராக வன்முறை இடம் பெறும் நாடுகளின் பட்டியல் ஒன்று, சர்வதேச அமைப்பு ஒன்றால் வெளியிடப்பட்டது.

எதிலும் முதலாவதாக இருக்க விரும்பும் அமெரிக்கா, அதன் விளைவாலோ என்னமோ, இந்தப் பட்டியலிலும் முதலிடம் வகிக்கிறது. அதிலும் குறிப்பாக, பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படும் சம்பவங்கள் அமெரிக்காவிலேயே அதிகம் நடைபெறுகின்றன.

அமெரிக்காவில் வருடமொன்றுக்கு 96,000 பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இதில் 80% தொடர்பில் எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை.

இதற்கான காரணங்களை ஆராயும் அந்த அறிக்கை, முக்கியமான இரண்டு அவதானிப்புகளைச் செய்கிறது.

முதலாவது, அமெரிக்காவில் சட்ட நடவடிக்கை எடுப்பது என்பது, மிகவும் பணச் செலவான ஒரு செயற்பாடாகும்.

இலவசமாக வழக்கு தாக்கல் செய்ய முடியாது. அவ்வாறு வழக்கு தாக்கல் செய்தாலும் வழக்கு நீண்ட காலத்துக்கு இழுபடும். எனவே, நீதி கிடைப்பதற்கு அதிகளவு பணம் செலவழிக்க வேண்டும். நீதியைப் பணமே தீர்மானிக்கிறது.

அறிக்கை சொல்லும் இரண்டாவது காரணம், அமெரிக்க நீதித்துறை, பாலியல் வல்லுறவு தொடர்பான வழக்குகளை, அக்கறையாகக் கருத்தில் கொள்வது இல்லை. இதனால் பாலியல் வல்லுறவு வழக்குகளுக்குத் தீர்ப்புகள் ஒழுங்காக வழங்கப்படுவது இல்லை.

உலகெங்கும் மனித உரிமைகள் பற்றியும், ஜனநாயகம் பற்றியும் அறிவுரை சொல்லும் அமெரிக்கா, தன் நாட்டு மக்களுக்கே மனித உரிமைகளை வழங்குவது இல்லை.

அமெரிக்கா பேசிய பேசிவருகின்ற மனித உரிமைகள் பொதுவானவை அல்ல; சிரிய விடயத்தில் அல்லது வெனிசுவேல, கியூபா விடயங்களில் பேசப்படும் மனித உரிமைகள், பலஸ்தீன, சவூதி அரேபிய விடயங்களில் பேசப்படுவதில்லை.

அமெரிக்காவுடனான குறித்த நாட்டின் உறவு, மனித உரிமைகள் குறித்துப் பேசுவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கின்றன. மனித உரிமைகளைப் பொதுவில் வைக்காத, அதை மதிக்காத ஒரு நாடு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இருந்தென்ன போயென்ன.

(நன்றி - தமிழ் மிரர்)

## கோத்தாவை... (04 ஆம் பக்கத் தொடர்)

அதன் பின்னர், ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றாலும், தமிழர்களில் கணிசமானோர் மஹிந்த தரப்பின் வேட்பாளரை அல்லது, 'மிக்க அறிவுடையோர் பாதை' என்ற அமைப்பின் ஊடாக, நகர்ந்து கொண்டிருக்கும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரையோ ஆதரிப்பார்கள் என்று சொல்வது கடினம்.

மஹிந்தவின் வேட்பாளராக வருபவரை, முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் ஆதரிப்பர் என்று ஊகிக்க முடியுமாயினும், கோத்தாபயவுக்கு அந்த ஆதரவு கிடைக்குமா என்பது சந்தேகம் என்றே அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறான சூழலில், சிங்களக் கடும் போக்கு சக்திகளும் பெருந்தேசியமும், சிறு பான்மை மக்களால் கடும் போக்காளராக நோக்கப்படுகின்ற ஒருவரை, ஜனாதிபதியாக்க முயற்சி செய்கின்றனரோ என்ற சந்தேகம் எழுகின்றது.

ஜனநாயக விரோதமான, ஓர் இராணுவ ஆட்சிபோல் அது அமைந்தாலும் பரவாயில்லை என்று, அஸ்கிரிய பீடத்தின் வெண்டருவே உபாலி தேரர் போன்றோர் கருதுகின்றார்களோ என்றும் சிந்திக்க வேண்டியிருக்கின்றது.

மேற்படி தேரரின் கருத்தை, இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜொான் ரொட், வன்மையாகக் கண்டித்துள்ளார். இதேவேளை, ''ஹிட்லராக மாறுமாறு, புத்தர் உபதேசம் செய்யவில்லை. அவ்வாறான ஆலோசனை, எனக்குக் கூறப்பட்டிருந்தால், அதை மறுத்திருப்பேன்'' என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கின்றார்.

''நாட்டுக்கு, ஹிட்லரோ, இடிஅமீனோ தேவையில்லை'' என்று, அமைச்சர் சஜித் பிரேமதாஸ கூறியுள்ளார்.

அஸ்கிரிய பீடத்தின் தேரர் ஒருவர், ஹிட்லரை முன்னுதாரணமாகக் காட்டியதை, மஹிந்த ராஜபக்ஷவோ, கோத்தாபய ராஜபக்ஷவோ தவறாக நோக்கவில்லை. அத்துடன், 'ஹிட்லரைப் போன்ற ஆட்சி நிறுவப்பட வேண்டும் என்பதில் தவறில்லை' என்ற தொனியில் மஹிந்த கருத்துச் சொல்லி இருக்கின்றார்.

வெண்டருவே உபாலி தேரரின் கருத்து தொடர்பில், முக்கிய பௌத்த பீடங்கள் கருத்துரைக்கவும் இல்லை.

இன்னும் ஒன்றரை வருடங்களில் அல்லது அதற்கு முன்னதாக, ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும்போது, இப்போதைய ஜனாதிபதியோ, பிரதமரோ, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வேட்பாளரோ, கோத்தாபய ராஜபக்ஷவோ அல்லது வேறு யாருமோ களத்தில் குதிக்கலாம். அதில் மக்கள் விருப்பப்படி யாராவது தேர்ந்தெடுக்கப்படலாம். அது வேறு விடயம்.

ஆனால், ஜனநாயக விரோத இராணுவ ஆட்சி அல்லது கொடுங்கோல் ஆட்சியாளரை முன்மாதிரியாகக் கொண்ட ஆட்சி முறை ஒன்றுக்கு, மத குருமாரோ, பொதுமக்களோ, செயற்பாட்டாளர்களோ எவ்விதத்திலும் ஆசீர்வாதம் அளிக்கக் கூடாது என்பதே வேண்டுதலாகும்.

இலங்கை, மீண்டும் 'பூச்சியத்தில்' இருந்து பயணிக்க, யாரும் முன்னிற்கக் கூடாது.

## உயிரோட்டமாக்கப்பட... (12 ஆம் பக்கத் தொடர்)

செல்வாக்கு செலுத்தும் இயக்கத்தினதும் திருப்பதியையும் பெற்றுக் கொள்ளவும் வேண்டும். இது தான் இன்றைய உலமாக்களின் நிலைமை.

அதனால் தான் ஷஹீத் அப்துல் காதிர் அவ்தா (ரஹ்) அவர்கள் தமது நூலொன்றில் ''இஸ்லாத்தில் உள்ளதை உள்ளபடி எடுத்துக் கூறினால் முஸ்லிம் சமூகம் முகம்கொடுத்துள்ள பிரச்சினைகளில் மூன்றிரண்டு பங்கு பிரச்சினைகள் தானாகவே தீர்ந்துவிடும். ஆனால் பெரும்பாலான உலமாக்கள் தம் வயிற்றையும் தொழிலையும் முன்னிலைப் படுத்தி இஸ்லாத்தில் உள்ளதை உள்ளபடி கூறுவதில்லை'' என்று குறிப்பிட்டுள்ளார். அதுதான் உண்மை.

ஆகவே, ஜும்ஆ பிரசங்கங்களை தெளிவாகவும் உயிரோட்டம் மிக்க வகையிலும் அமைப்பதற்கு தேவையான பயிற்சியும் வழிகாட்டல்களும் உலமாக்களுக்கு வழங்கப்பட வேண்டும். அத்தோடு உலமாக்களையும், நம்பிக்கையாளனர்களையும் ஒரு ஒருங்கிணைப்பின் கீழ் கொண்டு வரவும் வேண்டும். இவ்விடயத்தில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையும், வக்பு சபை மற்றும் முஸ்லிம் சமய கலாசார திணைக்களம் என்பனவும் கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியமான விடயமாகும்.

அத்தோடு பிரதேச, தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்களின் போது தேவைப்படும் சந்தர்ப்பங்களில் உலமா சபை ஜும்ஆ பிரசங்கங்களைத் தயாரித்து பள்ளிவாசல்களுக்கு வழங்க முடியும். இவ்விடயங்களில் கவனம் செலுத்தி உரிய சீர்திருத்தங்களை மேற்கொள்ளவிட்டால் ஒரு நூற்றாண்டு சென்றாலும் கூட ஜும்ஆ பிரசங்கங்களை உயிரோட்டம் மிக்கவையாக மாற்றவோ ஜும்ஆவின் போது பள்ளியில் தூங்குபவர்களை விழிக்கச் செய்யவோ முடியாது. இதனை உணர்ந்து செயற்பட வேண்டியது ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.

## நூற்றாண்டு...
(08 ஆம் பக்கத் தொடர்)

முழுமையாக அடிபணிந்துள்ளார் என்று காலித் மேலும் தெரிவித்துள்ளார்.

தந்தை சல்மானுக்குப் பின்னர் தான் மன்னராக ஆகுவதற்கு இப்போதே ரியாதின் இளவரசராக உள்ள பைஸல் பின் பந்தரை அடுத்த பட்டத்துக்குரிய இளவரசராக மாற்றும் முயற்சியிலும் முஹம்மத் பின் சல்மான் ஈடுபட்டுள்ளார். புதிய பட்டத்துக்குரிய இளவரசரான முஹம்மத் பின் சல்மான் பலவீனமான ஆளுமை உள்ளவர். பின் சல்மானின் நடவடிக்கைகள் ஆளும் குடும்பத்திற்குள் பாரிய கோபத்தை உருவாக்கியுள்ளது என்றும் காலித் பின் பர்ஹான் அஸஸஊத் அப்பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்க பல்கலைக் கழக பேராசிரியர் ஒருவர் உலகின் மிகப் பெரிய செல்வந்த சியோனிஸ்ட் முஹம்மத் பின் சல்மான் என்று தெரிவித்துள்ளமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 12 இதழ்கள் | - ரூபா 600.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 24 இதழ்கள் | - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: [illegible] People's Bank A/c: [illegible] (Branch: Sri Sangaraja Mawatha)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காகிதத்தைக் கண்டுபிடித்த சீனர்களின் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி முஸ்லிம்கள், காகித்தை விரிவுபடுத்திப் பரப்பியதன் ஊடாக வாசிப்புக்கான முதன்மைச் சாதனமான புத்தகங்களை ஒரு வளர்ச்சியடைந்த நிலைக்குக் கொண்டு வந்தார்கள்.

உமையா, அப்பாஸிய காலப் பிரிவின் இஸ்லாமிய சாம்ராஜியம் வாசிகசாலை என்ற கலாச்சாரத்தை தமது சாம்ராஜ்ய நிலங்கள் முழுக்க மிகவும் விரிவுபடுத்தியது. இவ்வாறு முஸ்லிம்களுக்கும் வாசிப்புக்குமுள்ள தொடர்பு அடிப்படையானது; அசல் தன்மை வாய்ந்தது.

குறிப்பிட்ட பாடத்திட்டத்தை முடிப்பதன் மூலம் சான்றிதழ்களைப் பெறும் கல்வி குறுகிய வட்டம் கொண்டது. அது ஆய்வாழம் கொண்டதாகவும், விரிந்த தன்மை கொண்டதாகவும் அமையும் சந்தர்ப்பம் குறைவு. அதிகமாக இக்கல்வி தகவல்களின் திரட்டு; பல கருத்துக்களின் சேகரிப்பு.

கல்வி நிறுவனமொன்றில் படிக்காதவனும், அல்லது சிறியதொரு தரத்தோடு அக் கல்வி நிறுவனத்தை விட்டு வெளியேறியவனும் வாசிப்பால் உயர்கிறான்; அறிஞனாகிறான்; அறிவுஜீவியாகிறான்.

வாசிப்பே கல்வியை முழுமைப்படுத்துகிறது; ஆழமாக்குகிறது; விரிவுபடுத்துகிறது. அது பல்வேறு சிந்தனைத் தளங்களைக் காட்டும்; நாடுகளையும், சமூகங்களையும் அறிய உதவும்.

வாசிப்பு விரிவாக விரிவாக தன்னைச் சுற்றியுள்ள பிரபஞ்சத்தை மனிதன் புரிந்து கொள்கிறான். தன்னையும் புரிந்து கொள்கிறான். தன்னைச் சுற்றியுள்ள உலகைப் புரிந்து கொள்ளாதிருப்பதும், தன்னைப் பற்றியே அறியாதிருப்பதுவும் எவ்வளவு பெரும் துரதிஷ்டம்!

வாசிப்பு இல்லாதவன் எப்படி மனிதனாக முடியும்?! தன்னைச் சுற்றியுள்ள உலகையோ, தன்னைப் பற்றியோ அவனுக்குத் தெரியாது. அர்த்தப்பூர்வ வாழ்வு அறிவோடுதான் ஆரம்பமாக முடியும். அறிவற்றவன் ஒரு மிருகம்.

உண்ணவும், குடிக்கவும், பிள்ளைகள் பெற்று வாழவுமே இவ்வுலகோடு அவன் தொடர்பு கொள்கிறான். அவ்வளவே அவனுக்கு இவ்வுலகு பற்றித் தெரியும். இது என்ன இழிந்த வாழ்வு!

கல்வி நிறுவனமொன்றில் படித்து வெளியேறியதும் வாசிப்பதன் ஊடே அறிவு தேடாது, அறிவு வாழ்வைத் துறந்து, பெற்ற சான்றிதழால் உழைக்க மட்டும் தெரிந்தவன் ஒரு பொருளாதார பிராணி மட்டுமே. வாசிப்பு ஒரு பழக்கமாக வேண்டும். வாசிக்காத ஒரு நாள் வாழ்வில் இருந்து விடக் கூடாது. இப்படி அறிவில் எப்போதும் உயர்ந்து கொண்டே செல்ல வேண்டும். இதுவே வாசிப்பின் அடிப்படை உண்மை.

வாசிப்பு குறிப்பிட்ட துறை சார்ந்ததாகவோ, குறிப்பிட்ட சிந்தனை முகாம் சார்ந்ததாகவோ மட்டும் இருக்கக்கூடாது. இது பார்வையைக் குறுக்கும். குறிப்பிட்ட சிந்தனை முகாம் சார்ந்து இது அமைந்தால் குறிப்பிட்ட நபரை அது பிடிவாதக்காரனாகவும், வெறி உணர்வு கொண்டவனாகவும் ஆக்கும். இதுவே மூளைச் சலவை செய்ததாக அமைகிறது. துறையோ, முகாமோ சாராது, விரிந்து வாசிப்பவன் உண்மைகளை அவசரமாகப் புரிந்து கொள்கிறான். அவனது பார்வை விரிகிறது. விட்டுக் கொடுக்கும் மனப் பாங்கும், சகிப்புத் தன்மையும், அடுத்த கருத்துக்களை மதிக்கும் போக்கும் அவனிடம் உருவாகிறது. ஒரு பிரச்சினைக்கு ஒரு கோணமல்ல, பல கோணங்கள் உள்ளன என்றும், தீர்வு என்பது ஒரு தீர்வல்ல, பல தீர்வுகள் உள்ளன எனவும் அவன் புரிந்து கொள்கிறான். இந்த வகையில் கருத்து வேறுபாட்டின் வட்டமும் சுருங்குகிறது.

குறிப்பிட்ட துறையில் குறிப்பிட்ட பாடத்திட்டத்தை படிப்பது மட்டுமே கல்வி அல்ல. அது முழுமையான கல்வியுமல்ல. அது மிகச் சரியாக அமைந்தால் கற்றலுக்கு அது வழிகாட்டும்; நெறிப்படுத்தும். வாசிப்பைத் தொடரும் போது தான் கற்றல் செயற்பாடு விரிகிறது. ஆழமாகிறது.




# பொறுமை



புகழ்பெற்ற விஞ்ஞானி ஐசக் நியூட்டன் ஒரு நாயை வளர்த்து வந்தார். அதற்கு டயமண்ட் (வைரக் கல்) என்று பெயரும் சூட்டி அன்பாகப் [illegible] வந்தார். ஒரு நாள் அவர் மாலையில் உலாவச் சென்றார். அப்பொழு[illegible]ஜை மீது மெழுகுவர்த்தி எரிந்து கொண்டிருந்தது. அன்று என்ன நிகழ்ந்ததோ தெரியவில்லை. அவர் உலாவச் சென்ற நேரத்தில் அந்த நாய் மேஜை மீது தாவிக் குதித்தது போலும். மெழுகுவர்த்தி கீழே சாய்ந்து அங்கு அவர் எழுதிவைத்திருந்த காகிதங்களுக்குத் தீவைத்தது. அத்தனையும் எரிந்து கருகின. அதன் அருமை பெருமை நியூட்ட்ன் ஒருவருக்கே தெரியும். ஏனெனில் அவை அவரது இருபது ஆண்டுக் கால ஆராய்ச்சியின் முடிவுகளடங்கிய காகிதங்கள்.

உலாவச் சென்று திரும்பிய நியூட்டனுக்கு அவற்றைப் பார்த்தவுடன் பெரும் அதிர்ச்சி. எல்லாம் டயமண்டின் 'திருவிளையாடல்' தான் என்பது அவருக்குப் புரிந்தது. அதுவோ தான் செய்த பெரிய தீங்கை அறியாது அன்பாக வாலைக் குழைத்து நியூட்டனை வரவேற்றது. நியூட்டனைத் தவிர வேறு ஒருவர் அந்த சூழ்நிலையில் இருந்திருந்தால், நாயை எத்தி உதைந்து அறைக்கு வெளியே தள்ளி கதவைச் சாத்தியிருப்பார். ஆனால் நியூட்டனோ அன்பாக நாயை எடுத்துத் தழுவி அணைத்து, ''டயமண்ட், நீ செய்த சிறிய காரியத்தின் விளைவுகளை நீ அறியமாட்டாய்'' என்றுசொல்லிக் கொஞ்சினார். அது மீண்டும் வாலை ஆட்டி தன் நன்றியைத் தெரிவித்தது. நியூட்டன் மீண்டும் எழுதத் துவங்கினார்

## எந்த கோணத்தில் பார்க்க வேண்டும்

ஒரு கிராமத்தில் ஒரு அறிஞர் இருந்தார். அவர் ஒரு பொருளாதார மேதை. பல மன்னர்கள் தங்கள் நாட்டுப் பொருளாதாரத்தைச் சீர்படுத்த அவர் ஆலோசனையை நாடினர்.

ஒரு நாள் ஊர்த் தலைவர் அவர் முன் வந்து அவரைப் பார்த்துக் கிண்டலாக, 'அறிஞரே! நீங்கள் பெரிய அறிஞர் என்று உலகமே பாராட்டுகிறது. ஆனால் உங்கள் பையன் ஒரு அடி முட்டாளாக இருக்கிறானே! தங்கம், வெள்ளி இவற்றுள் அதிகம் மதிப்பு வாய்ந்தது எது என்று அவனைக் கேட்டால் அவன் வெள்ளி என்று சொல்கிறான். வெட்கக்கேடு!'' என்றார்.

அறிஞர் மிக வருத்தமடைந்தார். பையனை அழைத்தார். ''தங்கம், வெள்ளி இவை இரண்டில் அதிகம் மதிப்பு வாய்ந்தது எது?'' என்று கேட்டார். பையன் ''தங்கம்'' என்று சொன்னான்.

''பின் ஏன் ஊர்த் தலைவர் கேட்கும்போது வெள்ளி என்று சொன்னாய்?'' கோபத்துடன் கேட்டார் அறிஞர்.

'தினமும் நான் பள்ளி செல்லும்போது அவர் ஒரு கையில் தங்க நாணயமும், மறு கையில் வெள்ளி நாணயமும் வைத்துக் கொண்டு என்னை அறிஞரின் மகனே என அழைத்து 'இவ்விரண்டில் மதிப்பு வாய்ந்ததை நீ எடுத்துக் கொள்' என்பார். நான் உடனே வெள்ளியை எடுத்துக் கொள்வேன். உடனே அவரும் சுற்றி இருப்பவர்களும் சிரித்துக் கிண்டல் செய்வார்கள். நான் அந்த நாணயத்துடன் போய் விடுவேன். இது ஓராண்டாக நடக்கிறது. தினம் எனக்கு ஒரு வெள்ளி நாணயம் கிடைக்கிறது. நான் தங்கம் என்று சொல்லி எடுத்துக் கொண்டால் அன்றோடு இந்த விளையாட்டு நின்று விடும். எனக்கு நாணயம் கிடைப்பதும் நின்று போகும். எனவே தான்'' அறிஞர் திகைத்தார்!

## முஸ்லிம் உலகின்... (10 ஆம் பக்கத் தொடர்)

ஐரோப்பாவுக்கு வெளியே உண்மையான அவசர நிலை ஏற்பட்டுள்ள[illegible]ர்வதேச சமூகத்திடம் மேலதிக உதவிகள் வேண்டப்படும் தவிர்க்க முடியாத ஒரு நிலை அங்கு தோன்றி உள்ளது. உதாரணத்துக்கு துருக்கியில் இன்று சுமார் 30 லட்சம் அகதிகள் உள்ளனர். ஜோர்தானில் 27 லட்சம் அகதிகள் உள்ளனர். இது அந்த நாட்டின் சனத்தொகையில் சுமார் 41 வீதமாகும். லெபனானில் 15 லட்சம் சிரியா நாட்டு அகதிகள் உள்ளனர். அந்த நாட்டு சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்காக இது அமைந்துள்ளது.

இந்த நாடுகளிலும் உலக அளவில் அகதிகளுக்கு பெரும் இடம் அளித்துள்ள ஏனைய பல நாடுகளிலும் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகள் மிகவும் கவலைக்குரிய விதத்திலேயே காணப்படுகின்றன. காரணம் இந்த நாடுகள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பட்டியலிலேயே உள்ளன. இங்கு வேலை இல்லாதோர் விகிதமும் அதிகம்.

போதியளவு நலன்புரி வசதிகள் இல்லை. சமூக அமைதி யீனமும் இங்கு அதி[illegible]ளவில் காணப்படுகின்றன. ஒப்பீட்டளவில் (ஜெர்மனியைத் தவிர) ஐரோப்பிய யூனியனின் 28 வளம் மிக்க நாடுகள் 2015 இல் ஐரோப்பாவுக்குள் பிரவேசித்த சுமார் பத்து லட்சம் அகதிகளுள் ஒரு லட்சத்து அறு பதாயிரம் பேரை மட்டுமே தமக்கிடையில் பகிர்ந்து கொள்ள முன்வந்துள்ளன.

2018 ஜூன் 29 வெள்ளிக்கிழமை அன்று ஐரோப்பிய தலைவர்கள் அகதிகள் மற்றும் வழமைக்கு மாறான புலம் பெயர்ந்தோர் விடயங்கள் சம்பந்தமான ஒரு உடன்பாட்டுக்கு வந்துள்ளனர். ஏனைய பல ஐரோப்பிய யூனியன் விடயங்களைப் போலவே இதுவும் மாறுபட்ட கருத்துக்களைக் கொணடுள்ளவர்களைத் திருப் திப்படுத்தும் வகையிலான் மிகவும் கவனமான ஆனால் தெளிவற்ற வார்த்தைப் பிரயோகங் களைக் கொண்ட ஒரு அறிவிப்பாகவே உள்ளது. இந்தப் பிரச்சினைக்கு தீர்க்கமானதோர் தீர்வி னைக் காண்பதை இது மீண்டும் தாமதப்படுத்தி உள்ளது. ஆனால் இந்தப் பிரச்சினையை கட்டி எழுப்புவதற்கான ஒரு அடித் தளத்தை இது அமைத்துள்ளது.

இதனிடையே ஐக்கிய நாடுகள் சபையின் அண்மைக்கால அறிக்கை ஒன்றின் படி உலகின் 7.4 பில்லியன் சனத் தொகையில் உலகளாவிய ரீதியில் 113 பேரில் ஒருவர் என்ற ரீதியில் ஒன்றில் புகலிடம் கோருபவராக அல்லது உள் நாட்டில் இடம்பெயர்ந்தவராக அல்லது அகதியாக உள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இது இதற்கு முன்னர் எப்போதும் இருந்திராத ஆபத்தான ஒரு நிலை என்றும் ஐ.நா அகதிகள் அலுவலகம் கூறுகின்றது.

ஒப்பீட்டளவில் இதைப் பார்க்கின்ற போது இந்த எண்ணிக்கையானது பிரிட்டன், கனடா ஆகிய நாடுகளின் சனத் தொகையிலும் பார்க்கவும் அதேபோல் அவுஸ்திரேலியா மற்றும் நியுஸிலாந்து ஆகிய நாடுகளின் இணைந்த சனத் தொகையிலும் பார்க்கவும் அதிகமானது. 2015 முடிவில் கைத்தொழில் நாடுகளில் புகலிடத்துக்காகக் காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 32 லட்சமாக இருந்தது. ஐ.நா அகதிகள் அலுவலகம் அதன் வரலாற்றில் பதிவு செய்துள்ள ஆகக் கூடுதலான எண்ணிக்கை இதுவாகும்.

இதில் மிகவும் கவலைக்குரிய விடயம் இந்த அகதிகளின் மொத்த எண்ணிக்கையில் 51 வீதம் சிறுவர்களாகும். இவர்களுள் பலர் பெற்றோரைப் பிரிந்து அல்லது பறிகொடுத்து தனியாக வந்தவர்கள் அல்லது பயணத்தின் போது பறிகொடுத்தவர்கள்.

லிபியா, ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான், யெமன், சோமாலியா மற்றும் முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்த மக்களின் இன்றைய பரிதாபகரமான நிலை இது தான். இந்த நாடுகளை அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா மற்றும் இஸ்ரேலிய யூத மற்றும் சுவிசேஷ கிறிஸ்தவ சக்திகள் வெறக்க் கேடான கொடுமைக்கார அரபு ஆட்சியாளர்களின் ஒத்துழைப்போடு வேட்டையாடி சூறையாடியதால் ஏற்படுத்தப்பட்ட விளைவு தான் இது.

## இனங்களுக்கும்... (01 ஆம் பக்கத் தொடர்)

இடைவெளியைக் குறைக்கும் பணி இதுவரை பூரணமடையவில்லை என்றும் தெரிவித்தார். இந்தோ அமைதி வலயத்தின் பரந்த பாதுகாப்புக்கும், மேம்பாட்டுக்கும் இலங்கையும் மாலைதீவும் மிகவும் முக்கியமானவைகள் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகக் கடமையாற்றிய அதுல் கெஷாப் உடைய சேவைக்காலம் கடந்த ஜூன் முதல் நிறைவுற்றதையடுத்தே அலெய்னா டெப்லிஸ்ட் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். அமெரிக்க ஐக்கிய குடியரசின் வெளிநாட்டுச் சேவை அதிகாரியாகக் கடமையாற்றிய இவர், 1991 இல் இராஜாங்கத் திணைக்களத்தில் இணைந்தார். ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் உள்ளிட்ட பல ஆசிய நாடுகளில் பணியாற்றிய இவர் கடைசியாக நேபாளத்துக்கான அமெரிக்கத் தூதுவராகக் கடமையாற்றினார்.

## வில்பத்து... (01 ஆம் பக்கத் தொடர்)

இவற்றை அகற்றிவிடுவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கி.பி. 543 இல் விஜயன் வந்திறங்கிய தம்பபன்னி பிரதேசத்தை அண்டிய இந்தக் குதிரைமலைப் பிரதேசத்தில் நீண்ட காலத்துக்கு முன்னர் முஸ்லிம்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் காணப்பட்டுள்ளன. யுத்த காலத்தில் இந்தப் பிரதேசத்திலுள்ள குதிரைச் சிலையுட்பட்ட பல புராதனச் சின்னங்கள் சிதைக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் துறைமுகத்தைப் பயன்படுத்தி முஸ்லிம்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்கான சான்றுகளும் இருந்திருக்கின்றன.

முஸ்லிம்கள் பூர்வீகமாக வாழும் மன்னார் பிரதேசங்களில் காணப்படுவது போன்ற நீளமான அடக்கஸ்தலமொன்று சிதைவடைந்த நிலையில் குதிரை மலையில் எவ்விதப் பாதுகாப்புமின்றி காணப்படுகிறது. இந்த இடம் தற்பொழுது கடற்படையினரின் குடியிருப்பாக மாறியிருக்கிறது. இதுபோன்ற தொல்பொருட்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதனால் முஸ்லிம்களின் பூர்வீகத்தை எடுத்துக் காட்டும் இந்தத் தொல்பொருட்கள் அழிக்கப்படும் அபாயத்தை எதிர் நோக்கியிருக்கின்றன.

## பாராளுமன்ற... (01 ஆம் பக்கத் தொடர்)

ஒக்டோபர் முதல் வாரத்திலோ எமக்குக் கிடைக்கச் செய்தால், வடக்கு மாகாணத்தையும் இணைத்து 2019 ஜனவரி முதல் வாரத்தில் எம்மால் தேர்தலை நடத்த முடியுமாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

நல்ல பாடசாலை ஒன்றிருக்கிறது. சிறந்த ஆசிரியர்களும் இருக்கிறார்கள். நல்ல பாடத்திட்டமும் இருக்கிறது. மாணவர்களும் பாடசாலையில் சேர்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனாலும் மாணவர்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை நடத்தப்படவில்லை என்றால் பாடசாலை எப்படி இயங்கும் ? இதே நிலை தான் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் எனவும் அவர் எடுத்துரைத்தார்.

## அறிக்கைகளுக்கு... (01 ஆம் பக்கத் தொடர்)

இந்த அறிக்கை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட வேண்டியிருந்த போதும் அறிக்கை இதுவரை பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படாமலிருக்கிறது.

மாகாண சபைத் தேர்தல்களை நடத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் உட்பட பலதரப்பினரிடமிருந்தும் அழுத்தங்கள் வந்த போதும் முடிவுறுத்தப்படாத இந்த அறிக்கை தேர்தல் தாமதத்துக்குக் காரணமாக தற்போது முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேபோல வில்பத்து சரணாலயத்துக்கு அருகில் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேற்றப்பட்டவர்களை மீள் குடியேற்ற முயன்றபோது வில்பத்து சரணாலயம் அழிக்கப்படுகிறது என்ற கூப்பாடுகள் முன்வைக்கப்பட்டன. இது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவினர் தமது அறிக்கையை சமர்ப்பித்து ஆறு மாதங்களுக்கு மேலாகியும் அந்த அறிக்கை இதுவரை வெளியிடப்படாமல் இருக்கிறது.

முஸ்லிம் தனியார் சட்டத்தில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பாக முன்மொழிவுகளை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட நீதியரசர் சலீம் மர்சூப் தலைமையிலான குழுவினர் கடந்த ஜனவரி மாதம் முன்வைத்த அறிக்கையும் இதுவரை வெளியிடப்படவில்லை.

## இலங்கையின்... (01 ஆம் பக்கத் தொடர்)

இதனைக் கருத்திற் கொண்டு இனி வரும் காலங்களில் இலங்கை நிறுவனங்களையும் பங்குதாரராக்கும் வகையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை நாங்கள் நாடியிருக்கிறோம் என்று தெரிவித்த அவர், இனி இலங்கையில் கட்டட ஒப்பந்தத்தில் ஈடுபடும் எந்த நாடும் உள்ளூர் நிறுவனங்களை இணைத்துக் கொள்ளும் வகையிலான அமைச்சரவைப் பத்திரமொன்றையும் நாங்கள் சமர்ப்பிக்க [illegible]

## புதிதாக... (01 ஆம் பக்கத் தொடர்)

2025 இல் செல்வந்த நாடாக இலங்கையை மாற்றும் அரசாங்கத்தின் பொருளாதார நோக்கின் ஒரு அம்சமாக இந்த நிதி வழங்கல் அமைகிறது எனவும் 2018 வரவு செலவுத் திட்டத்தில் பிரேரிக்கப்பட்டதன்படி இதற்கென 800 மில்லியன் ரூபாவை திறைசேரி ஒதுக்கி உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

ஆறு மாதங்களில் முடிவடையும் வியாபார முயற்சிகளுக்கு ஒரு மில்லியன் ரூபாவும், 18 மாத கால தொழில் முயற்சிகளுக்கு 01 மில்லியனில் இருந்து 5 மில்லியன் ரூபா வரையும் வழங்கப்படவிருக்கின்றன. இந்த நிதியைப் பெற்றுக் கொள்ள விரும்பும் தொழில் முயற்சியாளர்கள் தமது தொழில் உபாயங்களை உடனடியாக தமக்குச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தவிசாளர் இந்திரா மல்வத்த தெரிவித்தார்.

மேலதிக தகவல்களை 011-3144613 / 0112-303975 என்ற தொலைபேசி இலக்கத்துடனோwww.edb.gov.lk என்ற இணையத் தளம் ஊடாகவோ பெற்றுக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




''எப்போதும் நாம் கனவு காண்பது போல் முடிவு ஒன்று கிடைக்காது''

-ஸ்பெய்ன் வீரர் அன்ட்ரெஸ் இனியஸ்டா விடைபெறும்போது-

# கிரிக்கெட் விளையாட்டின் ஒழுக்கம் தொடர்பான செயலி ஒன்றினை வெளியிட்டுள்ள ஐ.சி.சி

International Cricket

சர்வதேச கிரிக்கெட் பேரவையானது (ஐ.சி.சி.) கிரிக்கெட் விளையாட்டின் நேர்மை தன்மையைப் பேணுவதற்கும், கிரிக்கெட் விளையாட்டின் மகத்துவத்தைக் காப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நடவடிக்கைகளின் ஒரு அங்கமாக ஐ.சி.சி. ஆனது கிரிக்கெட் விளையாட்டின் ஒழுக்கக் கோவைகள் மற்றும் ஊக்கமருந்து பாவனை தொடர்பான அனைத்துத் தகவல்களும் அடங்கிய செயலி (App) ஒன்றினை வெளியிட்டுள்ளது. 'ICC Integrity' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த செயலி ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகளிலும், டப்களிலும் (Tab) பயன்படுத்த முடியுமாக இருக்கின்ற இதே தருணத்தில், கிரிக்கெட் விளையாட்டின் ஒழுக்கக் கோவைகள், ஊக்கமருந்து பாவனை போன்றவை தொடர்பான தகவல்களை அனைவருக்கும் விரல் நுனியில் வழங்குவது செயலி உருவாக்கப்பட்டதன் நோக்கமாகும்.

இந்தப் புதிய செயலி கிரிக்கெட் வீரர்களுக்கும், கிரிக்கெட் விளையாட்டு சார்ந்த உத்தியோகத்தர்களுக்கும் கிரிக்கெட்டின் ஒழுங்கு முறையினைப் பேணுவதற்கு என்னென்ன விடயங்கள் தேவையாக இருக்கின்றதோ? அவை அனைத்தையும் உள்ளடக்கிய விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.

இந்த செயலியில் உள்ள விடயங்களை அறிவதன் மூலம் எதிர்காலத்தில் கிரிக்கெட் வீரர்களும், கிரிக்கெட் சார்ந்த உத்தியோகத்தர்களும் விளையாட்டின் மகத்துவத்தை சரியான முறையில் பேண சந்தர்ப்பம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கின்றது. மேலும், இந்த செயலியில் கிரிக்கெட் விளையாட்டின் மகத்துவத்தைக் குறைக்கும் சம்பவங்களோ அல்லது ஊக்க மருந்து பாவனை தொடர்பான சம்பவங்களோ இடம்பெறுவதை அவதானித்தால் அவ்வாறான சம்பவங்களை முறைப்பாடு செய்வதற்கான வசதியும் காணப்படுகின்றது.

ஐ.சி.சி. இன் புதிய செயலியானது தற்போதைய, முன்னாள் கிரிக்கெட் நட்சத்திரங்களிடையேயும், கிரிக்கெட் இரசிகர்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பினை பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# FA கிண்ண மாவனல்லை லீக் சம்பியனாக முடிசூடிய யுனைடட் அணி

நடப்பு FA கிண்ண கால்பந்து சுற்றுத் தொடரின் மாவனல்லை கால்பந்து லீக்கிற்கான இறுதிப் போட்டியில் ரிவர் ஸைட் விளையாட்டுக் கழகத்தை 6-0 என்ற கோல் கணக்கில் இலகுவாக வெற்றி கொண்ட மாவனல்லை யுனைடட் விளையாட்டுக் கழகம், லீக் சம்பியனாக முடிசூடி, அடுத்த சுற்றுக்குத் தெரிவாகியுள்ளது.

ஏற்கனவே இடம்பெற்ற போட்டிகளில் எந்தவிதத் தோல்விகளையும் சந்திக்காத இவ்விரு அணிகளும் மோதிய லீக் வெற்றியாளரைத் தெரிவு செய்வதற்கான இந்த மோதல் ஞாயிற்றுக்கிழமை (01) கண்டி போகம்பரை விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியின்போது, இலங்கை தேசிய கால்பந்து அணியின் B அணிக்கு தெரிவாகியுள்ள மொஹமட் சல்மான் யுனைடட் அணிக்காக தனது ஹெட்ரிக் கோலைப் பதிவுசெய்து மொத்தமாக 4 கோல்களைப் பெற்றுக் கொடுத்தார். இந்த வெற்றியின் மூலம் யுனைடட் விளையாட்டுக் கழகம் இம்முறை FA கிண்ண தொடரில் அடுத்த சுற்றில் ஆடும் வாய்ப்பைப் பெறும் இரண்டாவது மாவனல்லை லீக் அணியாக பதிவாகியது.



# சசெக்ஸ் அணியில் இணையும் ரஷித் கான்

ஆப்கானிஸ்தான் அணியின் இளம் நட்சத்திர சுழல் வீரரான ரஷித் கான் கிரிக்கெட்டின் குறைந்த ஓவர்கள் கொண்ட T20 போட்டிகளில் சிறந்த ஆட்டத்தை காட்டுவதனால் அனைவராலும் பேசப்படும் ஒருவராக இருக்கின்றார்.

ஆப்கான் கிரிக்கெட் அணியின் அண்மைய வெற்றிகளுக்கு முக்கிய காரணமாக இருக்கின்ற 19 வயதேயான ரஷித் கான் பல்வேறு நாடுகளின் உள்ளூர் T20 போட்டிகளிலும் அசத்தலான ஆட்டத்தினை காண்பித்து உலகெங்கும் தனக்கென இரசிகர்கள் பட்டாளத்தினையும் உருவாக்கி இருக்கின்றார்.

இப்படியாக பல்வேறு நாடுகளின் உள்ளூர் தொடர்களில் விளையாடி வரும் இவர், கடந்த 04 ஆம் திகதி ஆரம்பமான இங்கிலாந்தின் T20 பிளாஸ்ட் தொடரிலும் சசெக்ஸ் அணிக்காக விளையாடினார்.

T20 பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் ரஷீத்கான் உள்ளூர், சர்வதேச போட்டிகள் அடங்கலாக 116 T20 போட்டிகளில் ஆடி இதுவரையில் 166 விக்கெட்டுக்களை கைப்பற்றியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை தேசிய கால்பந்து அணியின் இறுதிக் குழாம் அறிவிப்பு

இலங்கை தேசிய கால்பந்து அணி எதிர்வரும் காலங்களில் விளையாடவுள்ள சர்வதேசப் போட்டிகளுக்காக 24 வீரர்கள் அடங்கிய இறுதிக் குழாமை இலங்கை கால்பந்து சம்மேளனம் (FFSL) அறிவித்துள்ளது.

தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ள இந்த குழாமில் ஏற்கனவே தேசிய அணியில் இடம்பெற்ற வீரர்களுடன் பல இளம் வீரர்களும் புதிதாக இணைக்கப்பட்டுள்ளனர். இதில், இலங்கை கடற்படை விளையாட்டுக் கழக அணி வீரர் சுபாஷ் மதுசான் இம்முறை தேசிய அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய அணிக்கு தெரிவுசெய்யப்பட்ட வீரர்களுக்கான பயிற்சிகள் கடந்த சில மாதங்களாக தேசிய அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் ரூமி பக்கீர் அலியின் தலைமையில் கொழும்பு பெத்தகான கால்பந்து பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றன. குறித்த பயிற்சிகளில் சிறந்த முறையில் செயற்பட்ட வீரர்களே தற்பொழுது இறுதிக் குழாமில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தவிர, பாடசாலை மாணவர்களான அசேல மதுஷான் (புனித ஜோசப் கல்லூரி) மற்றும் சபீர் ரசூனியா (புனித பேதுரு கல்லூரி) போன்ற இளம் வீரர்களும் கிழக்கு மாகாணத்தின் மொஹமட் முஸ்தாக்கும் தேசிய குழாமில் இணைக்கப்பட்டுள்ளனர்.



இலங்கை அணிக்கு கடந்த காலங்களில் தலைவராக செயற்பட்ட வரும், மாலைத்தீவுகளின் முன்னணி கழகமான ஈகல்ஸ் அணியின் கோல் காப்பாளருமான சுஜான் பெரேராவும் இக்குழா மில் உள்வாங்கப்பட்டுள்ளார்.

இலங்கை தேசிய அணி பல வருடங்களின் பின்னர் பங்கு கொள்ளும் முதலாவது சர்வதேசப் போட்டியாக இம்மாதம் 8ஆம் திகதி கொழும்பு குதிரைப் பந்தயத் திடல் அரங்கில் இடம்பெறவுள்ள லிதுவேனியா அணியுடனான நட்பு ரீதியிலான போட்டி அமையவுள்ளது.

குறித்த தொடரை அடுத்து ஜப்பான் பயணிக்கவுள்ள இலங்கை அணி அங்கு பயிற்சிப் போட்டிகளில் ஆடவுள்ளது. இவ்வருடம் செப்டம்பர் மாதம் பங்களாதேஷில் இடம்பெறவுள்ள தெற்காசிய கால்பந்து சம்மேளனத்தின் (SAFF) சுசுகி கிண்ண தொடருக்கான பயிற்சி ஆட்டங்களாகவே குறித்த போட்டிகள் அனைத்தும் அமையவுள்ளன.

### இலங்கை குழாம்

முன்கள வீரர்கள் - சபீர் ரசூனியா, சஜித் குமார, பசால் மொஹமட், சர்வான் ஜோஹர், அசேல மதுஷான்

மத்தியகள வீரர்கள் - மரியதாஸ் நிதர்சன், அபீல் மொஹமட், மொஹமட் ரிப்னாஸ், ஷதுர லக்ஷான், மொஹமட் ஹஸ்மீர், மொஹமட் முஸ்தாக், சசன்க ஜயசேகர

பின்கள வீரர்கள் - ஷரித்த ரத்னாயக்க, ஜூட் சுபன், ஆசிகுர் ரஹ்மான், உதய கீர்த்தி, சுபாஷ் மதுசான் (C), டக்சன் பியுஸ்லஸ், சமித் சுபாசன

கோல் காப்பாளர்கள்- கவீஷ் பெர்னாண்டோ, தனுஷ்க ராஜபக்ஷ, ராசிக் ரிஷாட், சுஜான் பெரேரா






சியம்பலாகஸ்கொடுவையில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 9A சித்திபெற்ற மாணவர்களை கௌரவிக்கும் விழா சமீபத்தில் இடம்பெற்றது. ஸலாமா கலாசார நிலையத்தில் நூரிய்யா மாதர் சங்கம் ஏற்பாடு செய்த இவ்விழாவில் பெருந்தொகையானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மாத்தளை சுகாதார வைத்திய அதிகாரி Dr. நிஸ்வான் அவர்களும், சிறப்பதிதியாக சட்டத்தரணி ஸபரா அப்துல்லாஹ் அவர்களும் கலந்துகொண்டதோடு, சிறப்புரையை ஹாதிய்யா கல்வி நிலையத்தின் அதிபர் அஷ்ஷெய்க் நவாஸ் (நளீமி) ஆற்றினார். நூரிய்யா மாதர் சங்கத் தலைவி ஹிதாயா ஆசிரியையின் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

Printed and Published by Focus Media (Pvt) Ltd. 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org